நமது செட்டிநாடு

மலர் 10 ✿ மணம் 01 ✿ ஸ்ரீ குரோதி ஆண்டு ✿ வைகாசி ✿ மே 2024 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 10 ✿ Issue 01 ✿ May 2024 ✿ Rs.25

காசியில் விஸ்வநாதர் கோவில் சார்பாக தினசரி 5000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் சேவையை கோவிலூர் மடாலயத்திற்கு வழங்கும் ஒப்புதல் கடிதத்தை கோவில் தலைமை செயல் அலுவலர் திரு. விஸ்வ பூஷன் மிஸ்ரா கோவிலூர் ஆதீனம் சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகளிடம் வழங்குகிறார்.

Chettinad
Sarvalokaa Education
International School

Activities that nurture
children
holistically

- Archery
- Theatre
- Dance
- Instrumental Music
- Taekwondo
- Chess
- Soccer

ADMISSIONS
OPEN

ENQUIRE
FOR
DETAILS

044 47429900
73 5872 1784
www.sarvalokaa.org

Cambridge Assessment
International Education

நமது
செட்டிநாடு

மலர் 10 மணம் 01 மே 2024
ஸ்ரீ குரோதி ஆண்டு வைகாசி மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்
ஆசிரியர் குழு:
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்
புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,
தட்டச்சு: முரு.மலர்விழி
வடிவமைப்பு: பி.தாமோதரன்
விளம்பரம் தொடர்புக்கு:
99622 43750

இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com
செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

நமது செட்டிநாடு மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
தொலைபேசி: 044–42951888

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

இதழ் சந்தா விவரம்

ஓராண்டு	ரூ.300
இரண்டாண்டு	ரூ.500
ஐந்தாண்டு	ரூ.1250

கரு.மணிகண்டன்,
மக்கள் தொடர்பு அலுவலர்
காரைக்குடி 86818 28284
(சந்தா செலுத்த, புதுப்பிக்க, விளம்பரம் செய்ய)

1) திரு.ஆர்எம்.வி.ராமசாமி
கோட்டையூர் : 94891 77006
2) திரு.MR.பழம் நாச்சியப்பன்
சென்னை : 97899 55526
3) திருமதி அரு.வள்ளிக்கண்ணு
திருச்சி : 75982 15797 / 99654 24996
4) திரு. ஆர்எம்.அழகப்பன்
கண்டரமாணிக்கம் : 98401 23931
5) திரு.விஆர்.பாலமுருகன்
கோவை : 97916 32421, 83000 51512
6) திருமதி வி.வள்ளியம்மை
கோவை : 88706 52054
7) திரு. A.R.முத்தழகப்பன்
சேலம் : 98421 82273
8) திரு. AL.தண்டாயுதபாணி
பெங்களூரு : 090368 62231

மின்னஞ்சல்
namadhuchettinad@gmail.com

தகிக்கும் வெயில் தற்காப்பு வழிகள்

கோடை காலத்தின் உச்சகட்டம் அக்னி நட்சத்திரம் என்று அழைக்கப்படும் கத்தரி வெயில் காலமாகும். மே மாதம், 4ந் தேதி முதல் – மே மாதம், 28ந் தேதி வரையில் உள்ள இடைப்பட்ட நாட்களை அக்னி நட்சத்திரம் என்று பொதுவாக குறிப்பிடுவர். இந்தக் காலங்களில் சூரியனின் கதிர்கள் நேரடியாக பூமியின் மீது விழுவதால் வெயிலின் தாக்கம் கடுமையாக இருக்கும். அனல் காற்று வீசி, வெயிலின் சுட்டெரித்தல் இயல்பைவிட 3 டிகிரி வெப்பம் அதிகரிக்கும் என்று வானிலை ஆய்வு மையங்கள் தெரிவிக்கின்றன. ஆனாலும் இந்த நாட்களுக்கு முன்னரும் பின்னரும் கூட பல நாட்கள் வெயிலின் தாக்கம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. காலநிலை மாற்றத்தால் வெயிலின் தாக்கமும் அதிகமாகவே உள்ளது. இதனால் வெப்ப அலைகள் அதிக அளவில் உள்ளன. கடும் வெப்ப அலைகளால் பேராபத்தும், உயிர் சேதங்களும், சரும நோய்களும், மனித உடல் நல பாதிப்புகளும், மன நல பாதிப்புகளும் பெருமளவில் ஏற்பட்டு வருகின்றன. இயற்கையால் ஏற்படும் பேரழிவுகளை யாராலும் தடுக்க முடியாது என்றாலும் பாதுகாப்பான முறைகளை மேற்கொள்ளும் போது இழப்பை பெருமளவில் குறைக்க முடியும் என்பதை உணர்ந்து செயல்படுவது நமக்கு நன்மை தருவதாக இருக்கும். குறிப்பாக தகிக்கும் வெப்பத்திலிருந்து தற்காத்துக் கொள்ள பாதுகாப்பு வழிகளாக... அடிக்கடி போதுமான தண்ணீர் பருகுதல், வெப்பம் தாக்காத கதவுகளை அமைத்தல், எலுமிச்சை சாறு, குளிர்ந்த நீர், மோர், இளநீர், பழரசங்கள் அடிக்கடி பருகுதல், வெப்பத்தை தாங்கும் கண்ணாடி, காலணிகள் அணிதல், அவசியத் தேவை இல்லாமல் வெளியில் செல்வதை தவிர்த்தல், வெளியில் செல்லும் போது வெயிலின் நேரடி தாக்கத்தில் இருந்து விடுபட உடலை முழுவதுமாக மறைக்கும் வகையில் ஆடைகள் அணிதல், குடை பயன்படுத்தல் அல்லது தலைக்கு தொப்பி அணிந்து கொள்ளுதல், குளிர்ச்சியான காற்றோட்டம் நிறைந்த இடத்தில் ஓய்வு எடுத்தல், பருத்தி ஆடைகள் அணிதல், குடிப்பழக்கத்தினை தவிர்த்தல், தண்ணீர் வசதி இருந்தால் தினசரி இரண்டு, மூன்று முறைகள் அதிக நீர் செலவில்லாதவாறு குளிர்ந்த நீரில் குளித்தல் ஆகியவற்றைக் கடைபிடிக்கலாம். கோடை காலம் மனிதர்களுக்கு மட்டும் சிரமங்களை வழங்கவில்லை. கால்நடைகளுக்கும் மிகுந்த சிரமத்தைக் கொடுக்கிறது. ஆடு, மாடு, நாய் உள்ளிட்ட கால்நடைகள் குடிக்க நீரின்றி சிரமப்படும். இதனைக் கருத்தில் கொண்டு கால்நடைகளின் தாகம் தீர்க்க, பள்ளத்தூர் பேரூராட்சி சார்பில் ஊர்ப் பொதுமக்களிடம் நன்கொடைகள் பெற்று ஊர் முழுவதும் 100 குடிநீர் தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. இது போன்ற நடவடிக்கைகளை பிற ஊர்களிலும் மேற்கொள்ளலாம். வெயில் தாக்கத்தை நிரந்தரமாகத் தடுக்க அதிக அளவில் மரங்களை நடுவோம் மழை பெறுவோம் இயற்கை மற்றும் சுற்று சூழலைக் காப்போம்...

SJP TRANSPORTS

(TRANSPORTS CONTRACTOR
&
FLEET OWNER)

BULK DRY FLY ASH TRANSPORTER AND SUPPLIER

NO. 6/291,
TRICHY ROAD,
NAMAKKAL 637 001.

CONTACT NO:
97904- 92366

உள்ளே...

நகரத்தார் திருப்பணிகள்..... 06

108 திவ்ய தேசங்கள் ஒரு முன்னோட்டம் 08

கண்ணகி அம்மன் கோவில் சென்று வந்த கதை 10

வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க... 12

தனித்துவமாக இருக்கையிலேயே செய்துகொள்ளுங்கள் 14

இராம காவியம் 16

தொழில் தொடங்கலாம் வாங்க 19

திருமந்திரச் சுவை 22

மனம் பணம் மந்திரம் 23

இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு 26

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 28

நகரத்தார் நலன் அமைப்பின் முக்கியமான வித்து முத்தாத்தாள் முத்துகுமார் 30

இயற்றமிழ் இயற்பியல் வல்லுநர் மெ.மெய்யப்பன் 33

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன் 37

நகரத்தார் சிகரத்தார் 39

கா... கா! 42

நமது செட்டிநாடு டிஜிட்டல் இதழ் வேண்டுவோர் கவனத்திற்கு 43

சந்தா படிவம்!..... 45

Vees Star™
Diamonds
& Jewelry

ஸ்ரீ அடைக்காத்தாள் பெரியகருப்பண்ண சாமி துணை

GIA
CERTIFIED
SOLITAIRE

செல்வ வளம் தரும்

அக்ஷயதிரிதியை

நல்வாழ்த்துக்கள்

S. விஜயகுமார் V. விசாலாட்சி
பள்ளத்தூர்

Manufacturers, Wholesalers & Retailers

W 182 NORTH MAIN ROAD,
ANNA NAGAR WEST CHENNAI

Mob: 9383007477 / 044 4553 6003
web: www.vstardiamonds.com

SURAT | CHENNAI | MADURAI

சென்ற இதழ் தொடர்ச்சி

நகரத்தார் திருப்பணிகள்

சொ.சொ.மீ.சுந்தரம்

79) திருக்குண்டையூர் (Pincode - 610 204):

திருவாரூர் – எட்டிகுடி சாலையில் திருக்குவளைக்கு அருகில் உள்ள திருத்தலம் திருக்குண்டையூர். சுந்தரருக்காகச் சிவபெருமான் நெல் மலை கொடுத்த இத்தலம் ஏழாம் திருமுறையில் சுந்தரரால் பாடப்பெற்ற வைப்புத் தலமாகும். இங்குள்ள சிவன் கோயில் தேவகோட்டை பெரி.செ.குப்பான் செட்டியார், கரு.கி. சொர்ணநாதன் செட்டியார் ஆகியோரால் திருப்பணி செய்யப்பெற்று, குரோதன ஆண்டு, ஆவணி மாதம், இருபதாம் நாள் (04.09.1925)-ல் திருக்குட நன்னீராட்டு நடந்தது. திருப்பணிச் செலவு ரூ.1,00,000/- ஆகும்.

80) மறைக்காடு (Pincode - 614 810):

மன்னார்குடி, நாகைப்பட்டினம், திருவாரூர் ஆகிய ஊர்களுக்கு அருகிலுள்ள இத்தலம், இப்பொழுது வேதாரண்யம் என்று அழைக்கப் பெறுகிறது. முதல் ஏழு திருமுறைகளிலும் பாடப் பெற்ற இத்தலம் சப்த விடங்கத் தலமாகும். விளக்கைத் தூண்டிய எலியை, மாவலிச் சக்கரவர்த்தியாகப் பிறக்குமாறு அருள் செய்த இறைவன் பெயர் மறைக்காட்டு நாதர். இறைவி பெயர் யாழைப் பழித்த மொழியாள். வேதங்கள் அடைத்த கதவைத் திறக்கவும், அடைக்கவும் அப்பரும், சம்பந்தரும் பாடிய இத்தலம் சுந்தரராலும், சேரமான் பெருமானாலும் பாடப் பெற்றது. "வேதாரண்யம் விளக்கழகு" என்பது பழமொழி. அப்பர் "தூண்டு சுடரனைய சோதி கண்டாய்" என்று பாடுகிறார். பரஞ்சோதி முனிவர், தாயுமானவர் ஆகியோர் அவதரித்த தலம். நவக்கிரகங்கள் இங்கு வரிசையாக நிற்கின்றன. அகத்தியருக்குத் திருமணக் காட்சியருளிய மறைக்காட்டுறையும் மணாளர், சிவலிங்கத் திருமேனிக்குப் பின்னால் காட்சியளிக்கிறார்.

இத்தலத்தில் உள்ள திருக்கோயில் ஒக்கூர் வீர.ராம. நா.ராம. இராமநாதன் செட்டியாரால் எழுபதாயிரம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப் பெற்றது. பாகனேரி பெரி. அழ.மு. குடும்பத்தார் ஒன்றரை லட்ச ரூபாய் செலவில் அன்னசத்திரம் கட்டினார்கள். பிறபணிகள் பின்வருமாறு:-

1) தேவாரப் பாடசாலை : ஒக்கூர் – சி.கரு.சித. சிந்தாமணி செட்டியார்

2) பசுமடங்கள் : பள்ளத்தூர் – அழ.முரு.அழ.சொ., பள்ளத்தூர் – அழ.ராம.சொ.அ., காரைக்குடி – ந.ப.ராம.க. இராமசாமி செட்டியார்.

3) நந்தவனம் : ஒக்கூர் – சி.கரு.சித. சிந்தாமணி செட்டியார், கோட்டையூர் – நா.ராம.நா. நாகப்ப செட்டியார், காரைக்குடி – செ.அ.ராம.அழ. அருணாசலம் செட்டியார், ஒக்கூர் – வீர.ராம.நா. இராமநாதன் செட்டியார்.

4) குருபூஜை மடம் : பள்ளத்தூர் – ராம.அரு.ராம. அருணாசலம் செட்டியார்.

5) தண்ணீர்ப் பந்தல்: பலவான்குடி – வெ.சு. முத்துவள்ளியப்ப செட்டியார், காரைக்குடி – லெ.வீர. வீரப்ப செட்டியார், நேமத்தான்பட்டி – சி.வீ.நா. பழனியப்ப செட்டியார்.

81) திரு அகத்தியான் பள்ளி (Pincode - 614 810):

வேதாரண்யத்திலிருந்து கோடிக்கரை செல்லும் வழியில் உள்ள இத்தலம் சம்பந்தர் பாடல் பெற்றது. இப்பொழுது அகத்தியர் கோயில் என்றழைக்கப்படுகிறது. அகத்தியர் இறைவன் திருமணக் கோலம் காணத் தவம் செய்த பதி இது. இறைவர் அகத்தீசர். இறைவி மங்கை நாயகி. சுவாமி கிழக்கு நோக்கியும், அம்பாள் மேற்கு நோக்கியும் காட்சியளிக்கின்றனர். இத்தலத் திருப்பணியாளர்கள்

1) தேவகோட்டை – மெ.அரு.நா. இராமநாதன் செட்டியார் மற்றும் தேவகோட்டை – மெ.அரு.அரு. அருணாசலம் செட்டியார் – ரூ.2,00,000/-

2) தேவகோட்டை – ராம.அரு.அரு. – ரூ.7,00,000/-

3) தேவகோட்டை - பழ. சோம. - ரூ.30,000/-.

தேவகோட்டை பழ. சோம. குடும்பத்தினர் ஸ்ரீமுக ஆண்டு, ஆனி மாதம், 23-ஆம் நாள் (06.07.1933) முதல் திருக்குட நன்னீராட்டும், பதினைந்தாயிரம் செலவில் பவ ஆண்டு, ஆனி மாதம், 24-ஆம் நாள் (08.07.1934) இரண்டாவது திருக்குட நன்னீராட்டும் செய்தனர்.

82) மேலைத் திருக்காட்டுப்பள்ளி (Pincode - 613 104):

திருவையாறு - கல்லணை சாலையில் உள்ள இத்தலத்தில் இறைவன் பெயர் தீயாடியப்பர். இறைவி பெயர் சௌந்தர நாயகி. இது அக்னி வழிபட்ட தலம். அப்பரும், சம்பந்தரும் பாடிய இக்கோயிலில் நவக்கிரகங்கள் எல்லாம் சூரியனையே நோக்கியுள்ளன. ஒரு காலத்தில் சமணம் வாழ்ந்ததால் இது பள்ளி எனப்படுகிறது. மூலவர் நான்கு படிகள் பூமியில் தாழ உள்ளார். படிகளில் இறங்கிச் சுற்றி வரலாம். இத்தலத்தில் தேவகோட்டை - லெ.அரு.லெ. குடும்பத்தார் இருபத்தைந்தாயிரம் ரூபாய் செலவில் திருப்பணி செய்துள்ளனர்.

83) திருவிளநகர் (Pincode - 609 305):

மயிலாடுதுறைக்கு அருகில் பொறையாறு சாலையில் இத்தலம் உள்ளது. அருள்வித்தன் என்ற அந்தணன் இறைவனுக்காக மாலைகள் கட்டி எடுத்து வந்த போது ஆற்றில் வெள்ளம் பெருகி அவன் வாயளவுக்கு வந்த போது அவன் மலர்க் கூடையைத் தலைமேல் தாங்கி உறுதியோடும், பக்தியோடும் நீந்தி வந்தான். இறைவன் அவனுக்குத் துறை காட்டிக் கரையேறச் செய்தார். இதுபோலவே திருஞானசம்பந்தருக்கும் இறைவன் வழிகாட்டியதால் அப்பெருமானுக்குத் துறைகாட்டும் வள்ளம் என்று பெயர் வந்தது. அம்மையின் பெயர் வேயுறுதோளி. சம்பந்தர் பாடிய இத்தலத்தில் தேவகோட்டை - ராம.அரு.அரு. குடும்பத்தார் இரண்டு லட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்துள்ளனர்.

84) சிவபுரம் (Pincode - 612 401):

கும்பகோணம் - மன்னார்குடிச் சாலையில் சாக்கோட்டைக்கு அருகில் உள்ள இத்தலம் திருமால், வெள்ளைப் பன்றி வடிவில் சிவபெருமானைப் பூசித்த திருத்தலம். இங்குள்ள பட்டினத்து விநாயகர் கோயிலில் அமர்ந்த நிலையில் பட்டினத்தார் சிலை உள்ளது. இங்கு அவருடைய தமக்கை வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இறைவன் பெயர் சிவகுருநாதர். இறைவி சிங்காரவல்லி. இத்தலத்தில் பூமிக்கு அடியில் ஓரடிக்கு ஒரு சிவலிங்கம் இருப்பதால் திருஞானசம்பந்தர் இத்தலத்தில் நடக்காமல் அங்கப் பிரதட்சணம் செய்து ஊர் எல்லையில் நின்று பாடியதாகக் கூறப்படுகிறது. இக்கோயிலில் கொடிமரம் இல்லை. பலிபீடம் மட்டும் உண்டு. இங்குள்ள நடராஜர் திருமேனி மிக அழகாக இருந்ததால் அமெரிக்காவுக்குக் கடத்தப்பட்டு, இப்பொழுது மீண்டும் திரும்பி வந்து விட்டது. இங்குள்ள வயிரவரை வழிபட்டு, சிவபெருமானை அங்கப் பிரதட்சணம் செய்தால் வழக்குகளில் வெற்றி கிடைக்கும். தீராத நோய் தீரும். அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர் மூவரும் பாடிய இக்கோயிலைத் தேவகோட்டை - சேவு. லெ.லெ. குடும்பத்தார் இரண்டு லட்ச ரூபாய் செலவழித்தக் கற்கோயில் ஆக்கினார்கள்.

85) கீழ்வேளூர் (Pincode - 611 104):

இப்பொழுது கீவளூர் என்று அழைக்கப்படும் இத்தலம் திருவாரூர் - நாகைப்பட்டினம் பேருந்துச் சாலையில் சிக்கலுக்கு அருகில் உள்ளது. இது அகத்தியருக்கு இறைவன் வலது பாத தரிசனம் காட்டிய தலமாகும். அப்பரும், சம்பந்தரும் பாடிய இத்தலத்தில் இறைவன் கேடிலியப்பர். இறைவி வனமுலைநாயகி. இது முருகன் வழிபட்ட பதி. அவருக்கு இடையூறு வராமல் ஐந்து திக்குகளிலும் காவல் புரிந்த காளிக்கு அஞ்சு வட்டத்தம்மன் என்று பெயர். தேவகோட்டை - மெ.ராம. அண்ணாமலை செட்டியார் முப்பத்தைந்தாயிரம் ரூபாய் செலவில் இக்கோயிலில் திருப்பணி செய்தார்.

86) திருக்கன்றாப்பூர் (Pincode - 610 207):

இத்தலம் இப்பொழுது கோயில் கண்ணாப்பூர் என்று அழைக்கப்படுகிறது. திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் மாவூர் கூட்டு ரோடு வந்து அங்குப் பிரியும் சாலையில் மருதூர் வந்து கோயில் கண்ணாப்பூரை அடையலாம். வைணவனுக்கு வாழ்க்கைப்பட்ட சைவப்பெண் சிவலிங்க வழிபாடு செய்தாள். அவள் கணவன் சிவலிங்கத்தைக் கிணற்றில் போட்டுவிட்டான். அவள் கன்றுக்குட்டியைக் கட்டியிருந்த முளையையே சிவனாக எண்ணி வழிபட்டாள். அவள் கணவன் அந்த முளையைக் கோடரியால் வெட்ட இறைவன் வெளிப்பட்டு அருள் புரிந்தார். எனவே, இறைவன் நடுதறிநாதர். இறைவி மாதுமையம்மை. இடும்பன் வழிபட்ட இத்தலம் அப்பர் பாடல் பெற்றது. இவ்வூர் நிலங்கள் அனைத்தும் நடுதறிநாதர் பெயரிலேயே பட்டாவாக உள்ளன. இது அக்கால மக்களின் இறை நம்பிக்கைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். தேவகோட்டை - முத்து க.அ.ராம. அண்ணாமலை செட்டியார் முப்பதாயிரம் செலவு செய்து திருப்பணி செய்தார். இவருடைய நைவேத்தியக் கட்டளையிலிருந்து பக்தர்களுக்கு அன்னதானம் அளிக்கப்படுகிறது.

(திருப்பணிகள் தொடரும்)

108 திவ்ய தேசங்கள் ஒரு முன்னோட்டம்

நா. சௌரிராஜன், கோட்டையூர்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

எனத் தொடங்கி வள்ளுவர் திருக்குறள் எழுதத் தொடங்கினார். அகர முதல எழுத்தே போற்றி, ஆதி பகவனே ஆண்டவா போற்றி, ஆனை முகத்தோனே விநாயகா போற்றி - என்று நானும் அந்த முழுமுதற் கடவுளை வணங்கி வேண்டி. அழகுத் தமிழில் அனைவரும் புரிந்து கொள்ளும்படியான எளிய நடையில் இந்தத் தொடரை எழுத என்னைத் தூண்டிய கண்ணபுரத்துத்தாயாரான மகாலெட்சுமிக்கும், கண்ணபுரத்துக் கண்மணியான சௌரிராஜப் பெருமாளுக்கும் இதய நன்றியை முதலில் காணிக்கையாகச் செலுத்தி இந்த ஆன்மிகத் தொடரை எழுத முற்படுகிறேன்.

ஒருமுறை திருமாலை வழிபட வைகுண்டம் சென்ற பிரம்ம தேவர், திருமாலைப் பார்த்து, "வைகுண்டம் தவிர வேறு எங்கெல்லாம் நீங்கள் வாசம் செய்கிறீர்?" எனக் கேட்டதற்குத் திருமால், "நான் திவ்ய தேசங்களில் எல்லாம் நித்யவாசம்" செய்வதாக அவரே திருவாய் மலர்ந்தருளிய இடங்கள்தான் திவ்யதேசங்கள் எனப்படுவது.

திவ்யம் என்றால் தெய்வீகமான, உயர்வான, மிகப் புனிதமான எனப் பொருள். அதே போல, தேசம் என்றால், ஸ்தலம், அதாவது இடம் எனப் பொருள். தெய்வீகத் தன்மை கொண்ட உயர்ந்த புண்ணிய இடங்களே திவ்ய தேசங்கள். இந்து மதத்தில் 108 என்ற எண் மிகவும் சிறப்பானதாகப், புனிதமானதாகக் கருதப்படுகிறது. பெருமானின் திவ்ய தேசங்களாகக் கருதப்பட்ட 108-இல் பெருமாளும் தாயாரும் நித்ய வாசம் புரிகிறார்கள். இந்த 108-இல், 105 இந்தியத் திருநாட்டிலும், ஒன்று நேபாளத்திலும், 2 விண்ணுலகிலும் இருக்கின்றன.

மண் உலகில் வாழும் காலத்தில் 106 திவ்ய தேசங்களைத் தரிசித்தவர்களுக்கு, அவர்கள் வாழும் காலம் முடிந்த பிறகு, மறுபிறவி என்பது கிடையாது என்றும், அவர்கள் விண்ணுலகு செல்லும் போது கடைசி 2 திவ்ய தேசங்களையும் பெருமாள் காட்சி தந்து அவர்களுக்கு முக்தி அளிப்பார் என்பது ஐதீகம்.

பெருமாளைத் தமிழில் போற்றிப்பாடி அவரது திருவருளைப் பெற்று, பெருமாள் சேவைக்காகவே தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்களை ஆழ்வார்கள் என்கிறோம். ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்கள் பாடிய பாசுரங்கள் நாலாயிரத் திவ்ய பிரபந்தங்கள் என அழைக்கப்படுகிறது. அதில் இடம் பெற்ற சிறப்பு மிக்க வைணவத் தலங்கள் திவ்யதேசம் எனவும், திவ்ய தேசங்களைப் பற்றிய பாடல்கள் மங்களாசாசனம் எனவும் அழைக்கப்படுகிறது. அப்படி மங்களாசாசனம் பெற்ற திருத்தலங்கள் 108 ஆகும். அவையே 108 திவ்ய தேசங்கள் எனப்படுகின்றன.

உலகத்தில் ஆன்மாக்கள் தம்தம் கரும வினைகளின்படி தோன்றிப் பிறவிகளைக் கொண்டு வாழ்கின்றன. மானிடப் பிறப்புக்கள் தனிச் சிறப்புகள் உடையதாகின்றன. மனிதர்களுக்குக் கடவுள் தன் விருப்புரிமை அதிகாரம் கொடுத்து அதன்படி அவர்கள் இயங்குகிறார்கள். அவர்களால் அதர்மம் அதிகமாகக் கடைப்பிடிக்கப்பட்டு உலகில் அதர்மங்கள் தலைதூக்கிய போது இறைவனே எழுந்தருளிப் பல அற்புதச் செயல்களைப் புரிந்து மண் உயிர்களைக் கடைத்தேறச் செய்கிறான். அதன் வெளிப்பாடுகளே ஆங்காங்கே கோயில்களாக விளங்குவன. நாம் பேரின்ப நிலையை அடைய இத்திருக்கோயில்களே காரணமாக விளங்குகின்றன. இறைவனால் விரும்பி ஆட்கொள்ளப்பட்ட புண்ணிய ஆத்மாக்கள் ஆழ்வார்கள் என்ற பெயரில் தோன்றி மக்கள் நற்கதி பெறும் வகையில் வழிகாட்டி உள்ளார்கள்.

மனிதப் பிறவி என்பது தற்காலிகமானது. ஆனால், இதன் மூலம் நாம் வாழ்வின் மிக உயர்ந்த நிலையை அடையலாம். எங்கும் பரவியுள்ள முழுமுதற் கடவுளை உணர்வதே அந்தப் பக்குவ நிலை. அரிது, அரிது மானிடப் பிறவி! மனிதராய்ப் பிறத்தல் அரிதினும் அரிது. இந்த அரிய பிறவியைப் பெற்றதன் பயனே ஆண்டவனை அறிய முயலுவதுதான்! அறிய முயன்றால் அடுத்து அவனை அடைந்து விடலாம். இதரப் பிறவிகளில் இது சாத்தியம் அல்ல. படிப்படியான பரிணாம வளர்ச்சி மூலம் நாம் இந்த மனிதப் பிறவியை எட்டியுள்ளோம். எனவே, இது ஒரு அரிய

பொன்னான வாய்ப்பு ஆகும். இதைத் தவற விடக்கூடாது. 85 லட்சம் உயிரினங்கள். 85 லட்சம் பிறவிகள் என்றெல்லாம் புராணங்களில் கூறப்படுகின்றன. ஆக அத்தனையும் கடந்து – இயற்கை விதிகளின்படி இறுதியாக நமக்கு மனித உடல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, ஆன்மிக வாழ்வை உயர்த்தி உண்மையான நமது இல்லமான "வீடு" என்று வள்ளுவர் சொன்ன கடவுளின் லோகத்திற்குச் செல்ல வேண்டும். ஆன்மிகம் என்று இங்கு நாம் குறிப்பிடுவது தூய்மையான ஆன்மிகம். (மாசு படிந்த, படோடமிக்க, பொய்யான வெளிப்பகட்டு ஆன்மிகம் அல்ல) வாழ்வின் இறுதிக் குறிக்கோள் – விஷ்ணு: விஷ்ணுவைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பு இந்த மனிதப் பிறவி.

பிறப்பு, இறப்பு எனும் சுழற்சி தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். "நீ என்னிடம் வந்து அடையும் போது இந்தத் துன்பம் நிறைந்த உலகுக்கு – அதாவது பிறப்பு இறப்பு என்ற நிலைக்கு, – வரத் தேவை இல்லை" என்கிறார். பகவான் கிருஷ்ணர். நாம் இப்பிறவியில் செய்யும் செயல்களே, பாவ புண்ணியங்களே நமது அடுத்த பிறவியைத் தீர்மானிக்கின்றன. நாம் அடுத்த பிறவியில் மனித உடலைப் பெறுவோம் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அது நமது செயல்களைப் பொறுத்தது. தேவர் போல இருந்து புண்ணிய காரியங்களைச் செய்தால் தேவர் உடல் பெறுவோம். நாய் போலச் செயல்கள் புரிந்தால், நாயின் உடல் பெறுவோம். மரணத் தருவாயில் நமது தலையெழுத்து நமது கையில் இல்லை. அது இயற்கையின் கையில் உள்ளது.

மரணம் என்பது இன்றுவரை ஒரே புதிராகவே உள்ளது. மரணத்தைப் பற்றி ஆராய்வதை விட, அதை வென்று அறுதியான இறுதி உண்மையை அடைவதே முக்கியம். அது எப்படி? நம்மிடம் தரப்பட்ட வாழ்க்கையை உரிய முறையில் வாழ்வதே அதற்கு வழி என்கிறது கட உபநிஷதம். உடல் வீழும் முன்பே, அதாவது வாழும் காலத்திலேயே மரணத்தை வெல்வது என்றால் என்ன? என்பதை ஆதிசங்கரர் விளக்குகிறார். ஆசையோ, வெறுப்போ, பொறாமையோ, தீயகுணங்களோ அற்றவனாகத் தூய்மையாக வாழும் போதே – பிறவியற்றுப் போவதால் மரணத்தை வென்ற வாழ்க்கை ஆகிறது.

ஜீவாத்மா உலகின் பிற காரியங்களுக்காக வந்தது அன்று. பரமாத்மாவோடு ஐக்கியம் அடையவதற்கே இந்த ஜீவாத்மா உலகில் பயணம் செய்கிறது. ஐக்கியம் என்றால் சரணாகதி என்கிறது வைணவம். "என்னை அறிபவன் பிறப்பு இறப்பில் இருந்து விடுதலை பெறுகிறான்" என்கிறார் பகவத் கீதையில் கிருஷ்ணர்.

மனிதராய்ப் பிறந்த நாம் மோட்சம் அடையத் தகுதியும், சக்தியும் பெற்றவர்களே! அதற்கு நம் செய்கைகள் தெய்வீகமானவைகளாக இருக்க வேண்டும். நாம் அத்தகு மோட்சம் எனும் முக்தி பெற்றிட இந்தத் திவ்ய தேசங்கள் வழிகாட்டியாகத் திகழ்ந்து, நம்மை இறைவனோடு இரண்டரக் கலக்க வைக்கின்றன.

இசைக்கு இறைவன் கூட மயங்குபவனே! தமிழில் இசை இணைந்தே கலந்து உள்ளது! முத்தமிழ் அல்லவா! அது தெய்வீக மொழி! அதில் பா இசைத்தால் அது தமிழ் அமுது! அந்தப் பாசுரங்களை இறைவனே ரசித்துச் சுவைத்து மெய்மறந்து போகிறார். ஆழ்வார்களின் பாடல்களில் தமிழ் விளையாடுகிறது! தம்மைப் பாடாமல் விட்டுச் சென்ற ஆழ்வாரை ஓடிப் போய்க் கேட்டுப் பாசுரம் வாங்கி வந்தார் திருநின்றவூர் பெருமாள்!

108 திவ்ய தேசங்களில், மிக அதிக அளவில் 40 திவ்ய தேசங்கள் சோழ நாட்டிலும், 18 பாண்டிய நாட்டிலும், 22 தொண்டை நாட்டிலும், நடுநாட்டில் 2–ம், மலைநாட்டில் 13–ம், வடநாட்டில் 11–ம் ஆக 106–ம், இறுதியான இரு திவ்ய தேசங்கள் நிலவுலகில் காண இயலாத திவ்ய தேசங்களாக விண்ணுலகிலும் உள்ளன. இந்தத் திவ்ய தேசங்களில் 67–இல் எம்பெருமான் நின்ற திருக்கோலத்திலும், 17–இல் அமர்ந்த திருக்கோலத்திலும், 24–இல் (கிடந்த) சயனத் திருக்கோலத்திலும் காட்சி தருகிறார்.

இந்த முன்னுரையைப் படித்த நாம், இப்போது திவ்ய தேசங்களைக் காணப் புறப்படுவோம். நமது பயணம் இனிதாக அமைந்து, நலமாக நிறைவு பெற, திருப்பாற்கடல் லட்சுமி நாராயணப் பெருமாளையும், திருமகளையும் வேண்டிக் கொண்டு, முதல் திவ்ய தேசமாகக் கருதப்படும் பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கத்தைக் காண முதலில் செல்வோம்.

பள்ளிகொண்ட ரங்கநாதருக்கு அதிகாலை உற்சவ நிகழ்வு என்பது விஸ்வரூப தரிசனம். இதற்காகக் கொள்ளிடம் ஆற்றில் இருந்து பெருமாளுக்கு என்று தனியாக அமைந்துள்ள ஆழ்துளைக் கிணற்றில் இருந்து குடத்தில் தீர்த்தம் எடுக்கப்பட்டு அதை ஒரு யானை மீது வைத்துக் கொண்டு வருகிறார்கள். தீர்த்தம் நிரம்பிய குடத்துடன் அதை ஏந்தித் தாங்கி வரும் யானை "ரெங்கா... ரெங்கா..." எனக் குரல் எழுப்பியபடி கோயிலுக்குள் நுழைகிறது. பிறகு நடக்கும் விஸ்வரூப தரிசனத்தில் எம்பெருமாள் பசுவிற்கு முதலில் காட்சி தருகிறார். இந்த விஸ்வரூப தரிசனம் என்பது கண்கொள்ளாக் காட்சி. இதை முதலில் கண்டு மகிழ்ந்து, நாம் ஸ்ரீரெங்கநாதரைத் தரிசிக்கக் கோயிலுக்குள் செல்வோம்.

(தொடரும்)

கண்ணகி அம்மன்

கோவில் சென்று வந்த கதை

சித்ரா பௌர்ணமி அன்றுதான் கண்ணகி அம்மன் கோவிலுக்குச் செல்ல முடியும். மற்ற நாளில் வாய்ப்பில்லை. சித்ரா பௌர்ணமி அன்று,கண்ணகி கோவில் போகலாமென நண்பர்களுக்குச் சொல்லியிருந்தேன். வருவதாகச் சொன்னவர்களும், வரமுயற்சிக்கிறேன் என்றவர்களும் வராததால்,நான் மட்டும் பயணித்தேன்!

சித்ரா பௌர்ணமி அன்று கள்ளழகர் வைகையாற்றில் எழுந்தருளுவதால், தல்லாகுளம், கோரிப்பாளையம் பகுதிகள், கள்ளழகர் பக்தர்களின் அருள் ஆவேசக் கட்டுப்பாட்டில் இருந்தது! ஒருவழியாக அங்கிருந்து நீந்திக்கரையேறி, மாட்டுத்தாவணி மையப்பேருந்து நிலையத்தைக் காலை சுமார் நான்கரை மணியளவில் அடைந்தேன். ஆரப்பாளையம் செல்ல வேண்டிய பேருந்தில் ஏறினேன். ஒட்டு மொத்த மதுரையையும் சுற்றிக் காண்பித்து ஒருவழியாக ஆரப்பாளையம் வந்தது பேருந்து! அங்கே ஒரு ஆறு மணிவரை, யாராவது நண்பர்கள் வருகிறார்களா எனக் காத்திருந்து, யாரும் வராததால், தேனி பஸ்ஸில் ஏறி, தேனி வந்து, காலை உணவை முடித்துக்கொண்டு, பஸ் பிடித்து குமுளி வந்து சேர்ந்தேன்!

இராம. இராமனாதன்
காரைக்குடி

நம் தமிழக குமுளியில் இருந்து, ஒரு கி.மீ. நடந்து,கேரள குமுளி வந்து, கண்ணகி கோவிலுக்குப் பயணிக்கும் இடத்தை சுமார் ஒன்பது மணியளவில் வந்தடைந்தேன்!அங்கே சுமார் இரண்டு கி.மீ.க்குமேல், கியூ வரிசை இருந்தது! எல்லாம் ஈசன்செயல் என, நானும் வரிசையில் சங்கமமானேன்! ஜீப்புகள் மூலம்தான் பயணிக்க முடியும். ஒன்பது நபர்கள் ஒரு ஜீப்பிற்கு என்ற அளவில் பயணம் இருந்தது. கட்டணம், போக ₹150/-, வர ₹150/-. வரிசையில் நின்றவர்களுக்கு சில அறக்கட்டளை அமைப்புகள் குடிநீர் வழங்கினார்கள்! மற்றபடி உணவருந்த அங்கு எந்த வாய்ப்பும் இல்லை! இதனிடையே, தேசியச் செட்டியார் பேரவை என்ற பெயர் மற்றும் கண்ணகி கொடியோடு ஒரு கார் வரிசையில் நின்றவர்களை வீடியோ எடுத்தது!விசாரித்தேன்; ஜெகன்நாத் மிஸ்ரா என்பவர் அதன் தலைவர் என்றார்கள்! கண்ணகி கோவிலுக்காக இவர்கள் என்ன செய்கிறார்கள் எனத் தெரியவில்லை! மண் மலைகளாக இருப்பதால், ஜீப்பில் சவாரி செய்யும்போது பலத்த புழுதிப் படலம் சூழ்கிறது! முகக்கவசம், மாஸ்க் அணிந்துகொள்வது நல்லது! ஒரு வழியாக மதியம் மூன்று மணியளவில் கோவில் வளாகத்தை அடைந்தேன்!

கண்ணில் இரத்தம் வராத குறைதான்! கண்ணகி கோவில் வளாகம்,உடைந்த கற்களின் குவியலாக, குட்டிச் சுவராக இருந்தது! மங்கல தேவி, கண்ணகி, சிவன், பிள்ளையார், கருப்புசாமி எனப்பல சன்னதிகள் இருந்தன. எல்லாம் மகாபலிபுரம் கடற்கரைக் கோவில் பாணியில், கற்குவியல்களாக இருந்தன! பழைய கண்ணகி சிலை இப்போது அங்கு இல்லை எனவும்,புதிய சிலை இருப்பதாகவும் சொன்னார்கள். அதுபோல் மங்கல தேவி, சிவன், பிள்ளையார் எல்லாம் புதிதாக அமைக்கப்பட்டவை என்றார்கள்.கம்பத்தைச் சார்ந்த ஓரிரு அறக்கட்டளைகள், அங்கே வருகிற அனைவருக்கும் அன்னதானம் மற்றும் குடிநீர் வழங்கி வருகிறார்கள்! இரு மாநில அரசுகளும் மருத்துவ வசதிகளைச் செய்துள்ளன!

அந்தந்த சன்னிதானங்களில், பெயர்ப்பலகையாவது வைத்திருக்கலாம்! என்ன சாமி எனக் கேட்டுக் கும்பிட வேண்டியிருக்கிறது!

கண்ணகி கோவில் வளாகமே, ஒருவித அமானுஷ்ய சூழலில் இருப்பதை உணர முடிகிறது!மங்கல தேவி மற்றும் கண்ணகி சன்னிதானங்களில் ஒருவித பரவச நிலையை நான்

உணர்ந்தேன்! மிகப் பெரியதொரு அருட்சக்தியாக கண்ணகி அங்கே விளங்குகிறாள் என்பதில் துளியும் ஐயமில்லை!

கம்பம் லோயர் காம்ப் வழியாக, பளியங்குடிப் பாதையில் சுமார் ஆறு கி.மீ.நடந்தும் கண்ணகி கோவிலுக்கு வரலாம். சுற்றுவட்டார மக்கள், குடும்பம் குடும்பமாக அப்பகுதி வழியே வருகிறார்கள்! மலைச்சாதி மக்கள், அங்கே பொங்கல் வைத்து,பாரம்பரிய முறைப்படி வழிபாடு செய்கிறார்கள்! நாங்கள் ஜீப்பில் வந்த பாதை, சுமார் 16 கி.மீ.! அந்தப் பாதையிலும் பலர் நடந்து வந்தார்கள்!

தமிழகம் மற்றும் கேரள மண்ணோடு பின்னிப் பிணைந்தது, கண்ணகியின் தெய்வீக வரலாறு! எந்தவிதமான போக்குவரத்து வசதியுமில்லாத அக்காலத்தில், தன் உறவுகளைத் தவிர வேறெதுவும் தெரிந்திருக்க வாய்ப்பில்லாத கண்ணகி, நடந்தே இப்பகுதிக்கு வந்தது, மகா ஆச்சரியம்! இப்போதும், கண்ணகி அங்கே உலாவுவதாகப் பழங்குடி மக்கள் சொல்கிறார்கள்! மதுரையிலிருந்து இப்பகுதிக்கு வந்த கண்ணகியை, தற்போது கோவில்கள் இருக்கும் பகுதியில், புஷ்பக விமானத்தில் வந்து, கோவலன் வானுலகம் அழைத்துச் சென்றதை அப்பகுதிப் பழங்குடி மக்கள் பார்த்து, சேர மன்னனிடம் சொல்ல அவன், இமயத்திலிருந்து கொண்டு வந்த கல்லில் கண்ணகிக்குச் சிலைவடித்து, கற்றளிக் கோவிலாக இந்தக் கோவிலைக் கட்டினான் என்கிறார்கள்!

கம்பம் லோயர் காம்ப் பகுதியில்,நித்திய வழிபாட்டுடன் கண்ணகி கோவில் உள்ளதாகத் தகவல் உள்ளது. குமுளி கண்ணகி கோவில் தமிழகப் பகுதியிலும், அதற்கான வழி கேரளப் பகுதியிலும் உள்ளது! வருடா வருடம் வருகிற பக்தர்களும் இருக்கிறார்கள்!

பல சமய வழிபாடு, சாதியப் பிரிவுகள், அன்றைய சமூக அமைப்புகள் எனப்பல தகவல்களைத் தருவது சிலப்பதிகாரம். தெய்வங்களையும், அரசகுடும்பங்களையும் முன்னிறுத்தி உலக இலக்கியங்கள் இருந்த காலத்தில், கோவலன், கண்ணகி என்ற சாமானியர்களை வைத்து எழுதப்பட்ட முதல் காவியம் சிலப்பதிகாரம்! எழுதிய இளங்கோவடிகள், சேர மன்னனின் சகோதரரான போதும், ஒரு பௌத்த துறவி! சிலப்பதிகாரத்தில் முக்கிய கதாபாத்திரமான கௌந்தியடிகள் ஒரு சமணத் துறவி! சிறுதெய்வ வழிபாடு முதல், இந்து சமயத்தில் இன்றைக்குச் சொல்லப்படுகிற பல தெய்வங்கள், சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளன! இன்று வசந்த உற்சவமாக கொண்டாடப்படுகிற விழா, அன்று இந்திர விழாவெனக் கொண்டாடப்பட்டு இருக்கிறது!

மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை இதன் அடையாளமாக அன்றைய தமிழகம் இருந்ததை சிலப்பதிகாரத்தில் அறியலாம்!

இவ்வளவு சிறப்பு வாய்ந்த சிலப்பதிகாரக் காவியத் தலைவியும், காவியத் தலைவனும் சோதி வடிவாக விண்ணுலகம் சென்ற இடம் இன்று வெறும் மண் மேடாக இருப்பது வருத்த மளிக்கிறது.

முன்னர் இங்கே ஒரு குளம் கோவிலருகில் இருந்தது என்கிறார்கள்! சிதைந்த பல கற்களில், பழங்காலக் கல்வெட்டுக்கள் உள்ளன! இராசராச சோழன் உட்படபலர் இங்கு திருப்பணிகள் செய்திருக்கிறார்கள்!

இப்பகுதி முழுவதும் தொல்பொருள் இலாகா வசம் ஒப்படைக்கப்பட்டு, மராமத்து செய்யப்பட வேண்டும்! பண்டைய தமிழக மற்றும் கேரள கலாச்சாரத்தின் அடையாளம் கண்ணகி கோவில்! இதை இரு மாநில அரசுகளும், தனிக்கவனம் செலுத்தி மங்கல தேவி – கண்ணகி கோவிலை, மகத்துவம் மிக்கதாக மாற்ற வேண்டும்! இதுவே இருபகுதி மக்களின் எதிர்பார்ப்பு! ஈடேற்ற வேண்டியது, கண்ணகியின் திருவுள்ளம்! ♦

வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க...

2 வியட்நாமில் நகரத்தார்கள்

சோமலெ
சோமசுந்தரம்

"கிட்டே உள்ள வங்கி" – "கிட்டங்கி"

சைகோன் தெண்டாயுதபாணி கோவிலைப் பல ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்ட திரு. முத்தையா, நகரத்தாருக்கும் வியட்நாமியப் பெண்மணிக்கும் பிறந்தவராம். சில வருடங்களுக்கு முன்பு கொரோனா தொற்றுக் காலத்தில் அவர் இறந்து விட்டதாக கோவிலில் கடை வைத்திருந்த அவருடைய தங்கை "லீ" கூறினார். எங்களிடம் பேசத் தயங்கிய அவரிடம், எங்கள் மொழிபெயர்ப்பாளர் பேசி தகவல்களை சேகரிக்க உதவினார். "என் அப்பாவிற்கு நான் ஆறாவது பிள்ளை, முத்தையா அண்ணன் இருந்த போது மலேசியாவில் இருந்து அர்ச்சகரை கூட்டி வந்து விழாக்கள் நடத்தியுள்ளோம்" என்று கூறினார். தன் அப்பா மதராஸில் இருந்து வந்தவர் என்று சொன்ன அவருக்கு, அவர் அப்பாவின் பெயரை நாங்கள் புரிந்துகொள்ளுமாறு தெளிவாகச் சொல்ல முடியவில்லை! பல பிரபலமான நகரத்தார்கள் தெண்டாயுதபாணி கோவிலுக்கு வந்த அரிய புகைப்படங்களை அவர் எங்களிடம் காண்பித்தார்.

அரசின் கட்டுப்பாட்டில் இருந்த இந்தக் கோவிலை வடக்கு வியட்நாமும், தெற்கு வியட்நாமும் இணைந்த பிறகு ஒரு மேலாண்மைக் குழுவிடம் ஒப்படைத்து அவர்கள் நடத்தி வருகிறார்கள். 400 நகரத்தார்கள் வாழ்ந்த சைகோன் நகரம், தெண்டாயுதபாணி கோவிலின் இரண்டு பக்கமும் "கிட்டங்கி"களில் அறுபதுக்கும் மேற்பட்ட நகரத்தார் நிதி நிறுவனங்களின் தொழில் புரட்சி, தெருவில் கோலமிட்டு, வெள்ளித் தேர் இழுத்து, பொங்கல் கொண்டாடிய காலங்கள் அனைத்தையும் நான் கற்பனை செய்து பார்த்தேன்! இன்றோ, சைகோன் நகரில் ஒரு நகரத்தார் குடும்பம் கூட இல்லை!

"கிட்டே உள்ள வங்கி" என்பதே காலப் போக்கில் "கிட்டங்கி" என மருவி விட்டது. தெண்டாயுதபாணி கோவில் இருக்கும் "டோன்-தாட்-தியெப்" தெருவில் ஆறு கிட்டங்கிகளும், சற்று தொலைவில் மற்றொரு கிட்டங்கியும் இருந்தன. நகரத்தார் பழக்கத்தில், தெருவின் வீட்டு எண்களே கிட்டங்கிகளின் பெயர்களாகின. ஒவ்வொரு வீட்டிலும், மாடியிலும், கீழேயும் இருந்த பெட்டியடிகளில் அன்றே பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கடன்கள் வழங்கப்பட்டன!

கோவிலுக்கு அடுத்ததும், கோவிலுக்குச் சொந்தமான கிட்டங்கி நம்பர் 64, மற்றும் சமையற்கட்டாக இருந்த 43-இல் நகரத்தார் பெட்டியடிகள் இருந்தனவாம். கோவிலுக்கு எதிரில் இருந்த கிட்டங்கிகள் 21 மற்றும் 23-இல் கோட்டையூர் மற்றும் மற்ற ஊர் நகரத்தார்களும், கிட்டங்கி 29 மற்றும் கிட்டங்கி 31-இல் காரைக்குடி மற்றும் பலவான்குடி நகரத்தார்களும் தொழில் நடத்தி வந்துள்ளார்கள்.

பெரும்பாலும் நகரத்தார் ஆண்கள் மட்டுமே சைகோனில் கிட்டங்கிகளில் இருந்தனர். ஒரு சிலர் மட்டுமே குடும்பத்தோடு வாழ்ந்தனர். மற்றவர்களின் குடும்பங்கள் சில வருடங்களுக்கு ஒரு முறை சில மாதங்கள் வந்து சென்றனர். இந்தக் கிட்டங்கிகளில் ஒன்று கூட, சிங்கப்பூரில் தெண்டாயுதபாணி கோவிலை ஒட்டியுள்ள கிட்டங்கிகள் போன்று பாதுகாக்கப் படவில்லையே என்ற ஏக்கம் வரத்தான் செய்கிறது. கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு முன்பு "திலகாசியம்" (பிரெஞ்சு சொல்) என்ற திட்டத்தின் கீழ் தெற்கு வியட்நாம் அரசின் மிக உயர் நிலையில் இருந்த அதிகாரிகள் கிட்டங்கிகளுக்கு நேரில் வந்து நகரத்தார்களிடம் கடன் பெற்றுச் செல்வார்களாம்! அத்திட்டத்தின் கீழ், மாதந்தோறும் வட்டியையும், அசலையும், அரசே சம்பளத்தில் பிடித்து நகரத்தார்களுக்கு காசோலையாகக் கொடுத்து வந்ததாம். உலகெங்கும் இன்று அரசுகளும், நிறுவனங்களும் கடைபிடித்து வரும் "Payroll Withholding" திட்டத்தை அக்காலத்திலேயே அறிமுகப்படுத்தியவர்கள் நகரத்தார்கள்!

1930-களில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவினால் நகரத்தார்களிடம் வாங்கிய கடன்களை கட்ட முடியாத வியட்நாமியர், குறிப்பாக விவசாயிகள், தங்கள் சொத்துக்களை இழந்தனர். அதனால், இன்றைய வியட்நாமின் 25% நிலப் பகுதி நகரத்தார்களுக்கு சொந்தமாகியதாம். A.M. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் மட்டுமே கிட்டத்தட்ட 30 மில்லியன் (பிரெஞ்சு) பிராங்க் மதிப்புள்ள சொத்துக்களுடன் அக்காலத்தின் மிகப் பெரிய செல்வந்தராக அங்கு வாழ்ந்தாராம்.

வியட்நாமின் ஐம்பது சதவிகித மக்கள் நகரத்தார்களிடம் கடனாளிகளாக இருந்தும், மற்ற நிறுவனங்களை விட நகரத்தார்களிடம் கடன் வாங்குவதையே விரும்பினார்களாம். நகரத்தார்களின் எளிமையும், திட்டமிட்டு பணியாற்றும் வணிகத் திறமையுமே அதற்குக் காரணம். உள்ளூர் வணிகர்களை விட குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்து வந்தாலும் வதந்திகள், பொறாமை ஆகியவற்றால் நகரத்தார்கள் மீது சில வியட்நாமியர்களுக்கு மனத்தாங்கல் ஏற்பட்டது.

நகரத்தார்கள் தனிப்பட்ட வாழ்வில் சிக்கனமாக இருந்தாலும், கோவில்களில் பெருமளவு ஆடம்பரமாகச் செலவு செய்தது அவர்களுக்கு சாதகமாக இருக்கவில்லை. நிலக்கடனை தள்ளுபடி செய்ய சில நகரத்தார்கள் மறுத்ததால் 1933-இல் அவர்களில் ஐந்து பேரை உள்நாட்டு அரசியலில் ஈடுபட்டனர் என்ற பொய்க் காரணத்தைக் கூறி சைகோன் அரசு இந்தியாவிற்கு அனுப்பியது. அவர்கள் சார்பாக சர் ராமஸ்வாமி முதலியார், பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதன் விளைவாக அவர்கள் மீண்டும் சைகோன் சென்றனர்.

அப்போதிருந்தே சைகோனில் பாதுகாப்பு இல்லை என்ற உணர்வு ஏற்பட்டு நகரத்தார்கள் படிப்படியாக தம் சொத்துக்களை இந்தியாவிற்கு கொண்டு வருவதில் கவனம் செலுத்தினர்.பர்மாவில் ஏற்பட்ட அளவிற்கு நகரத்தார்கள் மீது வெறுப்புணர்ச்சிகளோ, வன்முறைகளோ வியட்நாமில் இல்லை. வியட்நாமியர்கள் நகரத்தார்களிடம் தொடர்ந்து கடன் பெற்று வந்தார்கள். அமெரிக்க ஆளுமையில் தம் சொத்திற்கு பாதுகாப்பும், வாழ்விற்கு தேவையான வசதிகளும் இருந்ததால் நகரத்தார்கள் 1975 வரை சைகோனில் வாழ்ந்தனர். 1870-களில் சைகோன் வந்த நகரத்தார்கள் அங்கு நூறாண்டுகளுக்கு மேல் செல்வச் செழிப்போடு வாழ்ந்துள்ளார்கள். "வியட்நாம் மக்கள் நல்லவர்கள், பெரும்பாலும் வாங்கிய கடனை அடைத்து விடுவார்கள். நம் கோவில்களுக்கு பணம் கொடுத்து, வேண்டிக் கொள்வார்கள். நம் கிட்டங்கிகளில் வந்து கோழிக் குருமாவை விருப்பமாக சாப்பிடுவார்கள். வாங்கிய கடனை அடைத்துவிட்டு, தக்க நேரத்தில் உதவிய நகரத்தார்களிடம் பிரியத்தோடு நடந்து கொள்வார்கள். நகரத்தார்கள் அங்கு நன்றாக சம்பாதித்து, சந்தோஷமாக வாழ்ந்தோம், கம்யூனிஸ்ட் ஆட்சி வந்ததால் தான் அந்நாட்டை விட்டு இந்தியாவிற்கு வந்தோம்" என்று தொன்னூறு வயது நிறைந்த கீழச்சிவல்பட்டி சுப. சுப்ரமணியன் என்ற சீனிவாசன் ஐயா அவர்கள் தன் பசுமை நினைவுகளை பகிர்ந்து கொண்ட போது, வியட்நாம் நாட்டின் மீது நகரத்தார்களுக்கு இருந்த

வியட்நாம் தொடர் பற்றி வாசகர்கள்

- நமது செட்டிநாடு இதழில் வியட்நாம் பற்றிய அரிய தகவல்களை அனைவரும் அறியத் தந்த விதம் அருமை. பெரியோர்கள் கூறிய தகவல்கள், ஆண்டுகள் அனைத்தையும் மறக்காமல் குறிப்பிட்டிருப்பது சிறப்பு. கோவில்களைக் கடைக்காரர்கள் பராமரிக்கிறார்கள் என்ற தகவல் வியப்பாக உள்ளது.
- வணக்கம். அப்பாவின் புத்தகத்தை படிப்பதைப் போலவே அரிய தகவல்கள். பாராட்டும் வாழ்த்தும்.
- தொடக்க உரையும் எழுத்து நடையும் நன்றாக உள்ளது ஐயா.
- சிறு சிறு,தலைப்புகளோடு விளக்குங்கள் இன்னும் சிறப்பாக அமையும்....
- நகரத்தார் வியட்நாமில் என்பது புதிய தகவல்
- தங்களின் வியட்நாம் பற்றிய தொடக்க தொடரினை படித்தேன். தாங்கள் எழுதிய அமெரிக்காவின் 50 முகங்கள் போன்று செய்தி களஞ்சியமாகவும், அறிவூட்டுதலாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. தொடரினை வாசிக்க ஆவலுடன் காத்திருக்கிறேன்.
- Nagarathar life and stories inspired me to start my own business.
- Sir, the article is well written and you took me to Vietnam.
- The article has kindled our interest to visit vietnam.

பாசமும், பிணைப்பும் தெளிவாகப் புலப்பட்டது. அமெரிக்கப் படைகள் 1975-இல் வியட்நாமை விட்டுவெளியேறியவுடன், வடக்கு வியட்நாமும், தெற்கு வியட்நாமும் இணைந்து புதிய கம்யூனிஸ்ட் நாடாகியது. தங்களின் பாதுகாப்பு கருதியும், சொத்துக்களின் பாதுகாப்பிற்கு அஞ்சியும், அரசு சொன்னபடி 99-வருட குத்தகைக்குக் கொடுத்தோ, சொத்துக்களை விற்றோ, இழந்தோ, நகரத்தார்கள் இந்தியாவிற்குத் திரும்பினர்.

இன்றைய ஹோ சி மின் சிட்டி சர்வதேச விமான நிலையம் இருக்கின்ற நிலத்தை வியட்நாம் அரசுக்கு ராங்கியம் "சைகோன்" அழகப்ப செட்டியார் வாரிசுகள் குத்தகைக்குக் கொடுத்து தாயகம் திரும்பினார்களாம்! சைகோன் நகரின் கத்தினாட் (இன்றைய டாங் கோய் தெரு), சென்னையின் பாரிமுனை பகுதி போன்று நகரின் மையப் பகுதியாகும். அங்கிருந்த பெரும்பாலான சொத்துக்களை நகரத்தார்கள் ஒரே நாளில் புதிய கம்யூனிஸ்ட் அரசிடம் விட்டுவிட்டு வந்துவிட்டார்கள்! கோவில் சொத்துக்களை பெரும்பாலும் அரசாங்கமே எடுத்துக் கொண்டது. நகரத்தார் விற்க முடியாத சொத்துக்களில் வாழ்ந்த வியட்நாமியரிடம் அரசு வாடகைகளை வசூலிக்கத் தொடங்கியது.

வியட்நாம் பெண்களை திருமணம் செய்து கொண்ட நகரத்தார்கள், சைகோன் போன்று பாண்டிச்சேரியும் பிரெஞ்சு காலனியாக இருந்ததால், குடும்பத்தோடு பாண்டிச்சேரிக்குச் சென்றார்களாம். சைகோனில் கடைசியாக வாழ்ந்து 1978-79 கால கட்டத்தில் மறைந்தவர் ஆத்தங்குடி லெட்சுமணன் செட்டியார். அவர் அந்நாட்டு பெண்ணை திருமணம் செய்து கொண்டவர்.

1930-களில் பொருளாதாரச் சரிவு காலத்திலும், 1975-இல் கம்யூனிஸ்ட் ஆட்சி மாற்றத்திலும் இழந்த சொத்துக்களை மீட்க நகரத்தார்கள், பிரதமர் நேரு முதல் இன்றைய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வரை பல வழியாக முயற்சிகள் எடுத்தும் அதற்குரிய பலன்கள் கிட்டியதாகத் தெரியவில்லை. "வியட்நாம் ஏழை நாடு, அவர்களிடம் எப்படி இழந்த சொத்துக்களைக் கேட்பது?", என்ற அன்றைய நிலை மாறிவிட்டது. தற்போது பொருளாதார வளர்ச்சியில் ஆசியாவின் முன்னோடி நாடுகளில் ஒன்றாக வியட்நாம் மாறி வருகிறது.

(தொடரும்)

தனித்துவமாக இருக்கையிலேயே செய்துகொள்ளுங்கள்

வேண்டிய ஒருவர் அலைபேசியில் அழைத்தார். தகவல் தொழில்நுட்பத்துறையில் உயர் பதவியில் பணியாற்றும் அவருடைய வருத்தம், இந்த ஆண்டும் அவருக்கு நல்ல ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை என்பது.

இதே போல சென்ற ஆண்டு அவர் என்னிடம் பேசியது நினைவுக்கு வந்தது. பாவம் என்று தோன்றியது. உடன் சென்றமுறை நான் அவருக்குச் சொன்ன ஆலோசனையும் நினைவுக்கு வந்தது.

அந்த ஆலோசனை, அவர் முயன்று செயற்கை நுண்ணறிவு (ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ்-AI) குறித்து ஏதாவது முறையான, பார்மல் படிப்பு படிக்கவேண்டும்; ஏ.ஐ.யில் 'சர்டிபிகேஷன்' செய்ய வேண்டும் என்பது.

அவர் அதை இன்னும் செய்யவில்லை.

அதில் அவருக்கு ஆர்வம் இல்லை என்பதும், அவர் அதை உடனடியாக செய்யப் போவதில்லை என்பதும் அவர் என் பேச்சுக்கு காட்டிய, செய்த (ரியாக்ஷன்) அல்லது செய்யாத மறுவினை (ரெஸ்பான்ஸ்) களிலிருந்து தெரிந்தது.

பிறகு நான் அவரிடம் சொன்னது, தற்போது நான் பரிந்துரை செய்யும் செயற்கை நுண்ணறிவு குறித்த படிப்பு என்பது வருங்காலத்தில் அவசியம் தேவைப்படபோகிற படிப்பு. ஆனால், பெரும்பாலான மக்களுக்கு இப்போது இது குறித்த கவனம் இல்லை. இதன் தேவையை உணரவில்லை. அதனால் வெகு வெகு சிலரே படிக்கிறார்கள் செய்கிறார்கள். அதனால் இதற்கென்று பெரிய சந்தை இன்னும் உருவாகவில்லை. பெரும்பாலான கல்வி நிறுவனங்களில் இந்த படிப்புக்கான 'கோர்ஸ்'கள் இல்லை.

டாக்டர் சோம வள்ளியப்பன்

ஆனால், இந்த நிலை நீடிக்காது. வருங்காலத்தில் நிறுவனங்கள் அவர்களுடைய செலவை கட்டுப்படுத்திக் கொள்ளவும், சந்தையில் மற்றவர்களோடு போட்டி போட்டு, மேம்பட்ட

பொருட்களை சேவையை கொடுப்பதற்கும், செயற்கை நுண்ணறிவை கூடுதலாக பயன்படுத்த வேண்டிய கட்டாயம் வரும். அதனால், நிறுவனங்களில் செயற்கை நுண்ணறிவு பிரிவுகளை உருவாக்குவார்கள். பல்வேறு வேலைகளிலும் செயற்கை நுண்ணறிவு குறித்த விவரம் அறிந்தவர்களை, படித்தவர்களை சேர்ப்பார்கள்.

நிறுவனங்களில் அப்படிப்பட்ட நிலை வர, பலரும் செயற்கை நுண்ணறிவு குறித்து படிக்க ஆர்வம் காட்டுவார்கள். அதனால் பல்வேறு இடங்களிலும் அந்த 'கோர்ஸ்'கள் அறிமுகமாகும். அதற்கு கட்டணங்கள் அதிகரிக்கும். அதன்பிறகு சில மாதங்கள், வருடங்களில் ஒவ்வொரு நிறுவனத்திலும் செயற்கை நுண்ணறிவு தெரிந்தவர்கள் பலர் இருப்பார்கள்.

நிறுவனங்கள் அப்படிப்பட்டவர்களை தேடும் போது அந்த 'திறன்' கொண்டவர்கள் மேம்பட்டவர்களாக பார்க்கப்படுவார்கள். நிறுவனத்திற்கு பயன்படும் அந்தத் திறன் இருப்பவர்கள், இல்லாத மற்றவர்களிடம் இருந்து வேறுபட்டவர்கள். உயர்வானவர்கள். அதனால் அவர்களுக்கு கூடுதல் மதிப்பு மற்றும் ஊதியம் கிடைக்கும். வேலையில் இருந்து நீக்கப்படும் அபாயம் இருக்காது.

அப்படிப்பட்ட பயன் தரும் ஆனால் பலரிடமும் இல்லாத ஒன்று என்றால் அது, ஒரு டிஃபரென்சியேட்டர் (Differentiator) மயிலிடம் மட்டும் இருக்கும் அழகான தோகை போல. குயிலின் இனிமையான குரல் போல. மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் ஒரு திறன்.

மாருதி நிறுவனம் தொடங்கப்பட்டு, கார்களை அறிமுகப்படுத்தி விற்பனை செய்தபோது மாருதி 800 என்ற வகை கார்களில் இருவகையான மாடல்கள் வந்தன. என்றால் மற்ற அனைத்தும் அதேதான். ஆனால் சில கார்களில் குளிர்சாதன வசதி, ஏ.சி.இருக்கும். சிலவற்றில் இருக்காது. ஏசி இல்லாத ' நான் ஏசி' கார்கள் விலை சற்று குறைவு. பதிவு செய்கையில் விற்கையில் 'மாருதி ஏசி' என்று குறிப்பிட்டு சொல்லவார்கள், எழுதுவார்கள்.

இப்போது எந்த நிறுவனமாவது எங்கள் காரில் 'ஏசி' உண்டு என்று சொல்கிறார்களா? அல்லது வாங்குபவர் அதைச் சொல்லிக் கேட்கிறாரா?

புதுவயல் செல்லப்பன் கவிதைகள்

மூன்று தொகுதிகள்

மொத்த பக்கங்கள் - 1128

விலை ரூ. 1250/-

சலுகை விலை ரூ. 1000/-

(G Pay) : 9444976091

(தபால் செலவு உட்பட)

தொடர்புக்கு

Whatsapp 9444382840

Advt.

கார்கள் ஏசி என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வேறுபாடு காட்டும் விடயம், ஒரு டிஃப்ரன்சியேட்டர் அல்ல. மாறாக எல்லா கார்களிலும் இருக்கும் ஒரு அடிப்படையான வசதி. அதாவது கார் என்றால் 'டீஃபால்ட்' (By Default)ஆக ஏசி இருக்கும். இருக்கவேண்டும்.

இப்படியாக இன்னும் பல எடுத்துகாட்டுகள் சொல்லலாம். விஸ்வேஸ்வரய்யா, அப்துல் கலாம், எழுத்தாளர் சுஜாதா காலங்களில் பொறியியல் படிப்பு ஒரு டிபரென்சியேட்டர். இப்போது?

தொடக்கத்தில் ஐஎஸ்ஓ 9000 பெற்று அதை விளம்பரப்படுத்தியவர்களை போல. அதை பெற்றதனால் கூடுதல் வியாபாரம் செய்தவர்களைப் போல. பிறகு ஒரு காலகட்டத்தில். "நாங்கள் ஐ எஸ் ஓ 9000 நிறுவனம்" என பெரிதாக விளம்பரம் செய்வதைப் பார்த்தோமா?

டிபால்டுகளால் பெருமையோ, பெரும்பலனோ இல்லை. எல்லோரிடமும் இருக்கும், இருந்தாக வேண்டிய ஒரு கட்டாயம்.

இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு குறித்த படிப்பறிவு, பட்டறிவு இரண்டும் தகவல் தொழில்நுட்ப வேலைகளில் சேர்ப்பவர்களுக்கு மட்டுமல்ல இன்னும் பலருக்கும் கூட ஒரு டீஃபால்ட் தேவையாக மாறிவிடும். அப்படிப்பட்ட போது அவர் அந்தப் பட்டயம் அல்லது சர்டிபிகேஷனை பெறுவதால் என்ன கூடுதல் பலன்?

ஆர்டிபிஷியல் இண்டெலெஜென்ஸ் தற்போது அது ஒரு 'டிஃபரென்ஷியேட்டர்' ஆக இருக்கிறது. இப்போதே கை கொள்தல் பெருவாய்ப்பு.

செயற்கை நுண்ணறிவுக்கு மட்டுமல்ல. வாழ்க்கை ஓட்டத்தில், வியாபார பந்தயத்தில் என பலவற்றிலும் மற்ற எவரும் செய்வதற்கு முன்னால், நிச்சயமாக நல்லது; பலன் தரும் என்று சிலவற்றைக் கண்டு உணர்ந்து, அவற்றை முன்கூட்டியே கைகொள்கிறவர்கள் 'டிஃபரென்ஷியேட்டர்' களை வைத்திருப்பவர்கள். வெற்றியாளர்கள். ■

இராம காவியம்

தேவகோட்டை அரு.லெட்சுமணன்
(அலெக்ஸ்)

சீதா கல்யாணம்

முன்னும் பின்னும் முனியும் தம்பியும்
இடையே ராமன் நடந்து சென்றான்
உடையோ நழுவ உள்ளம் நெகிழ
இன்றைய நாளின் மாற்றம் கண்டு
தன்னை எண்ணி தானே உணர்ந்தான்
பின்னே வந்த இலக்குவன் மறந்தான்

மாடம் தன்னில் மயிலொன்று இருந்து
தன்னை பார்ப்பதாய் தானே அறிந்து
விண்ணை ப்பார்த்தான் விழிகள் கலந்தன
சீதை நல்லாள் குமிழ் சிரிப்புடனே
அண்ணல் கண்டு அகம் குளிர்ந்தாள்
என்னவள் இவளென இவனும் நினைத்தான்

நினைப்பது தொடர நடையது தளர
அரண்மனை வந்தனர் மூவரும் ஒன்றாய்
வந்த மூவரை வாசலில் வணங்கி
விஸ்வாமித்திரர் வேண்டுவன கேட்டு
தங்கும் இடம்வரை ஜனகர் தொடர
குலகுரு சதானந்தர் கூடவே சென்றார்.
மூவரில் இருவர் நித்திரை கொண்டார்
முனியோ அதனை தவமாய் கண்டார்
இராமர் மனது கலங்கி இருந்து
கண்ணில் தூக்கம் சிறிது இல்லை
என்னவள் என்றேன் இதுசரிதானா?

பெண்ணவள் பிறன் மனை யாயின்
பெரிதும் தவரென ஒழுக்கம் கொண்டான்
அன்னை வளர்ப்பும் ஆசான் அருளும்
என்னுள் இருக்க நடந்தது இயல்பே
அவர்கள் நினைப்பில் அமைதி கண்டான்
துயிலும் கொண்டான், துன்பம் இன்றி

சீதை சிறிதும் தூங்கினாள் இல்லை
நீண்ட கையும் நிமிர்ந்த நடையும்
நிலவு முகமும் நெய்மலர் கண்ணும்
மெல்லிய உதட்டின் சிறு முறுவல்
அவளை தீண்டின அமைதியை கெடுத்தன
உற்ற தோழி நீலமாலை துணையாய்
சகலமும் செய்தாள் சாந்தப் படுத்தினாள்

ஆயிரங் கிரணங்கள் அள்ளித் தெளித்து
ஆதவன் வந்தான் மிதிலை விழித்தது
ஆடவர் பெண்டிர் பெரியர் சிறியவர்
அனைவரும் வந்தனர் அரண்மனை வழிந்தது

வில்லை காணவும் வேல்விழி நல்லாள்
சீதையை காணவும் வந்த மன்னர்கள்
அத்தனை பேரும் அழகாய் அமர்ந்திருக்க
எதிர்படும் திசையில் எழில்மிகு இராமன்
இளவல் நடுவில் ஒளிவிடும் கண்ணுடன்
உயர்வாய் இருந்தார் அவர்தம் குருவே

கூடிய சபையில் வில்லின் பெருமையை
தேடியும் கிடைக்கா இராமன், அறிந்ததை
தெளிவாய் சொன்னார் சதானந்தர் மற்றவர்க்கு.
சுயம்வர மென்று சொல்லி க்காட்ட

சடையினை திருத்தி, ஜனக முனியை
பார்த்து வில்லோன் ஆசான், தசரதன்
வம்சாவளியை புரியச் சொன்னார்
இவன் ரகுகுல இராமன் விருந்தினன்
சிவனார் தனுசை இவனே காண்பான்.

அரசர் ஜனகர் அரசபை வணங்கி
ஆணை யிட்டார் சுயம்வரம் தொடங்க
ஆயிரம் சக்கரம் அமைந்த படுக்கையில்
அழகாய் தனுசு சிவனென இருக்க
இழுத்துக் கொண்டும், தள்ளிக் கொண்டும்
சபைநடுவே கொண்டு வந்தோர், சோர்வுற்றார்.

மூவர் தவிர மற்றனைவரும் மருண்டனர்
மன்னவர் பலரில் வில்லை தொட்டவர் சிலரே
மற்றவர் அனைவரும் பார்த்தனர், வணங்கினர்
ஜனகர் ஜானகி மனசு தவித்தது
மன்னர் இராமரை மனதில் எண்ணி
குருவை பார்த்தார். குறிப்பறிந்த குருவும்
இராமனை இயல்பாய் மனதால் பார்க்க
கண்ணால் குருவை வணங்கியே எழுந்தான்
யாக குண்டத்தில் வளரும் ஜோதியாய்
படர்ந்த தோளும் கால்வரை கையும்
நீண்ட காலுமாய் நின்றவன் நடந்தான்
நிமிர்ந்த நடையில் நிலமது நெகிழ
வில்லிடை வந்தான் வேண்டி வணங்கினான்.
வில்லை தொட்டது கண்டார், நானை
தொடுத்தது அறியார், சபையே மகிழ்ந்தது.

இனிய செய்தியை எடுத்து சொல்ல
விடுபட்ட அம்பாய் விரைந்தாள் தோழி
சீதையை கண்டாள் சிலையாய் நின்றாள்
கூட இருந்தவர் குலுக்கிய பின்னரே
சொன்னாள், நீகண்ட நீண்ட கைகளே
வில்லை வளைத்தது வின்னென்று தெறிக்க
மணமாலை எடுத்துவா மணாளனுக் கென்றாள்

சீதை வந்தாள் தந்தை தாயை
குருமார் எல்லாம் வணங்கி நின்றாள்
சபையோர் அனைவரும் அவளை வணங்கி
ஆனந்தம் பொங்க அகம் மகிழ்ந்தனர்

(தொடரும்)

அமெரிக்கத் தமிழ் முன்னோடியின் சதாபிஷேகம்!

வட அமெரிக்க நகரத்தார் சங்கத்தைத் தொடங்கிய ராங்கியம் டாக்டர் பெரி.சொக்கலிங்கம் - மல்லிகா ஆச்சி அவர்களின் சதாபிஷேகம், அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் உள்ள ஆர்லாண்டோ நகரில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தமிழ் நாடு அறக்கட்டளை, அமெரிக்கத் தமிழ் சங்கப் பேரவை, அமெரிக்க தமிழ் மருத்துவர் சங்கம் போன்ற பல தன்னார்வலர் அமைப்புக்களில் பெரும் பங்காற்றி சேவை செய்துள்ள டாக்டர் சொக்கலிங்கம் அவர்களை அந்த அமைப்புக்களின் சார்பாக தலைவர்கள் வாழ்த்திப் பேசினார்கள். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதற்கேற்ப, தஞ்சை மருத்துவக் கல்லூரியில் பயின்ற காலத்திலேயே மாணவர்கள் தலைவராகப் பணியாற்றி தன் ஆளுமையை வெளிப்படுத்தியவர் டாக்டர் சொக்கலிங்கம் என அவருடன் பயின்ற டாக்டர் ராம்மோகன் நினைவு கூர்ந்தார். இருதய நிபுணராக டாக்டர் சொக்கலிங்கம் தொட்ட இதயங்களை விட, அவருடைய ஈகைப் பண்பால் அவர் தொட்ட இதயங்கள் ஏராளம் என சோமலெ. சோமசுந்தரம் தன் வாழ்த்துரையில் குறிப்பிட்டார். சதாபிஷேகத்திற்கு வந்திருந்த நானூறுக்கும் மேற்பட்ட விருந்தினர்களை ஒரே குழுவாக புகைபடமெடுக்க திண்டாடிய அமெரிக்கப் புகைப்பட பெண்மணி "டாக்டருக்கு இவ்வளவு பெரிய குடும்பமா?' என வியந்தார்!

அன்னையர் தினம்

அரு.இராமநாதன், சிதம்பரம்

இல்லற சுகத்தில்
இருவருக்கும் பங்கு உண்டு.
முந்நூறு நாள் சுமை முழுதும்
அன்னைக்கே சுகமாகும்.
உருத்தெரியா நாள் முதலே
கருவறையில் காத்திடுவாள்.
உயிருக்குள் உயிராக
கருவை வளர்த்திடுவாள்.
தப்பாமல் உணவளிப்பாள்
தொப்புள் கொடி வழியே.
ஈன்று புறம் தருவாள்
வலியெல்லாம் பொறுத்திடுவாள்
ஈடில்லா படைப்பாளி.
உச்சி முகர்ந்திடுவாள்
கொஞ்சி மகிழ்ந்திடுவாள்
அழுகை அமர்த்திடுவாள்
சிசுவின் பசியாற்றி.
உணவுத் தொழிற்கூட
முழு நேரத் தொழிலாளி.
வேளாவேளைக்கு வேகவைக்கும்
அன்னபூரணி.
மேசையிலே பரிமாறி
பாசமழை பொழிந்திடுவாள்.
ஆசையெல்லாம் அடக்கி அவள்
மீதத்தை அமுதென்பாள்.
அலுவலகம், பள்ளிக்கு ஆட்களை
அன்றாடம் பொறுப்போடு
அனுப்புகிற புண்ணியவதி.
மாலைநேரத்து வரவேற்பும்
இவள் பணியே.
இடையிடையே இறை நினைப்பு
அயராத அர்ப்பணிப்பு.
அதிகாலை விழித்தெழுந்து
வாசலை அலங்கரித்து
அனைவரையும் எழுப்பிவிட்டு
பருகுதற்கு பானம் தந்து
குளிப்பதற்கு களம் தந்து
ஈரத்தை துடைத்தகற்றி
ஆடைகளை அணிவித்து
சீவி முடித்து சிங்காரித்து
அழகாக திலகமிட்டு
காலை உணவை அன்போடு
உண்ணத் தந்து
கையசைத்து அனுப்பிடுவாள்
கை பிசைந்து கலங்கிடுவாள்.
தியாகி அன்னைக்கு
பிள்ளைகள் சிலை வைப்போம்
அவரவர் நெஞ்சினிலே.
அன்னைக்கு பாமாலை
எந்நாளும் அணிவிப்போம்.

Innovative Homes & Developers Pvt. Ltd.
Creating Values & Lifestyles

"உங்கள் மண்ணை பொன்னாக்குவோம்"
Inviting Land Owners for Joint Development
Together we can build a great future!

RERA NO. TN/29/Building/077/2023



Premium flats for sale in Virugambakkam, Call Now :
innovativehomes.in
98840 12145
88-A, P.T.Rajan Salai, K.K.Nagar, Chennai - 78
இன்னோவேடிவ் அண்ணாமலை

தொழில் தொடங்கலாம் வாங்க 65

சேதுராமன் சாத்தப்பன்

ஸ்டார்ட்அப் உலகம்

டாஷ்டூன் காமிக்ஸ் படங்கள்

காமிக்ஸ் என்றால் பலருக்கு சிவகாசி முத்து காமிக்ஸின் முத்தான புத்தகங்கள் தான் நியாபகத்திற்கு வரும். அந்த அளவிற்கு அவர்களின் இரும்புக் கை மாயாவிலிருந்து பல கேரக்டர்கள் நமக்கு பரிச்சயமானவை. அதன் ஸ்தாபகர் சௌந்திரபாண்டியன் தொழில் நிமித்தமாக வெளிநாடுகளுக்கு செல்லும் போது அங்கிருக்கும் காமிக்ஸ் புத்தகங்களை பார்த்து அதனால் ஈர்க்கப்பட்டு அவற்றை தமிழில் வெளியிடும் உரிமைகளை வாங்கி முத்து காமிக்ஸ், லயன் காமிக்ஸ் என்று வெளியிட ஆரம்பித்தார். அது குழந்தைகளிடையே மிகவும் வேகமாக புகழ் பெற ஆரம்பித்தது. ஆனால் இவர்களின் காமிக் புத்தகங்கள் வெளிநாட்டில் இருந்து காப்பிரைட்ஸ் மூலமாக வாங்கப்பட்டு மொழிபெயர்ப்பு மட்டும் செய்யப்பட்டு வெளியிடப்பட்டதால் கதைகளுக்கு படங்கள் வரையும் வேலையில்லை. முன்பு போல தமிழில் காமிக்ஸ் புத்தகங்கள் படிக்கும் ஆர்வம் மக்களுக்கு இல்லையென்றாலும், ஆங்கில காமிக்ஸ்கள் அதிகம் இடத்தை ஆக்கிரமித்து கொண்டாலும், இந்த நிறுவனம் ஆர்வம் காரணமாக இன்னும் 50 வருடங்களாக காமிக்ஸ் புத்தக வெளியீட்டில் இருக்கிறார்கள்.

இவர்கள் தவிர ஓவியக் கலைஞர்களை வைத்து காமிக்ஸ் கதைகளுக்கு படங்கள் வரைந்து வெளியிடும் கம்பெனிகளும் பல இருக்கின்றன. அமர் சித்ர கதா போன்றவை.

அந்த காலத்தில் காமிக்ஸ் கதைகளுக்கு படம் வரைவது என்றால் அதிக நாட்கள் எடுக்கும். ஒவ்வொரு படத்திலும் அந்த காமிக்ஸ் கேரக்டர்களின் முகத்தை சரியாக கொண்டுவருவது என்பது ஒரு பெரிய கலை. அதை சிறந்த ஓவியக் கலைஞர்களால் தான் கொண்டு வர முடியும். பின்னர் இந்த துறையில் டெக்னாலஜிகள் வளர ஆரம்பித்தன. தற்போது வந்திருக்கும் டெக்னாலாஜி மிகவும் ஆச்சரியமான ஒன்றாகும். இதை ஒரு ஸ்டார்ட் அப் சாதித்திருக்கிறது.

2022 வருடத்தில் சானித்யா நரேன், லலித் குடிபதி மற்றும் சௌம்யதீப் முகர்ஜி ஆகியோரால் நிறுவப்பட்ட டாஷ்டூன் (Dashtoon) என்ற ஸ்டார்ட் அப் நிறுவனம் காமிக்ஸ் உருவாக்கத்தில் ஒரு புதிய அணுகுமுறையைக் கொண்டு வந்திருக்கிறது, இது வரையும் திறன் இல்லாதவர்கள் கூட காமிக்ஸ் கதைகளுக்கு படங்கள் வரைய முடியும். இது ஆர்ட்டிபிஷியல் இண்டெலிஜென்ஸ் டெக்னாலஜியை உபயோகித்து கதைகளை வசீகரிக்கும் காமிக்ஸ்களாக மாற்றுவதற்கான ஒரு தளத்தை வழங்குகிறது.

இவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் புதுமையான டாஷ்டூன் ஸ்டுடியோவைப் பயன்படுத்தி, படைப்பாளிகளின் ஸ்டோரி போர்டுகளைப் பதிவேற்றுகிறார்கள், பிளாட்ஃபார்ம் லைப்ரரியில் இருந்து கேரக்டர்களை தேர்ந்தெடுக்கிறார்கள் அல்லது காட்சிகளை உருவாக்க படங்களைப் பதிவேற்றுகிறார்கள், தயாரிப்பு நேரத்தை ஒரு எபிசோடிற்கு 40-50 மணி நேரத்திலிருந்து, வெறும் 5-6 மணிநேரமாக வெகுவாகக் குறைக்கிறார்கள். இவர்களின் இந்த செயல்திறன் தினசரி எபிசோட் வெளியீடுகளை வெளியிட உதவுகிறது. கதை சொல்லுபவர்களை, எழுத்தாளர்களை ஓவியர்களாக மாற்றும் அதிசயத்தை இந்த ஸ்டார்ட் அப் செய்து வருகிறது.

கிரியேட்டர்கள் கதைகளை கோடிட்டுக் காட்டுகிறார்கள், முக்கிய நபர்களின் குணாதிசயங்கள் மற்றும் வரைபட ஸ்டோரி போர்டுகளை உருவாக்குகிறார்கள், டாஷ்டூனின் தொழில்நுட்பம் இந்த கூறுகளை மெருகூட்டப்பட்ட காமிக் வெளியீடாக மாற்றுகிறது. இது ஒரு ஆச்சரியம் தான்.

காமிக்ஸ் சந்தை:

காமிக்ஸ் சந்தை பெரியதாகும். Allied Market Research படி 2022 ஆம் ஆண்டில் உலகளாவிய காமிக் சந்தை 1,20,000 கோடி ரூபாய்களாக இருக்கிறது. மேலும் 2032 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 2,00,000 கோடி ரூபாய்களாக உயரும் வாய்ப்புகள் அதிகம்.

இவர்களின் இணயதளம் www.dashtoon.com. சென்று பாருங்கள். நீங்களும் ஒரு காமிக்ஸ் புத்தகம் கொண்டு வரலாம்.

இந்த மாத வழிகாட்டி நேமத்தான்பட்டி கே.எஸ்.காசி (சென்னை)

ஒவ்வொரு மாதமும் வழிகாட்டிகளை இளைஞர்களுக்கு அறிமுகம் செய்வதால் பலருக்கு தொழில் செய்யும் ஆர்வம் வந்திருப்பது நமக்கு வரும் தொலைபேசி அழைப்புகளில் இருந்து தெரிய வருகிறது. இதில் இரண்டு நன்மைகள் இருக்கின்றன. ஒன்று திறமை வாய்ந்தவர்கள் நமக்கு வழிகாட்டிகளாக கிடைப்பது. இரண்டாவது அந்த வழிகாட்டிகளை இளைஞர்கள் சரிவர பயன்படுத்திக் கொள்வதால் அவர்கள் தொழிலதிபர்களாக உயர்வது.

இந்த மாதம் நம்மவர்களில் ஒரு வித்தியாசமான தொழில் செய்யும் தொழிலதிபரை உங்களுக்கு அறிமுகம் செய்வதில் நாம் பெருமையடைகிறோம். சென்னையில் இண்டஸ்டிரியல் ஸ்பெஷாலிட்டி பேப்ரிக்ஸ் (Industrial Speciality Fabrics) உற்பத்தி செய்யும் நேமத்தான்பட்டியைச் சேர்ந்த கே.எஸ். காசி அவர்களை இந்த இதழுக்காக பேட்டி கண்டோம். அவர்களின் பேட்டி தொடர்கிறது....

எப்படி இந்த புதுமையான துறைக்கு வந்தீர்கள் ?

நான் First Generation Entrepreneur. படித்து முடித்தவுடன் எல்லோரைப் போலவும் வேலைக்கு சென்று உயர் பதவிகளை அடைய வேண்டும் என்ற கனவு நிறைய இருந்தது. இன்னொருபுறம் வித்தியாசமான ஒரு தொழில் தொடங்கவும் எண்ணங்கள் இருந்தது. என்னுடைய இரண்டு brothers-ம் business-ல் இருந்ததால், இரண்டாவது choice-யை தேர்ந்தெடுத்தேன். தொழிலில் நிறைய trial and error செய்து இன்று இண்டஸ்டிரியல் பேப்ரிக்ஸ் மற்றும் பேக்ஸ் மெனுபேக்சரிங் தொழிலில் ஒரு நிலையான பெயரை எங்கள் கம்பெனி பெற்றுள்ளது. நாங்கள் ஒரு nichie பீல்டில் இருக்கிறோம். ஆதலால் இந்த தொழிலில் எங்களால் வளர்ச்சியடையவும், ஒரு நிலையான இடத்தை பெறவும் முடிந்தது.

இண்டஸ்டிரியல் பேப்ரிக்ஸ் என்றால் என்ன?

உதாரணமாக சொல்லப்போனால் கார் கதவுகளில் உட்புறம் இருக்கும் door pad பேப்ரிக்ஸ், காரின் உள் மேல்புறம் இருக்கும் பேப்ரிக்ஸ், கார் சீட் பேப்ரிக்ஸ், செருப்புகளில் உபயோகப்படுத்தப்படும் பேப்ரிக்ஸ், லேடீஸ் பேக்ஸ்களில் உபயோகப்படுத்தப்படும் பேப்ரிக்ஸ் ஆகியவை speciality fabrics-க்கு உதாரணங்கள். இந்த வகை பேப்ரிக்ஸ்களை நாங்கள் உற்பத்தி செய்கிறோம். இவை Flame retardant, UV coated, Polyurethane Coating, Water repellent என்பது குறிப்பிடதக்கது. இவை எல்லா தட்பவெப்ப நிலைகளையும் தாங்கும், அதிக நாட்கள் நீடித்து உழைக்கக் கூடியது.

இந்த வகை பேப்ரிக்ஸ்களை பல நிறுவனங்களுக்கு B2B என்ற முறையில் சப்ளை செய்து வருகிறோம். ஹுண்டாய், கியா மோட்டார்ஸ், விஜபி இண்டஸ்ட்ரீஸ் ஆகியவை சில குறிப்பிடத்தக்க கஸ்டமர்கள்.

இது தவிர வேறு தொழில்களில் உங்களது நிறுவனம் ஈடுபட்டிருக்கிறதா?

இந்த வகை பேப்ரிக்ஸில் இருந்து லேடீஸ் ஹாண்ட் பேக்குகள் தயாரித்து விஜபி இண்டஸ்டிரிக்கு சப்ளை செய்து வருகிறோம். அவர்களின் Caprese பிராண்ட் ladies handbags-ல் எங்களின் பங்கு பெரிய அளவில் இருக்கிறது. இது தவிர பல ஸ்டார்ட் அப் கம்பெனிகள் எங்களிடம் இருந்து white labelling முறையில் பேக்ஸ் வாங்கி அவர்களின் பிராண்டில் விற்பனை செய்து வருகிறார்கள்.

ஏன் நாமே ஒரு பிராண்ட் பெயரில் ladies handbags விற்பனைக்கு கொண்டு வரக்கூடாது என்ற எண்ணம் ஏற்பட்ட பிறகு தான் எங்களுடைய TRESOR பிராண்ட் உருவானது. தற்போது நீங்கள் மார்க்கெட்டில் பார்க்கும் TRESOR பிராண்ட் ladies handbags எங்களுடையது என்பதில் எங்களுக்கு மிகவும் பெருமை.

எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்புகள் கொடுத்துள்ளீர்கள்?

எங்களுடைய பேக்டரியில் சுமார் 175 பேர் வேலை செய்து வருகிறார்கள். சென்னையில் கேளம்பாக்கத்தில் 35,000 சதுர அடியில் எங்களுடைய தொழிலகம் இருக்கிறது.

நாம் பேசிக்கொண்டிருக்கும் போது அடிக்கடி உங்கள் மெண்டர் மறைந்த திரு. MVM முத்து அவர்களை பற்றி குறிப்பிட்டீர்கள். அவர்களை பற்றி கூறுங்களேன்.

திரு. MVM முத்து அவர்களும் கோவையில் தொழிலதிபராக இருந்தவர்கள். என்னுடைய தொழில் ஆரம்பிப்பதற்கு எல்லாவிதத்திலும் உதவியாக இருந்தார்கள். மேலும், தொழிலில் நான் சோர்வாக இருந்த போதெல்லாம் உற்சாகப்படுத்தியவர்கள். எங்களுடைய தொழிலுக்கு customised machineries தேவை என்ற போதெல்லாம் அதற்கான ஆலோசனைகளை வழங்கி, கோவையிலிருந்து அவற்றை எங்களுக்கு செய்ய உதவியவர்கள்.

குடும்பம் பற்றி...

எனது தந்தையார் நேமத்தான்பட்டி திரு. கே. சொக்கலிங்கம் செட்டியார், தாயார் திருமதி விசாலாட்சி ஆச்சி.

மாமனார் ராயவரம் திரு. SP. குமரப்ப செட்டியார். மாமியார் திருமதி KM. விசாலாட்சி ஆச்சி.

மனைவி திருமதி கே. அடைக்கம்மை எனக்கு எல்லாவிதத்திலும் உதவியாக இருப்பவர். ஒரு பிரச்சனை என்றால் உடனடியாக ஒரு தீர்வு சொல்வதில் கெட்டிக்காரர்.

மூத்த மகன், டாக்டர் கே. சொக்கலிங்கம், தற்போது செட்டிநாடு ஹாஸ்பிட்டல் மற்று ரிசர்ச் சென்டரில் M.S. Ortho படித்து கொண்டிருக்கிறார்.

இரண்டாவது மகன் கே. கார்த்திக்குமார் தற்போது BBA., இறுதியாண்டு பெங்களூர் கிரைஸ்ட் யுனிவர்சிட்டியில் படித்து கொண்டிருக்கிறார்.

உங்களின் பொழுது போக்குகள் / சமூக சேவைகள் / விருதுகள் பற்றி கூறுங்களேன்?

பொழுது போக்கு என்றால் சினிமா பாடல்களை கேட்பது. அதுவும் நான் இளையராஜாவின் அதீத ரசிகன் என்பதில் எனக்கு மிகவும் பெருமை.

கடந்த 23 வருடங்களாக ரோட்டரியில் இணைந்து பணியாற்றி வருகிறேன். இரண்டு முறை துணை கவர்னர் பதவி வகித்திருக்கிறேன்.

கோவையில் நடைபெற்ற IBCN மாநாட்டில் Best Entrepreneur Award – Runner Up கிடைத்தது மனதில் நிற்கும் ஒரு நிகழ்வு.

தொழில் செய்ய விரும்பும் இந்த காலத்து இளைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்ட போது....

அடுத்த தலைமுறைக்கு என்னுடைய மூன்று பரிந்துரைகள்:

+ நேர்மை / நம்பிக்கை முதன்மையானது, இதுவே உங்கள் வாடிக்கையாளர்கள் உங்களுடன் இணைந்து செல்லும் போது அவர்களைப் பாதுகாப்பாக உணர வைக்கும்.
+ ஆட்டோமேஷனில் முதலீடு செய்து, தொழில் நுட்பத்துடன் தொடர்ந்து இருங்கள்
+ ரிஸ்க் எடுப்பதை ஒரு போதும் கைவிடாதீர்கள். இதுவே உங்களின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு உதவும். ■

ஈமெயில் Sethuraman.sathappan@gmail.com,
மொபைல் 9820451259,
இணையதளம் www.startupandbusinessnews.com

குறள் பாட்டு

குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி

அதிகாரம் - 32 (இன்னா செய்யாமை)

320) நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

துன்பப் படாமல் இருக்க வேண்டுமா
துன்புறுத் தாதே மற்றவர் தம்மை
துன்பம் செய்திடில் துன்பமே திரும்பும்
துன்பம் விலகிட உதவிகள் புரிவாய்
துன்பமில் லாத வாழ்க்கை பிறரைத்
துன்புறுத் தாதலால் பெற்ற பயன்அது
துன்பப் படுவது மற்றவர் வருந்த
துயரப் படுத்திய தீவினைப் பயனே.

அதிகாரம் - 33 (கொல்லாமை)

322) பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

தொடரும் அறங்களில் தலையா யதுஎது
தொகுத்த உணவினைப் பகுத்துண்டு வாழ்வதே
அடர்த்தி மிகுந்த அறமெனச் சொல்வோம்
அறமெனில் பகிர்தலே சேர்த்ததைப் பகிர்வோம்
அறங்கள் பற்பல அவற்றில் சிறந்தது
அடைந்த சோற்றினைப் பகுத்தே உண்பது
துறவியாய் உடைமையைத் துறப்பதைக் காட்டிலும்
துறப்பதைப் பிறருடன் பகிர்தலே நல்லறம்.

323) ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

அறங்களில் ஒப்பிலா நல்லறம் என்பது
யாதொரு உயிரையும் கொல்லா மைதான்
அறங்களில் அடுத்ததாய்க் கருதிடும் நல்லறம்
யார்க்கும் தீங்கிலாப் பொய்யா மைதான்
கொல்லா மையால் உயிர்களைக் காக்கலாம்
கொன்றால் பாவம் தின்றால் போகுமோ
பொய்யா மையால் தீவினை தடுக்கலாம்
பொய்யும் உண்மைதான் பிறர்துயர் போக்குமேல்.

326) கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணும் கூற்று.

கொல்லா மைதனைக் கொள்கையாய்க் கொண்டவன்
கூற்றுவ னாலும் வெல்லப் படாதவன்
செல்லாது இவனிடம் எமனின் முற்றுகை
சிறிதும் யார்க்கும் அஞ்சிட வேண்டாம்
அன்புமே லோங்கும் பண்பினால் யாரையும்
அணைத்து மகிழ்வோம் அழிக்க மாட்டோம்
வன்மமில் லாத மனத்தின் போக்கினால்
மறையும் தீமை வராது கொலைப்பகை.

10-ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 10.06.1953

மறைவு : 25.05.2014

"திருப்பணிச் செம்மல்" வேகுப்பட்டி

திரு.சா.அண. முத்துப்பழனியப்ப செட்டியார்

முத்தாய்ப் பிறந்து முதிர்ந்து பழமாகி
முத்துப்பழனியப்பர் என்ற பெயருக்கு இணையாகி
சொத்தாய் இருகோவில் ஊருக்கு உவந்து
வித்தாய் பல தர்மம் விதைத்து வளர்ந்து
நற்தாய் மனமறிந்து நலியாமல் பேணி
கொத்தாய் மணம்பரப்பும் குழந்தைகளைப் பெற்று
சித்தாய் பவனிவரும் பேரன்பேத்தி கண்டு
வற்றாமல் ஊறும் விஜயவாடா தொழிலமைத்து
உற்றார் உறவினருக்கு ஒளிவிளக்காய் திகழ்ந்து
உமையொரு பாகமான மனையாளைப் பிரிந்து
கொடியவன் அவசரமாய் கூப்பிட்டான் என்றதனால்
கூற்றனவன் குரலுக்கு கைலாயம் சென்றீரோ?
குடும்பத்தார் கலங்குகிறோம் மீண்டும் வந்து சேர்வீரா?
குவலயத்தார் நலம்பேணத் திருப்பணிகள் செய்வீரா?
கொண்டாடும் கல்யாண வெங்கடேசர் காண்பீரா?
விண்ணார்ந்த ஆஞ்சநேயர் தரிசனம் பெறுவீரா?

மனைவி : மு. மீனாட்சி

மகள்கள் : S. சொர்ணவள்ளி, T. சிங்காரம், V. கற்பகவள்ளி, S.விஜய் அழகப்பன், S. கிருஷ்ணவேணி, M. சொக்கலிங்கம்

பேரன், பேத்திகள் : S. திருப்பதி, S. முத்துப்பழனியப்பன், V. அஜய் சுப்பிரமணியன், V. அலமு காத்யாயினி, S.அழகு மீனாட்சி, S. ஹன்ஷிகா சொர்ணலெட்சுமி

மற்றும் முத்துப்பழனியப்பா & கோ ஊழியர்கள், விஜயவாடா

திருமந்திரச் சுவை – 35

உயிர்

பூங்குன்றம் இராமசாமி

உயிர் எங்கே உள்ளது..?

உயிர் எங்கணும் நிறைந்து உள்ளது! அஃது அனுபவம் பெற வேண்டி இறைவனால் வழங்கப்பட்டுள்ள உடலைப் பெற்றுள்ளது. 'நல்லது, தீயதை' இவ் உடல் வழி அனுபவித்துத் தெளிகிறது எங்கும் நிறைந்துள்ள நம் உயிர்.

மாறாக, 'உடலில் மட்டுமே உயிர் உள்ளது' எனத் தவறாக நாம் எண்ணிக் கொண்டுள்ளோம்!

இறை எங்கும் நிறைந்துள்ள (வியாபகம்) பொருள். இறைக்கு அடுத்த வியாபகப் பொருள் இறையோடு ஒன்றிக் கலந்துள்ள உயிரே! எனவே, இறையுள் உயிர் உள்ளது; உயிருள் இறை உள்ளது. இதனை உயிர்தான் உணர்வதில்லை! 'நான்' என்கிற ஆணவமே (இறுமாப்பே) உயிரின் உண்மையை உயிரிடத்தே மறைத்துள்ளது.

இதனைத் திருமூலர் பாடல் வழிக் காண்போம்.

அணுவுள் அவனும் அவனுள் அணுவும்
கணுவற நின்ற கலப்பது உணரார்
இணையிலி ஈசன் அவன்எங்கும் ஆகித்
தணிவற நின்றான் சராசரத் தானே (10.2010)

அணுவுள் சிவமும் சிவத்துள் அணுவும் வரையறுக்க வாராது பிரிப்பின்றிக் கலந்துள்ளன. அதுபோல, ஒப்பற்ற இறைவன் அனைத்துப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்துள்ளான்.

கணு: அளவு, வரையறை. இணையிலி: ஒப்பற்ற. தணிவற: இடையீடின்றி.

மேலும் அவரே,

சீவன் எனச்சிவன் என்னவே றில்லை
சீவ னார்சிவ னாரை அறிகிலர்
சீவ னார்சிவ னாரை அறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே (10.2017)

என்கிறார்.

சீவன் (உயிர்) என்றும், சிவன் என்றும் வேறு தோன்றாவண்ணம் சிவன் சீவனோடு கலந்துள்ளான். இருந்த போதும், சீவன் சிவனை அறிவதில்லை. சீவன் சிவத்தை அறிந்தபின், சிவத்தை உணரும் உயிர் சிவமாக ஆகிவிடும். (சிவத்தோடு ஒன்றிச் சிவப் பேரின்பத்தை அனுபவித்தபடி உயிரும் இருக்கும்).

எங்கணும் நிறைந்துள்ள உயிர், இவ் உடல் வழி நல்லது கெட்டதை உணர்ந்து, தெளிந்து, திருந்தி இறையையும் உணர்ந்து, அனுபவித்து அவன் வண்ணமாகிறது.

சீவனார்: இழிநிலைக் குறிப்பு. உயிரது கீழ்நிலை. அந்நிலையில், உயிர் தன்னிலையை உணர்ந்து வருந்தாது 'தான்' எனத் தருக்கி, நிமிரிந்து நிற்கும். தன் இழிபை உணரா உயிரை, 'மரியாதைப் பன்மையால், வஞ்சப் புகழ்ச்சியால் சீவனார்' எனச் சுட்டியுள்ளார். ★

மந்திரம் -17

பெரி.முத்துராமன்

இதுவரை

உயிர், உடலில் குடியிருக்க வருகிறது.

உயிரின் உண்மை தன்மை சத் சித் ஆனந்தம். பல நேரங்களில், உயிர் தன் உண்மை தன்மையை மறந்து, உடலோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்கிறது. அப்போது துன்பங்கள் பெருகத் தொடங்குகின்றன. உடல் என்ற பரிமாணத்திலிருந்து உயிர் விரிவடையும் போது, உயிரின் உண்மை தன்மை புரிய ஆரம்பிக்கும். அத்தகைய விரிவடைதல், உணர்தல், உணர்வுகளின் மூலமே நிகழ்கின்றது. புலன் உணர்வுகளுக்கு அப்பால், மன உணர்வுகளுக்கு அப்பால், உங்களை நீங்களே காண முடிகிறதா? அப்படி காணும் போது, துன்பங்கள் தொலைகின்றன. இந்த பிரபஞ்சங்களை எல்லாம் வழி நடத்தும் இறையாற்றல் என்றும் உள்ளது; அறிவுமயமானது; ஆனந்தம் நிறைந்தது. அந்த ஒரு ஆற்றலைத் தான் நாம் கடவுள் அல்லது இறைவன் என்று போற்றிப் புகழ்கின்றோம். சேர்ந்ததின் தன்மை ஆவது பொருள்களின் இயல்பு. நம் உயிரும் அந்த இறையை உணர்ந்து, இறையை போற்றிப் புகழ்ந்து, அன்பு, கருணையோடு செயல் படும் போது சத் சித் ஆனந்தம் என்ற உண்மை நிலையைப் பெறுகின்றது. சத் என்பது என்றும் உள்ளது; நிலையானது. இதை பரமாத்மா என்று சொல்வோரும் உள்ளனர். சித் என்பது அறிவு; இதை ஜீவாத்மா என்று சொல்வோரும் உள்ளனர்.

ஆனந்தம் என்பது அனைவரும் அறிந்ததே. எல்லை இல்லாத இன்ப நிலை. பரமாத்மாவும் ஜீவாத்மாவும் இணையும் போது உண்டாகும் உணர்வே ஆனந்த நிலை என்று சொல்வோரும் உள்ளனர். இதைத்தான் மாணிக்கவாசகர் திருவாசகத்தில், சொல்லுவார் பொருள் உணர்ந்து சொல்லுவார், செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கு கீழ் பல்லோரும் எத்தப் பணிந்து என்று சொல்கிறாரோ! கவனிக்க வேண்டிய வார்த்தை, 'உணர்ந்து' என்பதே. திருவாசகத்தை உணர்ந்து சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்லும் போது காதலாகி கசிந்து கண்ணீர் மல்க வேண்டும். திருவாசகத்தை இங்கு ஒரு உதாரணத்திற்கு தான் எடுத்துக் கொண்டோம். இந்த நிலை பல சமயங்களில் வாய்க்கப் பெறலாம். அந்த ஆனந்த நிலை நீடித்தால் இறையோடு சேர்ந்ததன் தன்மை வாய்க்க பெறுகிறது.

அருள் நிலை வாய்க்கப் பெற்றால், தனி ஒரு மந்திரம் தேவை இல்லை. அவர்களின் எண்ணம். சொல் என எல்லாமே மந்திரம் ஆகிறது. அதை அடுத்த முறை பார்ப்போம். இப்போது திருமந்திரம் ஒன்றைப் பார்த்து, இன்றைய பகுதியை நிறைவு செய்வோமா! திருமந்திரப் பாடல் எண்: 1789

அவனும் அவனும் அவனை அறியார்.

அவனை அறியில் அறிவாரும் இல்லை

அவனும் அவனும் அவனை அறியில்

அவனும் அவனும் இவன் ஆமே.

இதன் பொருள்

இறைவனும் (அவனும்), இறைவனை உள்ளிருத்திக் கொண்டிருக்கும் உயிர்களும் (அவனும்), அந்த இறைவனை, பரம்பொருளை (அவனை) அறிவதில்லை (அறிவாரும் இல்லை).

அவனை (இறைவனை) அறிந்து கொண்டவர்களும் (அறியில்), அவனை முழுமையாக அறிந்து கொண்டவர் களாக இல்லை. அவ்வாறு அறிந்து கொண்டால், - தனக்குள் உயிராக இருக்கும் இறைவனும், புறத்தே தேடும் இறைவனும், இரண்டும் ஒன்றே என உணர்ந்து இறைவனே ஆகலாம்.

(வளரும்)

ஆரோக்கியம் காக்கும் தன்வந்திரி பெருமாள் திருக்கோயில் கூழிபிறை

கூழிபிறையில் ஆரோக்கியம் காக்கும் தன்வந்திரி பெருமாள் திருக்கோயில் திருப்பணி 03.06.2023ல் துவங்க பெற்றது. கருவறையும் அர்த்தமண்டபமும் ஆகம முறைப்படி முழுக்க கிரானைட் கருங்கற்களால் கற்றளி கோயிலாக அமைக்கப்பட்டு வருகிறது. 21.04.2024 ஞாயிற்றுக்கிழமை கல்லால் ஆன நிலைகளின் கால் கோள் விழா சிறப்பாக நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட நகரத்தார்களும், பக்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விமானம், தரிசன மண்டபம், மடப்பள்ளி, ஓய்வறைகள், நூலகம், பசுமை தோட்டம் என பணிகள் தொடர உள்ளன. திட்ட மதிப்பீடு 100 லட்சத்தை தாண்டக் கூடும். விருப்பமுள்ளவர்கள் கைங்கரியத்தில் பங்கு ஏற்கலாம். அறங்காவலர்கள் சீத்தலைச் சாத்தன், 98424 90447, ராமசுவாமி அழகப்பன் சிங்காரம், 9343936609, நிதி மேலாண்மை - ராமலட்சுமணன், 9944436815, கணக்கு தணிக்கை - ஆடிட்டர்.T. காளை ராஜா, கட்டிட பொறியாளர் - அன்பு இளங்கோ சிவ, கற்றளி கலைஞர் - P. மணிகண்டன்.

கணக்கு விவரம்: தன்வந்திரி பெருமாள் டிரஸ்ட்
இந்தியன் பேங்க், கூழிபிறை
S.B.7492523213 / IFSC IDIB000K170

மகன்லால்
வைரம் & தங்கம்

We Offer Diamonds
Grade by
GIA

Authorised
Forevermark Jeweller
FOREVERMARK

Maganlal
a precious legacy
86 வருடங்களாக பாரம்பரியமிக்க வைரம்
மற்றும் தங்க நகைகள் வாங்க நம்பிக்கை பெற்ற
கைராசியான ஸ்தாபனம்
MAGANLAL MEHTA & CO
Diamond & Gold Jewellery Private Limited
#51, AVM Building, Kallukatti
North, Karaikudi - 630 001
27/43, North Usman Road,
T.Nagar, Chennai - 600 017
we@maganlalmehta.com
www.maganlaldiamonds.com
86 YEARS
CUSTOMER CARE
8881115555

இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு – 7

லெஷ்மணன் அழகப்பன்

லெ. முத்து
இணை இயக்குனர் (ஓய்வு) இஸ்ரோ.

நமது செட்டிநாடு இதழ் எனக்கு அளித்த வாய்ப்பின் மூலமாக இதுவரை ஆறு இஸ்ரோ நகரத்தார்களைப் பற்றியும், அவர்கள் இந்திய விண்வெளி ஆராய்ச்சியில் ஆற்றிய அரும்பணிகள் பற்றியும் எழுதி அறிமுகப்படுத்தினேன். பொதுவாக நகரத்தார்கள் மற்ற சகதொழிலாளர்களும் வியக்கும் அளவுக்கு அறிவு, படிப்பு, கடும் உழைப்பு, நாணயம், தன்னடக்கம் கொண்டவர்கள். இந்த இதழில் அப்படி குணங்களோடு சிறந்த சேவை செய்த தேவகோட்டை தந்த மற்றுமொரு இஸ்ரோ நகரத்தாராகிய திரு. லெஷ்மணன் அழகப்பன் என்ற மின் அணு பொறியாளரை (Electronics Engineer) பற்றி எழுத விழைகிறேன்.

ISROவின் Rocket Research and Development ன் தந்தையாக திகழ்ந்த டாக்டர் விக்ரம் சாராபாய் December 1972ல் மறைந்தவுடன் டாக்டர் சதீஷ் தவான், Emeritus Professor, Aerospace Department, Indian Institute of Science, ISROவின் Chairman ஆக பொறுப்பேற்று டாக்டர் அப்துல் கலாமை SLV3 (Satellite Launch Vehicle)-ன் Project Director ஆக நியமித்தார்.

மேற்படி SLV ராக்கெட்களையும், Satellite களையும், அதன் உட்பாகங்களையும் பரிசோதிக்க ஆந்திர மாநிலத்தில் சூளூர்பேட்டை அருகில் Sriharikota வில் Static Test and Evaluation Complex (STEX) எனும் உலகத்தரம் வாய்ந்த பரிசோதனை நிலையத்தை நிறுவ ISRO திட்டமிட்டு 1972-ல் நிறைய பொறியாளர்களை அந்த திட்டத்தில் சேர்த்தனர். அதில் ஒருவர் திரு. அழகப்பன் அவர்கள்.



மகன் மணிகண்டன், மனைவி முத்துலட்சுமி, அழகப்பன்

இங்கு, ராக்கெட்டுகளில் நடத்தப்படும் சோதனைகளின் முக்கியத்துவம் குறித்து விளக்க விரும்புகிறேன். ராக்கெட்டும் அதன் ஆயிரக்கணக்கான உப பாகங்களும் எந்த அளவில் வேலை செய்ய வேண்டும் என்று முன்னரே நிர்மாணிக்கப்பட்டிருக்கும் (Specifications). அவை ஒவ்வொன்றும் பல்வேறு சோதனைகளுக்கு (Testing) உட்படுத்தப்பட்டு அந்த அளவில் பணி செய்தால் மட்டுமே அவை SLV போன்ற முழு ராக்கெட்டில் பொறுத்த தகுதி உடையவையாக கருதப்பட்டு அது பொறுத்தப்படும். அளவுகளில் வித்தியாசம் வந்தால் அவை பொறுத்த அருகதை அற்றதாக அறியப்பட்டு அவை failure analysis க்கு அனுப்பப்படும்.

இந்த வெற்றிக்கு முக்கியமான சோதனைச்சாலைகளை நிறுவியதோடு அதில் பல வருடங்கள் முழு ராக்கெட்டுகளையும், அதன் பாகங்களையும் சோதனை செய்வதில் திரு.அழகப்பன் பெரும்பங்காற்றியிருக்கிறார்.

திரு. அழகப்பன், De Britto High School, தேவகோட்டையில் 1966ல் SSLCயில் மூன்றாவது மாணவனாகத் தேறி, லயோலாக் கல்லூரியில் 1966-67ல் PUCலும், 1967-72ல் B.E. Electronicsஐ Alagappa Chettiar College of Engineering & Technology, காரைக்குடியில் முதல் வகுப்பிலும் தேர்வு பெற்ற பெருமை உடையவர்.

- இஸ்ரோவில் சேர்ந்தது 25.01.1973.
- பணிகாலம் 13 வருடம் Till (15.03.1985) Deputy Head Instrumentation and Computer Group என்ற உயரிய பொறுப்பு வகித்திருக்கிறார்.

குடும்பம்

பெயர் : L. அழகப்பன்

பிறந்த தேதி : 03.06.1950

வீடு / குடும்பப் பெயர் : கோவிலூரார் வீடு, தேவகோட்டை

விலாசம் : 6, கல்லுப்பட்டியார் தெரு, தேவகோட்டை. 24A, சுப்பிரமணியபுரம் வடக்கு தெரு, தேவகோட்டை - 630302.

கோவில் : இலுப்பக்குடி,

வகை : ஐந்து வீட்டார் வகை, வி. வகை

தந்தையார் : Late. PL. லெஷ்மணன் செட்டியார் (விலாசம்- வி.சித.அ.பழ.லெ) Retired Indian Bank, Ex. Superintendent, United Asian Bank, KL, Malaysia.

தாயார் : Late. L. கமலாம்பாள் ஆச்சி

மனைவி : முத்துலெட்சுமி, மாத்தூர் - மணலூர்

சிறப்பு விபரம் : கோவிலூர் 3வது பட்டம் மடாதிபதி கருணாநிதி சுவாமிகள் என்ற ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகளின் பேரனுடைய பேரன். இந்திய விடுதலை போராட்ட தியாகி திரு. சின்ன அண்ணாமலை அவர்களின் பெரியப்பா பேரன்.

குழந்தைகள் : மகள் A.மீனாக்ஷி B.E(CS), M.B.A

மாப்பிள்ளை : RM. முத்துக்குமார், B.E., IBM.

பேத்தி : M. அபிராம வள்ளி

மகன் : A. மணிகண்டன் B.E., M.S., Software Engineer in California.

- இந்த சோதனைச்சாலைகளில் உள்ள கணிப்பொறிகள், ராக்கெட் சோதனை செய்யும்பொழுது கிடைக்கும் தரவுகளை (Data) கணிப்பொறிகளில் பதிவு செய்யும் மென்பொருள் (Software) ஆகியவைகளை நிர்மானித்து SLV, Apple Satellite, Aryabhatta, Bhaskara, Rohini Satellite போன்றவைகளை சோதனைக்கு உட்படுத்தவும், இந்த Testing Systemsஐ சரியாக வைத்திருக்கவும் (Operation and Maintenance) உதவியிருக்கிறார்.



மகள் மீனாக்ஷி, மாப்பிள்ளை முத்துக்குமார், பேத்தி அபிராம வள்ளி

- முழு ராக்கெட்டை Test stand ல் சோதனை செய்யவும் அதன் பல பரிமாணங்களை அளப்பதிலும் அரும்பணியாற்றி இருக்கிறார்.
- மற்றும் ராக்கெட் பறக்கும் போது ஏற்படும் Vibration, Sound level, Vacuum, வெப்பநிலை, Humidity, Centrifugal force இவைகளை அளப்பதிலும் ஈடுபடுத்திக் கொண்டு இரூக்கிறார்.
- DFVLR என்று சொல்லக்கூடிய ஜெர்மனியின் ராக்கெட் ஏவுதளத்தில் ராக்கெட் விண்வெளி வெற்றிடத்தில் செல்லும்போது ஏற்படும் செயல்பாடுகளை சோதனைச்சாலையில் சோதனை செய்யும் முறைகளைப்பற்றி பயிற்சி பெற்றிருக்கிறார்.
- அது போல் ஒரு சோதனைச்சாலையை Sriharikota வில் அமைத்து உபயோகத்திற்கு கொண்டு வந்தும் இருக்கிறார்.
- SLV-யின் 88 உப ராக்கெட்டுகளை சோதனைக்கு உட்படுத்திய பெருமைக்குரியவர்.
- ராக்கெட் சோதனைகளிலேயே தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் என்று சொன்னால் மிகையாகாது. அதுவும் இந்த தொழில்நுட்பங்கள் நம் நாட்டில் இல்லாத போது இவைகளை முதன்முறையாக நிர்மானிப்பதென்பது மிகப்பெரிய விஷயம்.

இந்த பெருமைகளுக்கெல்லாம் உரிய திரு.அழகப்பன் மிக அடக்கமானவர். இவருடைய மனைவியார் முத்துலெட்சுமி ஆச்சி குடும்பப் பாங்கானவர். கணவருடைய அலுவலகப்பணிகள் சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்திருக்கிறார். இந்த தம்பதிகளுக்கு ஒரு மகளும், ஒரு மகனும் உள்ளனர். ♦

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 34

நார்த்தாமலையும் நகரத்தார்களும்

மா.இளங்கோ, குழிபிறை, 9842260955

நார்த்தாமலையும் நகரத்தார்களும் என்ற தலைப்பில் எழுதப்படும் இயலின் மூன்றாவது பகுதி இந்த இதழில் வெளியாகிறது. நார்த்தாமலையை மையப்படுத்தும் நிறைவுப் பகுதியும் ஆகும்.

இருவகை நகரத்தார்கள்

இன்றைய கொடும்பாளூரும், இலக்கியங்களில் குறிப்பிடப்படும் கொடும்பாளூரும் ஒன்றே. சிலப்பதிகாரம் "கொடும்பை நெடுங்குளக்கோட்டம் புக்கால்" - எனக் கொடும்பாளூரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. கோவலன் கண்ணகியின் வரலாறு நிகழ்ந்தது சற்றொப்ப 1800 ஆண்டுகளுக்கு முன்னர் என ஆய்வாளர்கள் பலரும் கருதுகின்றனர். பெரியபுராணம் "குருகுறங்கும் கோனாட்டுக் கொடிநகரம் கொடும்பாளூர்" எனக் குறிப்பிடுகிறது. கோனாடு என்றழைக்கப்படும் சிறிய நிலப்பரப்பிற்குத் தலைநகராக கொடும்பாளூர் விளங்கியதாக பெரியபுராணம் தெரிவிக்கிறது. ஆக கொடும்பாளூர் என்ற சிறப்பு மிக்க ஊர் ஏறத்தாழ 1800 ஆண்டு கால வரலாற்றைக் கொண்டிருக்கிறது. இன்று கொடும்பாளூர் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்தில் உள்ளது. இங்குள்ள கொடும்பாளூர் முசுகுண்டேசுவரர் கோயில், முன்மண்டபத்தில் உள்ள கல்வெட்டில் இருவகை நகரத்தார் என்ற குறிப்பின் மூலம் 10-ஆம் நூற்றாண்டில் நகரத்தார்கள் மற்றும் வணிகக் குடிகள் கொடும்பாளூரில் இருந்தனர் என்பது தெளிவாகிறது.

நார்த்தாமலைக்கு அருகில் இருப்பதால் கொடும்பாளூர்க் கல்வெட்டு வரிகளையும் (பு.ச.க. 82) ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

வரி 1 - உடையார் மதுராந்தகன் சுந்தரசோழனான
வரி 4 - கொடும்பாளூர் இரண்டு வகை நகரத்தாரும் இருந்து ஆராய்ந்து என்னன.....

இரண்டு வகை நகரத்தார் என்று இக்கல்வெட்டு குறிப்பிடுவது கொடும்பாளூர் மணிகிராமத்தாரையும், ஐநூற்றுவரையும் என்பதும், அவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்களே என்பதும் கல்வெட்டாய்வாளர் மேலப்பனையூர் திரு. கரு. இராசேந்திரன் ஐயா அவர்களின் உறுதியான முடிவாகும்.

நார்த்தாமலையில் வணிகக்குடிகளின் சமூகப்பணிகள்:

தெலிங்குகுல காலபுரத்தில் இருந்த நகரத்தார்கள் நில அளவை செய்து பலருக்கும் பிரித்தளித்திருக்கிறார்கள், கோயில்களில் சிவபெருமானின் அன்றாட நீராடல்களுக்காக, ஒரு நாளுக்கு 6 நாழி நெல் வீதம் நல்கைகள் வழங்கியுள்ளனர், இசைக்கருவிகள் இசைக்க அளித்த நல்கை பற்றிய குறிப்பு உள்ளது.

முதலாம் இராசராசனின் 28-வது ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு 'தெலிங்கு குலகாலபுரத்து நகரத்தார்கள்' கோயிலுக்கு நன்கொடைகள் மற்றும் திருமஞ்சனக்குடம் கொடுத்ததைப் பற்றி பதிவு செய்திருக்கிறது. திருமலைக் கடம்பர் கோயில் தம்பிராட்டியாருக்கு உச்சிப் பொழுதுக்கு அமுது படைக்க நெல் வழங்கியதைக் குறிக்கிறது.

தெலிங்குகுலகாலபுரம் என்றழைக்கப்பட்ட நார்த்தாமலை - குலோத்துங்க சோழபட்டினம் எனப் பெயர் மாற்றம் பெற்று அழைக்கப்பட்டிருக்கிறது.

பாண்டியர் படையெடுப்பு:

கி.பி.1178 முதல் சோழநாட்டில் மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதே நேரத்தில் பாண்டிய நாட்டில் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாறவர்மனின் 9 மற்றும் 15-ம் ஆட்சியாண்டுகளில் மாறவர்மனின் பாண்டியர் படை பிரான்மலை வழியாக

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்
செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்
எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும் வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.
தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி
8508392087 / 8778527165 / 8760742590
ADVT

கொடும்பாளூர் முசுகுண்டேசுவரர் கோயில்

சோழநாட்டின் மீது போர் தொடுத்தது. எனவே, நார்த்தாமலையிலிருந்த நகரத்தார்கள் நிலங்களை விற்றுவிட்டதாக 1228-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு குறிப்பிடுகிறது. குலோத்துங்கசோழ பட்டணத்து நகரத்தார்கள் வழங்கிய நன்கொடை பற்றிய பதிவு, சோனாடு வழங்கிய சுந்தரபாண்டியனின் 1226-ஆம் ஆண்டுக் கல்வெட்டு. 'இன்னகரத்தோம், சோழச்சிலைசெட்டி எழுத்து குலோத்துங்க சோழபட்டணம், நகரத்தார்கள்' என அங்கு வாழ்ந்த நகரத்தார்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. பிற சமூகங்களுடன் உள்ள உறவு நெருக்கமாக இருந்ததைப் புரிந்து கொள்ள முடிகிறது. 1226-ல் நன்கொடைகள் பற்றியச் செய்திகள் கிடைக்கின்றன. ஆனால் 1228-ல் அங்கிருந்த வணிகச் சமூகத்தினர் நிலங்களை விற்றுவிட்ட செய்தியினை நாம் அறிந்து கொள்கிறோம்.

நகரம் என்ற அமைப்பு என்னவானது?

கி.பி.1200 ஆம் ஆண்டின் தொடக்கம் முதல் (13-ஆம் நாற்றாண்டு) நகரம் என்ற அமைப்பு நீடித்திருந்தது. கோயில்களின் அன்றாடக் கடமைகளை நிறைவேற்ற இறையிலியாகக் கொடுக்கப்பட்ட நிலங்களின் வருவாயே பயன்படுத்தப்பட்டது. நகரத்தில் வாழ்ந்தவர்கள் தனியாக எதுவும் கொடுக்கவில்லை என ஆய்வாளர் திரு. திருமலை அவர்கள் குறிப்பிடுகிறார்கள். நார்த்தாமலை மற்றும் அதனையொட்டிய கோயில்களைப் பராமரிக்க அங்கு கிட்டிய வருவாயே பயன்படுத்தப்பட்டது என்றாலும், கோயில்களை செயல்பாட்டில் வைத்துக் கொள்ளும் பொறுப்பை அங்கிருந்தவர்களே மேற்கொண்டிருக்கிறார்கள். மன்னர்களின் பெயர்கள் கல்வெட்டில் இருந்தாலும், மன்னர்களின் உதவியைப் பெற்றதாகத் தெரியவில்லை. குலோத்துங்க சோழபட்டினம் தன்னாட்சி பெற்ற அமைப்பாகவே இருந்திருக்கிறது. பாண்டியர் படையெடுப்பிற்குப்பின் நகரியம் என்ற நிலையில் இருந்து மாறி 'ஊர்' என்று அழைக்கப்பட்டிருக்கிறது. 13 மற்றும் 14-ஆம் நூற்றாண்டுகளில் இசுலாமியர்களின் படையெடுப்பால் அமைதியின்மை ஏற்பட்டதும், அதனால் மக்கள் வெளியேறியதும் 'நகரம்' என்ற அமைப்பு நலிவடையக் காரணமாக இருந்திருக்கலாம்.

நகரத்தார்கள் பெயர் இல்லை:

நார்த்தமலை திருமலைக்கடம்பர் கோயிலில் உள்ள திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகரபாண்டியன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டில் இருந்து ஒரு முக்கியமான செய்தியைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இக்கல்வெட்டில் ஊரார்கள் நன்கொடை கொடுத்தனர் என்று வெட்டப்பட்டுள்ளது. மற்ற கல்வெட்டுகளில் வருவது போல நகரத்தார், நகரத்தோம், செட்டி என எந்த வணிகக்குடியினரின் பெயர்களும் இல்லை. எனவே வணிகக்குடியினர் நார்த்தாமலையில் இல்லை என்ற முடிவுக்கு நாம் வர வேண்டியுள்ளது. (பு.ச.க.503 பக். 365) குலசேகரபாண்டியன் மற்றும் சுந்தரபாண்டியன் காலத்திலேயே நகரத்தார்கள் நார்த்தாமலையை விட்டு வெளியேறி விட்டனர் என நாம் கருத வேண்டியுள்ளது.

நார்த்தாமலையிலிருந்து இடப்பெயர்வு செய்தோர்கள் அனைவரும் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் என்ற குடையின் கீழ் வந்திருக்க வாய்ப்பில்லை. வேறு பெயர் கொண்ட வணிகச் சமூகங்களாகவும் மாறி இருக்கலாம். சில சமூகங்கள் பெயர் மாற்றம் பெற்றும், சில சமூகங்கள் பெயர் மாற்றம் இன்றி பழைய பெயர்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களின் வரலாற்றையும், வாழ்க்கை முறைகளையும் ஆய்வு செய்யும் பொழுது நார்த்தாமலையுடன் அவர்களுக்கு உள்ள நெருக்கம் வெளிப்படும். நாட்டுக்கோட்டை நகரத்தார்களை மட்டும் இந்நூல் மையப்படுத்துவதால் பிற சமூகங்களின் வரலாற்றை ஓரளவே, தேவைக்கேற்பத் தொட்டுச் செல்கிறது. ஆனால் நகரத்தார்களின் தொன்மையான வாழ்விடங்களில் நார்த்தாமலையும் ஒன்று என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

(வரலாறு வளரும்)

நகரத்தார் நலன் அமைப்பின் முக்கியமான வித்து

முத்தாத்தாள் முத்துகுமார்

இன்று நகரத்தார் ஊர்கள் பலவற்றிலும் அறியப் பட்டவராக, பெரும்பான்மையான நகரத்தார்களுக்கு நன்கு அறிமுகமானவராக இருக்கிறார், அரிமழத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற காவல்துறை கண்காணிப்பாளர் முத்துகுமாரின் மனைவி முத்தாத்தாள் ஆச்சி. 'நகரத்தார் நலன்' என்னும் நம் சமுதாய நலனுக்கான டிஜிட்டல் போர்டல், இவருக்கான நல்லதோர் அடையாளத்தை வழங்கியுள்ளது. பரந்த மனமும், உதவும் மனப்பான்மையும் கொண்ட முத்தாத்தாள் ஆச்சி, தன்னால் இயன்ற சிறு சிறு உதவிகளைப் பிறருக்கு தயங்காமல் செய்பவர். எனவே 'நகரத்தார் நலன்' என்னும் அரசு சாரா தன்னார்வ அமைப்பில் முழு ஈடுபாட்டுடன் தன்னாலான பணிகளைச் செய்து வருகிறார்.

"நகரத்தார் நலன்' என்னும் என்.ஜி.ஓ.வில் உங்களுடைய பங்கு என்ன ஆச்சி? இப்படி ஓர் அமைப்பைத் தொடங்கலாம் என்ற போது, உங்கள் யோசனை என்னவாக இருந்தது?"

"குறிப்பிட்டு எதையும் நான் செய்தேன் என்று சொல்ல முடியாது. ஆனால் இயல்பிலேயே கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவள் நான். அது பணமாக மட்டுமல்லாமல் என்ன உதவியாக இருந்தாலும் செய்ய வேண்டும் என்று சிறு வயதிலிருந்தே பொதுவாக நினைப்பேன். நகரத்தார் என்று இல்லை, யாராக இருந்தாலும் உதவ வேண்டும் என்பதே என் குறிக்கோள். என் கணவர் பணியில் இருந்தவரை, இருவருமே தனித்தனியாக உதவிகளைச் செய்து வந்தோம். யாராவது உடல்நிலை சரியில்லை என்றால் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது, மருத்துவமனையில் உடன் தங்கியிருப்பது போன்ற சிறு சிறு உதவிகளை நான் செய்வேன். அவர்கள் டிபார்ட்மெண்ட் மூலமாகச் செய்வார்கள். இருவருக்கும் டிராக் வேறு. அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு, 'இருவரும் சேர்ந்தே செய்யலாமே' என்று முடிவு செய்தோம். அப்போது நான், ஏன் நகரத்தார்களுக்கு மட்டும். எல்லோருக்குமே செய்யலாமே!' என்று என் கருத்தைக் கூறிய போது, 'முதலில் ஏதாவது ஒன்றை மட்டும் எடுத்து ஒழுங்காகச் செய்வோம். நமது சமூகத்தை முதலில் எடுத்துக் கொள்வோம்' என்றார்கள். இப்படித் தொடங்கியது தான் 'நகரத்தார் நலன்' அமைப்பு.

பிரேமா நாராயணன்

கோவிட் தொற்றுக்கு முன்பே, நம் பிள்ளைகளுக்கு நம் கலாச்சாரத்தைச் சொல்லிக் கொடுக்கும் முயற்சியில், அருண் செங்குட்டுவன் அண்ணனின் ஆலோசனையில், மதகுபட்டி எம்.எஸ்.முத்துராமன் அண்ணனுடன் இணைந்து பணியாற்றினோம். அதன் பிறகு 'நகரத்தார் நலன்' தொடங்கிய போது, என் கணவர், நான், பூலாங்குறிச்சியைச் சேர்ந்த இன்னவேட்டிவ் அண்ணாமலை, இன்னும் ஒத்த கருத்துடைய கொத்தமங்கலத்தைச் சேர்ந்த பழநியப்பன் என்ற தியாகு, காரைக்குடி எம்.சிடி.ஆர்எம். வள்ளி ஆச்சி, கண்டரமாணிக்கத்தைச் சேர்ந்த கல்யாணசுந்தரம் ஆகியோர் இணைந்து செயல்பட்டோம். இதில் என்னுடய பங்கு என்று பார்த்தால், செட்டிநாட்டு ஊர்கள் பலவற்றுக்குச் சென்று, உண்மையிலேயே தேவை உள்ளவர்களையும், உதவி தேவைப்படுகிறவர்களையும் கண்டறியும் பணியை நான் செய்தேன்".

"அப்படி நீங்கள் பல ஊர்களுக்குச் சென்றபோது, உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?"

"பல குடும்பங்கள் பெண்களுக்குத் திருமணம் செய்ய முடியாமல் கஷ்டப்படுவது ஒரு புறம் என்றால், திருமணமே ஆகாத, 60, 70 வயதைத் தாண்டிய ஆச்சிகளின் நிலைமைதான் மிகவும் பரிதாபமாக இருந்தது. சாப்பாட்டுக்கே வழியில்லாமல் கஷ்டப்படுவோர் பலரைப் பார்த்தேன். மனைவியை இழந்த ஆண்களின் நிலையும் அப்படித்தான். அவர்களின் பெண் பிள்ளைகள் கொடுக்கக் கூடிய நிலையில் இருந்தாலுமே கூட, அவர்களிடம் கேட்பதற்கும், வாங்குவதற்கும் சங்கோஜப்படுகிறார்கள். நானே சில செட்டியார்களிடம் கேட்டிருக்கிறேன், 'எங்களிடம்

ஆவிச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற திரு. சொ. சொ.மீ. அவர்களின் நான்கு நாள் வாழ்வுக்கு வழிகாட்டும் தமிழ் பயிலரங்கில் கல்லூரி செயலாளர் திரு. AVM. K. சண்முகம் மற்றும் அனிதா சண்முகம் ஆகியோருடன் பயிலரங்க ஏற்பாட்டாளர்கள் திரு. முத்துகுமார் – திருமதி முத்தாத்தாள். உடன் திரு. சுப்புசுந்தரம் தம்பதியர் உள்ளனர்.

வந்து உதவி கோருவதை விட, பிள்ளைகளிடம் வாங்கிக் கொள்ளலாமே' என்று. அதற்கு, "புள்ளைக நல்லாத் தருவாக. இருந்தாலும் பொம்பளைப் புள்ளைகளைச் செஞ்சு கொடுத்துட்டு, அவுககிட்ட எப்படி பணம் வாங்குறது" என்பதுதான் அவர்களின் பதில். ஆதரவில்லாத, விவாகரத்தான பெண்களும், நிரந்தர வேலை இல்லாத ஆண்களின் மனைவிகளும் கூட கஷ்டப்படுகிறார்கள்.

அடிப்படையில் உணவுக்கு சிரமப்படுபவர்களுக்குத் தான் முன்னுரிமை கொடுத்தோம். படிப்பு, மருத்துவ உதவி எல்லாம் அதற்கு அப்புறம்தான். சில இடங்களில் சிலரைப் பார்த்த போது, அப்படியே கையில் இருப்பதை எல்லாம் கொடுத்து விடலாமா என்று கூடத் தோன்றியது. அந்தளவுக்கு மோசமான நிலையில் கூட, மிகக் குறைவான அளவில் நகரத்தார்கள் இருக்கின்றனர். அப்படி இருந்தும் கூட வைராக்கியமாக இருக்கிறார்கள். அதுதான் நம் இனத்துக்கான முத்திரை ஆயிற்றே! உணவுக்குக் கஷ்டப்படும் ஒன்றிரண்டு பேர்களை, டோனர்களைப் பிடித்து, முதியோர் இல்லத்தில் சேர்ப்பதற்கு ஏற்பாடுகளெல்லாம் செய்து முடித்த நிலையில், கடைசி நேரத்தில் 'நான் வரலை' என்று மறுத்து விட்டனர். ஒரு செட்டியாரை ஹோமில் விடுவதற்கு ஏற்பாடு செய்த பின்னர், அவருடைய உறவினர் தினமும் உணவு கொடுக்க முன்வந்தனர். இது போல நெகிழ்ச்சியான அனுபவங்கள் பல ஏற்பட்டன."

"நகரத்தார் நலன்" அமைப்பில் இப்போது கொடையாளிகளையும். பயனாளிகளையும் ஓரளவுக்கு நெறிப்படுத்திவிட்டீர்களா? இரு பிரிவிலும் சுமார் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?"

"ஆமாம். சரியான நபருக்கு உதவி போய்ச் சேர வேண்டுமென்பதில் கவனமுடன் செயல்படுகிறோம். உதவி தேவைப்படுபவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடக் கூடாது இல்லையா. தவறிப் போய் கூட, தேவையை சமாளித்துக் கொள்ளும் நிலையில் இருப்பவர்களுக்கு உதவி போய்விடக் கூடாது என்பதிலும் விழிப்புடன் இருக்கிறோம். அவர்களிடமே சொல்லி விடுவோம். 'நீங்க உதவி கேக்கிறீங்க ஆச்சி. உங்களை விட சிரமப்படும் ஒரு குடும்பம் உதவி கேட்டிருக்கு. யாருக்கு ஆச்சி கொடுக்கிறது?' என்று கேட்டால், 'அவுகளுக்கே கொடுத்துருங்க' என்று பெருந்தன்மையாகப் புரிந்து கொண்டு, சொல்கிறார்கள்.

கொடையாளிகள் 112-க்கும் மேற்பட்டோர் இருக்கிறார்கள். அதற்கு இணையாகப் பயனாளிகளும் உள்ளனர். உணவு மட்டுமே 58 பேர்களுக்குப் போகிறது. மற்றும் பலருக்குப் பிற உதவிகள் போயிருக்கின்றன. இன்னும் பட்டியலில் பலர் இருக்கின்றனர். உணவு, கல்வி, மருத்துவ சிகிச்சை – இவற்றுக்குத்தான் நன்கொடை வழங்குகிறோம். திருமணங்களுக்கு அல்ல. திருமணங்களுக்கு உதவி செய்ய ஏற்கெனவே பல சங்கங்களும் அமைப்புகளும் இருக்கின்றன. மிகவும் உதவி தேவைப்படுகிற திருமணங்களுக்கு, 'நகரத்தார் நலனு'க்கு அப்பாற்பட்டு, தனிப்பட்ட முறையில் உதவ ஏற்பாடு செய்கிறோம்.

"நகரத்தார் நலனைப் பொறுத்தவரை, உள்நாடு மற்றும் வெளிநாட்டில் பணிபுரியும் இளையவர்கள் 'டோனர்களாக' இருக்கின்றனர். நடுத்தர வயதினரும் இருக்கின்றனர். அயல்நாட்டு இந்தியர்கள் பலருக்கு நாங்கள் சொல்லிச் சொல்லி, இப்போது இணைந்திருக்கின்றனர். ஏனெனில், அயல்நாட்டில் இருந்து வரும் போது, இன்னும் கொஞ்சம் தாராளமாகச் செய்யலாமே என்றுதான். கொடையாளிகளில் பலர் முன்பின் அறிமுகமே இல்லாதவர்கள். நாம் சொல்வதை மட்டுமே நம்பி, முகத்தைக் கூடப் பார்க்காமல் பணம் அனுப்புகின்றனர். அடுத்து, உள்ளூர் பிரதிநிதிகளைப் பற்றி கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். 'நகரத்தார் நலன்' பணிகளில் உள்ளூர் பிரதிநிதிகள் நிறையவே உதவியிருக்கின்றனர். பயனாளிகளின் உண்மைத் தன்மையை அறிவதற்காக, அவர்களைப் பற்றி என்ன தகவல் கேட்டாலும் உடனடியாக விசாரித்துச் சொல்லி விடுவார்கள். அதையும் தாண்டி சந்தேகம் வரும்போது தான் நேரில் போய் பார்ப்போம். வெளியே தெரியாமல், மிகவும் வறுமையில் வாடும் நபர்களோ, குடும்பமோ இருந்தாலும், உள்ளூர் பிரதிநிதிகள் மூலம் தான் தெரிய வருகிறது. அவர்களுடைய இந்த உதவிக்கு பெரிய நன்றி சொல்ல வேண்டும்!"

"இந்தப் பணியில் ஈடுபட்ட பிறகு உங்கள் மனநிலை எப்படி இருக்கிறது? சமுதாயத்துக்கு உதவும் இந்த எண்ணத்தை நம்முடைய குழந்தைகளிடம் கொண்டு செல்லும் திட்டம் எதுவும் இருக்கிறதா?"

Dr.மணிஸ் பல் மருத்துவமனை

No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் 1.30 வரை
மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு-முன்-பதிவு-செய்தவர்களுக்கு-மட்டும்

இலவச பல் பரிசோதனை செய்யப்படும்

பல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற Dr.மணிஸ் பல் மருத்தவமனைக்கு வருகை தாருங்கள்.

பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும் இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்

Dr.S.மணிகண்டன்,BDS., MBA(HM)
9551624126 / 7904079923

"மிக மிக நிறைவாக இருக்கிறது. நம் இனத்தில் கஷ்டப்படுகிறவர்களே இல்லை என்ற நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் என் ஆசை. குழந்தைகளைப் பொறுத்தவரை, அவர்களுக்கு முதலில் கற்பிக்க வேண்டியவை நம்முடைய பாரம்பரியத்தையும், பழக்கவழக்கங்களையும்தான். குழந்தைப் பருவத்திலேயே இந்த இரண்டையும் அவர்கள் மனதில் பதிய வைத்துவிட்டால், 'உதவி செய்' என்று தனியாக அவர்களுக்கு சொல்லித் தரவேண்டியதில்லை. நம்முடைய பாரம்பரியத்திலேயே தர்மம் செய்வதும் அடங்கிவிடுமே! நம்முடைய சொத்துக்களான ஆன்மிகம், கலாசாரம் போன்ற நம் சிறப்பியல்புகள் அனைத்தையும் முழுமையாக எந்த விதத்திலாவது சிறு வயதிலேயே அவர்களிடன் கொண்டு சேர்த்துவிட வேண்டும். அதற்கான முயற்சிகளில்தான் என் கணவர் இப்போது தீவிரமாக இறங்கியுள்ளார்கள்."

"இது தொடர்பாக நம் பெற்றோர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?"

"குடும்பத்தவர்களே நம் இனத்துக்கான பாரம்பரிய விஷயங்களை எல்லாம் சொல்லிக் கொடுத்துவிட வேண்டும். அதைவிட முக்கியமானது, பெற்றோர்கள் மற்றும் வீட்டில் இருப்பவர்கள், மேற்சொன்ன விஷயங்களை முதலில் கடைபிடிக்க வேண்டும். அம்மா, அப்பா, அப்பத்தா, அய்யா என வீட்டில் இருக்கும் பெரியவர்களைப் பார்த்துத்தான் குழந்தை கற்றுக்கொள்கிறது. அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்துதான் அந்தப் பிள்ளைகள் வளரும். வெளியிலிருந்து வரும் விருந்தாளி ஒருவரை மட்டமாகப் பேசுவது, வசதி இல்லாதவர்களை அலட்சியப்படுத்துவது. இவற்றையெல்லாம் பிள்ளைகளும் பின்பற்றுவார்கள் என்று நினைவில் கொள்ள வேண்டும். 'இதெல்லாம் தப்பு இல்லை' என்ற எண்ணம் அவர்களுக்குள் வேரூன்றி விடும். ஒரு பெற்றோர் தன் பிள்ளைகளுக்கு நல்ல எண்ணங்களைக் கொடுக்க வேண்டும். மூத்தவர்களுக்கு மரியாதை செலுத்தவும், உறவுகளை மதிக்கவும் கற்றுத் தரவேண்டும். நமக்கு ஒரு சொந்தத்தைப் பிடிக்கவில்லை என்றால் கூட, குழந்தைகள் முன்னிலையில் அதைக் காண்பிக்கக் கூடாது. குழந்தைகளின் முன்னிலையில் உறவினர்களைத் தவறாகப் பேசுவதையும் தவிர்க்க வேண்டும். தாய் தந்தையே கூட, பெற்ற மக்களுக்கு முன்பு சண்டையிடுதல் கூடாது. அதற்காக குடும்பம் என்றால் சண்டை இல்லாமல் இருக்காது. பிள்ளைகளுக்குத் தெரியாமல் போட்டுக் கொள்ள வேண்டும். நாங்களே, எங்கள் பிள்ளைகளின் சிறு வயதில், ஏதேனும் வாக்குவாதம், பிரச்னை என்றால் அவர்களை வெளியே விளையாட அனுப்பி விட்டோ அல்லது வீட்டுக்குள் வேறொரு அறைக்கு அனுப்பிவிட்டோ தான் பேசுவோம்.

அதே போல, நம்மை விட கீழே இருப்பவர்களைக் காண்பித்து, 'இவர்களை விட இறைவன் நம்மை நல்லா வச்சிருக்கான். நமக்குத் தேவையானது கிடைத்திருக்கிறது. அதை வைத்து மகிழ்ச்சியாக வாழ வேண்டும்' என்று சொல்லிக் கொடுத்திருக்கிறோம். அப்போதெல்லாம் 27-டி பஸ்ஸில் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு சித்ரா தியேட்டர் வழியாகப் போகும் போது, அந்த ஏரியா முழுவதும் குடிசைகளாக இருக்கும். அவற்றைக் காண்பித்து, "இவங்களை எல்லாம் பாருங்கப்பா. நாம எவ்வளவு நல்லா இருக்கோம்னு புரியும்" என்று சொல்லுவேன். நம்மை விட உயர்ந்தவர்களை பண விஷயத்தில் உதாரணம் காட்டுவதில்லை. ஆனால் அதே சமயத்தில், கல்வி, கடுமையான உழைப்பு, நல்ல எண்ணங்களுக்கு உதாரணம் காட்டும் போது, "அவங்களைப் பாரு. எவ்வளவு உயர்ந்த எண்ணம்!" என்று காட்ட வேண்டும்." என்று தன் குழந்தை வளர்ப்பு அனுபவத்தைக் கூறுகிறார் முத்தாத்தாள்.

(தொடரும்)

இயற்றமிழ் இயற்பியல் வல்லுநர் மெ.மெய்யப்பன்

நகரத்தார்கள் கலை, இலக்கியம், அறிவியல், பண்பாடு இவற்றில் சிறந்து விளங்குவது ஒன்றும் புதிது இல்லை என்றாலும் இயற்பியல், கணிதம் இவ்விரண்டையும் இரண்டு கண்களாக பாவிப்பவர் இளையாற்றங்குடி ஒக்கூர் பிரிவைச் சார்ந்த காரைக்குடி தவக்கை வீட்டின் தவப் புதல்வர் முனைவர் மெ. மெய்யப்பன்.

ஆறாவயல் நாலுவீட்டுக்காரர் வீட்டில் திரு. செந்தில்நாதன் அவர்களின் மகள் தனலெட்சுமி அவர்கள் இவரது மனைவி. மூத்த மகள் காவேரி சிங்கப்பூரில் ஆசிரியப் பணிபுரிகிறார். அவரது கணவர் திரு சோலை பொறியியலாளர். அவர்

பாரதியின் புரவலர் திரு வை.சு. சண்முகம் செட்டியார் அவர்களின் பேரன் திரு ராஜா சண்முகம் அவர்களின் மகன் ஆவார். மகன் கண்ணா மெய்யப்பன், ஐ.டி துறையில் முக்கிய பொறுப்பு வகித்து வருகிறார்.ரிச்மண்ட் வாஷிங்டன் DC யில், நாட்டரசன் கோட்டை பள்ளிக்கூடத்து செட்டியார் வீட்டில் பிறந்த தன் மனைவி மீனாட்சியுடன் அமெரிக்காவில் வசித்து வருகின்றார். பேரன் செந்தில் மெய்யப்பன் பாஸ்டன் நகரில் கல்வி கற்று வருகிறார். இளைய மகள் மீனாள் அவர் கணவர் அரு.ஆனந்த். இவர் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்களின் மகள் வயிற்றுப் பேரன் ஆவார். மூத்த மகளின் மகள்கள் சோலை மீனா, சோலை லெட்சுமி பிரியா. இளைய மகளின் மகன் ஆ.அருணாச்சலம் .எல்லோரும் சிறந்த கல்வியாளர்கள்.

முனைவர் மெய்யப்பன் அவர்களின் மூன்று பிள்ளைகளும் பல்கலைகழகத்தில் தரவரிசைப் பட்டியலில் இடம் பிடித்தவர்கள். அதிலும் அவரது மகன் முதல் இடம் பெற்றுள்ளார். காரைக்குடி ரெங்க வாத்தியார் ஏட்டுப் பள்ளியில் தொடங்கிய முனைவர் மெய்யப்பன் அவர்களின் கல்விப் பயணம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் வித்யாலயாவில் உயர்நிலை கல்வி கற்று அழகப்பா கலைக் கல்லூரியில் இயற்பியல் துறையில் இளமறிவியல் (1963-1966) கற்றுத் தேர்ந்ததும் தந்தையின் விருப்பப்படி வங்கிப் பணியில் சேர்ந்த மெய்யப்பன் அவர்கள் தன் தேடல் வேறு என்பதை உணர்ந்ததால் தன் தந்தையிடம் மேல் படிப்பு படிக்க வேண்டிய தன் ஆர்வத்தை எடுத்து சொல்ல, அவரது கல்விப் பயணம் மீண்டும் தொடங்கியது. சிதம்பரம், அண்ணாமலை பல்கலையில் ஸ்காலர்ஷிப் பெற்று மூதறிவியல் பட்டமும் மற்றும் முனைவர் பட்டமும் பெற்ற பின் அரசு கல்லூரியில் பணியில் சேர்ந்து 33 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார்.

கும்பகோணம், தஞ்சாவூர், காரைக்குடி இந்த மூன்று கல்லூரியில் பணியாற்றிய போது இவர் தன் சுய ஆர்வத்தால் தனது அறிவின் திறம் பிறருக்கும் கிடைக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் கிட்டத்தட்ட 86 நூல்கள் (தமிழில் 77 ஆங்கிலத்தில் 9 .) 350 மேற்பட்ட அறிவியல் கணிதம் சார்ந்த கட்டுரைகள் எழுதி உள்ளார். முதன் முதலில் கல்லூரி மாணவனாக இருந்த போதே மே 1964 இல் கோவை PSG அறக்கட்டளை சார்பாக வெளியிடப் பட்ட கலைக் கதிரில் புற ஊதாக் கதிர்கள் என்னும் இவரது கட்டுரை வெளிவந்து பலரின் பாராட்டைப் பெற்றது. அது கொடுத்த ஊக்கத்தின் காரணமாக அவினாசி லிங்கம் ஹோம் சயின்ஸ் கல்லூரி வெளியிட்ட விஞ்ஞானச் சுடர் பத்திரிக்கை மற்றும் அறிக அறிவியல் என்னும் காரைக்குடி சிக்கிரி வெளியிட்ட பத்திரிக்கையிலும் பல கட்டுரைகள் எழுதி உள்ளார்.

அமேசான் கிண்டிலில் இவரது 30 நூல்கள் வெளிவந்துள்ளன. நியூ செஞ்சுரி பூக் ஹவுஸ், இலக்குமி நிலையம்,

அலையன்ஸ்,தனலெட்சுமி,செல்வி பதிப்பகம், வானதி பதிப்பகம், திருமகள் நிலையம், மணிவாசகர் நூலகம், ஸ்டார் பப்ளிகேஷன்,S. சந்த் அண்ட் கோ, சூர்யா பப்ளிகேஷன் என்று எல்லா பதிப்பகங்களும் இவரது நூல்களை வெளியிட்டு உள்ளன. உறைம இயற்பியல் ஒன்று இரண்டு என்ற இரண்டு நூல்கள் தமிழ் நாடு உயர் கல்வி மன்றத்தில் பாட நூலாகவும் வெளியிடப்பட்டது. எட்டயபுரத்தில் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம்1999 இவருக்கு பாரதி பணிச் செல்வர் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தது. NFED outstanding educator and scholor விருதினை இவருக்கு வழங்கிச் சிறப்பித்தது. பன்முகத் திறமைக்கு 7 புள்ளிகள் வரை வழங்கப்பட்ட அந்த விருதுக்கான மதிப்பீட்டில் மெய்யப்பன் அவர்கள் 6.8 புள்ளிகள் பெற்று அந்த விருதினை பெற்றுள்ளார் என்பது பாராட்டத்தக்க ஒன்று. இவை தவிர புள்ளியியற்கொள்கையும் இயற்பியலும் என்ற நூல் வெளியிடப்பட்டு அழகப்பா பல்கலைக்கழகத்தில் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த நூலை இவர் எழுதியமைக்காக கல்வி அமைச்சர் திரு அன்பழகன் அவர்களின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

அழகப்பபா அரசு கலைக்கல்லூரி பொன் விழாவின் போது அனைத்துத் துறைகளின் அறிவியல் கண்காட்சிக்கு பொறுப்பேற்று நடத்தினார்.அறிவியல் தமிழ் பற்றிய கருத்தரங்கம் ஒன்றை அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் நடத்தி சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைத்தொகுத்து "கலைச் சொல்லாக்க நெறிமுறைகள்" என்ற தலைப்பில் ஒரு நூலாக கல்லூரி வெளியிட்டது. ஆங்கிலத்தில் உள்ள இயற்பியல் சொற்களுக்கு இணையான தமிழ் சொற்கள் அறிவியல் தமிழ் கருத்தரங்கின் போது வெளியிடப்பட்ட கட்டுரைகள் மூலம் தமிழ் இயற்பியல் உலகுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் சார்பாக சூரிய ஆற்றலும் பயன்களும், இந்தியாவில் அறிவியல் தொழில் நுட்பம் (மொழிபெயர்ப்பு), காவிரி ஆற்றுப் படுகை வளர்ச்சித் திட்டங்கள்(மொழிபெயர்ப்பு) என்ற மூன்று நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழக தமிழ் வளர்ச்சித் துறை வழங்கும் சிறந்த நூல்களுக்கான முதல் பரிசை 1987 ஆண்டு சூரிய ஆற்றலும் பயன்களும் என்ற நூலுக்காகவும், 1986 இல் இரண்டாம் பரிசை மாயக்கட்டம் என்னும் இவர் எழுதிய முதல் நூலுக்காகவும், 1989இல் இரண்டாம் பரிசை சூரிய ஆற்றல் தொழில் நுட்பம் என்னும் நூலுக்காகவும் பெற்றுள்ளார். தஞ்சை தமிழ்ப் பல்கலையின் கலைக் களஞ்சியத்தில் வல்லுநர் குழு உறுப்பினராக இருந்து தன் பங்களிப்பை சிறப்பாக செய்து உள்ளார்.

கிராமப்புறங்களில் அறிவியல் அறிவுத்திறனை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு V. I. சுப்பிரமணியம் அவர்கள் முனைவர் மெய்யப்பன் அவர்களை அழைத்து சூரிய ஒளி பயன்பாடு பற்றி விளக்கும்படி சொல்ல, பட்டி தொட்டி எங்கும் சூரிய ஒளியின் பயன்பாட்டைப் பற்றித் தெரிந்து கொண்டனர். பின்னர் அந்த விசயங்கள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு நூலாக இவர் எழுதிட பல்கலைக் கழகம் அதை வெளியிட்டது.

முனைவர் மெய்யப்பன் அவர்கள் காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரியில் இயற்பியல் துறையில் பேராசிரியராக, துறை முதல்வராக, பொறுப்பு முதல்வராக கிட்டத்தட்ட 20 ஆண்டு காலம் பணியாற்றி உள்ளார். தான் பயின்ற கல்லூரியில் தான் பணியாற்றும் வாய்ப்பு கிட்டியது என்பது மட்டுமல்லாது காரைக்குடியை கல்விக் குடி ஆக்கிய வள்ளல் அழகப்பர் அவர்களுக்கு தான் எழுதிய அறிவியல் நோக்கில் அழகு வைரங்கள் என்னும் நூலை சமர்ப்பணம் செய்துள்ளார்.

ஆனந்த விகடனில் 2009ஆம் ஆண்டில் சில நேரங்களில் சில விஞ்ஞானிகள் என்ற நூலில் 100 விஞ்ஞானிகள் பற்றிய சுவையான சம்பவங்களை தனி நூலாக எழுதி உள்ளார். இவை தவிர கணிதத் துறைக்கும் இவர் ஆற்றிய பங்கு அதிகம் உண்டு . கணக்குப் புதிர்கள் பற்றிய புத்தகங்கள் மின் நூலாக வெளிவந்துள்ளன. தனி நூலாக பெர்மாட் இறுதி தேற்றம் புதிய நீருபணங்கள்

இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
13.10.1949

மறைவு
05.05.2022

M.மீனாட்சி
Former Staff, Chettinad Cement Corporation (P) Ltd, Chennai - 6

விழிகள் உன்னைத் தேடுகிறது.
விளிம்பினில் நினைவின் கண்ணீர்.
வழிகள் ஏதும் உண்டா உன்னை மீண்டும் காண?

உன் நினைவாகவே வாழ்ந்து கொண்டிருக்கும்

கணவன் TR.மெய்யப்பன்
மகன் M.திருநாவுக்கரசு
மருமகள் ராதா திருநாவுக்கரசு
பேரன்கள் அஸ்வின், அருண்
Cell: 8056001439 / 8754568140

போன்ற கணித நூல்கள் இவரது கணித அறிவை நமக்கு புலப்படுத்துவது மட்டுமல்ல படிக்க படிக்க கணக்கில் உள்ள பல புதிர்களை நாம் அறிந்து கொள்ள உதவுகிறது.

இவர் சொந்தமாகவும் பல கணக்குப் புதிர்களை உருவாக்கி உள்ளார். இவரது திறமையை மெச்சி கணித மேதை இராமானுஜர் நூற்றாண்டு விழாவில் அகில பாரத கணித ஆசிரியர்கள் சங்கம் இனிக்கும் கணக்கு என்னும் தலைப்பில் 1987 இல் உரை ஆற்ற அழைப்பு விடுத்து கௌரவித்தார்கள். உமையாள் இராமநாதன் பெண்கள் கல்லூரியில் அறிவியல் துறை டீன் ஆக இருந்த போது SCITech club Brain freez club & science club 2015-16 இல் நடத்திய விழாவில் Brain booster என்னும் நிகழ்வை சிறப்பாக நடத்தினார்.

கணிதம் சார்ந்த பல புதிர்களை விடுவிக்கும் காரைக்குடி இராமானுஜன் என்று போற்றப்படும் முனைவர் மெய்யப்பன் அவர்கள் தான் கற்ற கல்வியை பிறருக்கும் அளிக்கும் வண்ணம் MIT மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வு எழுதும் பயிற்சி வகுப்பை தான் கல்லூரியில் பணிபுரிந்த போது சக ஆசிரியர்கள் துணையுடன் இலவசமாக வழங்கியதன் மூலம் பல மாணவர்கள் MIT இல் சேர்ந்து கல்வி கற்க உதவியாய் இருந்தது தன் வாழ்வில் மன நிறைவைத் தந்தது என்று கூறி மகிழ்கிறார். அது மட்டுமன்றி BCPM என்னும் பொறியியல் கல்லூரிக்கான நுழைவுத் தேர்வு பயிற்சி மையம் ஒன்றையும் தன் நண்பர்களுடன் இணைந்து நடத்தி பலரது வாழ்வில் சிறப்பான கல்வி பெற உதவியுள்ளார்.

அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வாழ் நாள் உறுப்பினர், தமிழ் பல்கலைக் கழக களஞ்சியம் வல்லுநர் குழு உறுப்பினர், அறிக அறிவியல் மற்றும் விஞ் ஞான சுடர் மாத இதழ்களில் ஆசிரியர் குழு உறுப்பினர் போன்ற பதவிகளும் வகித்து வரும் முனைவர் மெய்யப்பன் அவர்கள் சிறந்த எழுத்தாளர் மற்றும் சிறந்த ஆசிரியர் என்பதற்கான பல விருதுகளும் பெற்றுள்ளார்.

அவர் எழுதி உள்ள நூல்கள் தமிழுக்கு அழகு சேர்ப்பவை மட்டுமல்ல தாய் மொழியில் அறிவியல் மற்றும் கணிதம் படிக்கும் மாணவர்களுக்கு ஒரு வரப் பிரசாதம். அவர் எழுதிய அனைத்து நூல்களைப் பற்றிய விவரங்களையும் My books my life என்ற தலைப்பில் ஒரு e-book ஆக அமேசான் மூலம் வெளியிட்டுள்ளார்.

முனைவர் மெய்யப்பன் அவர்களின் புத்தகங்கள் பற்றி எழுத ஆரம்பித்தால் ஒரு புத்தகமே போட வேண்டும். அவ்வளவு அரிய புத்தகங்களை எழுதி உள்ள முனைவர் மெய்யப்பன் அவர்களை நமது செட்டிநாடு பாராட்டி மகிழ்வதோடு இன்னும் பல நூல்கள் எழுத வேண்டும் என்றும் வாழ்த்துகிறது.

மணிமேகலை சரவணன்

திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.
வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி)லிட்.
ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி)லிட்.
VALATHI Since 2005
பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை
எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு ரூ.1,00,000/- முதல் ரூ.25,00,000/- வரை
அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை
இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.
துவக்கம் 2005
TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,
SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,
C-95, மூர்த்தி ஸ்கொயர், முதல் தளம், 5வது கிராஸ் தில்லைநகர் மெயின் ரோடு, MPM ஸ்டோர்ஸ் மாடியில் திருச்சி - 620 018. Cell : 94439 86143
9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட், G-1, தரைத்தளம், லோகையா தெரு, சாலிகிராமம், சென்னை - 600 093. Cell : 91235 71029
50, தெற்கு மாரட் வீதி, (ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்) மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064
0431-2760064,80 3569950,7968005. 94439 86143 ★ வாய்மையே வெல்லும் ★ tvcfpl@gmail.com valathichitfunds.com

இளம் ஓவியர்

பெரி. கார்த்திக் நாச்சியப்பன், 6-ம் வகுப்பு,
மகரிஷி வித்யா மந்திர் பள்ளி, காரைக்குடி.
பெற்றோர் நா. பெரியகருப்பன் – விசாலாட்சி,
ஊர்: நற்சாந்துபட்டி, கோயில்: மாத்தூர் – உறையூர்.

புகழ்பெற்ற இந்திய ஓவியர் ராஜா ரவிவர்மா ஏப்ரல் 29, 1848 பிறந்தார். நவீன காலத்துக்கு ஏற்ற முறையில் மேல்நாட்டில் வழங்கும் ஓவிய மரபை அப்படியே இந்தியப் பாணி ஓவியக்கலைக்குள் புகுத்தியவர். மேலை நாட்டு உத்தியான தைல வண்ணத்தை பயன்படுத்தி எண்ணற்ற ஓவியங்கள் வரைந்தார். இப்பாணியில் அவர் உலகப் புகழ்பெற்ற பல ஓவியங்களைப் படைத்தார்!

ரவிவர்மா தென்னிந்தியப் பெண்களின் சாயலில் இந்துக் கடவுள்களை உருவகப்படுத்தி தனது ஓவியங்களை படைத்தார். பழம்பெரும் காவிய நாயகிகளான துஷ்யந்தை, சகுந்தலை, தமயந்தி போன்றோரின் உருவகங்களை வரைந்து உலகப்புகழ் பெற்றார். நவம்பர் 24, 2002 இல் டில்லியில் நடந்த ஓவிய ஏலத்தில் அவரது யசோதையும் கிருஷ்ணனும் ஓவியம் 56 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. 1873 இல் வியென்னாவில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் ரவிவர்மாவின் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு சிறப்பு விருதைப் பெற்றார்.

தகவல் : முனைவர் ஆறு.அழகப்பன்

அரியக்குடி “ ஸ்ரீ” - சபாரத்தினம்
(garudasaba@gmail.com)

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன்

கவிதை வாழ்க்கையாலானது

சைவமும் வைணவமும் தழைத்தோங்கும் ஒரு சிற்றழகிய கிராமம் அரியக்குடி. கோயிலும், கோயில் சார்ந்த சிந்தனைகளும நிறைந்த வீடுகளில் ஒன்று நா.சா.ராம. வீடு. அந்த வீட்டிற்கு புதிய வண்ணம் வைத்து, அதன் அகவை நூறு நிறைவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

இந்த வீட்டில் வசிக்கும் ஐயா திரு. நா.சா. ராம. நாராயணன் செட்டியார் அவர்கள் அகவை தொண்ணூறை நிறைவு செய்திருக்கிறார்கள். 1953-ல், தனது 15-ஆவது வயதில் ஐயாவை கைத்தலம் பற்றிய ஆயாவும், ஐயாவும் தங்களது திருமண வாழ்வில் அகவை எழுபத்தொன்றை நிறைவு செய்திருக்கிறார்கள். இந்த இல்லத்தில் இந்தத் தம்பதியர்களிடம் ஆசி பெறுவதில் எத்தனை ஆனந்தம்.

ஒரு காலை நேரம் அவர்களைச் சந்தித்து நல்லாசி பெறச் சென்று விட்டேன். ஆயா ஒரு சக்கர நாற்காலியில். அந்த நாற்காலி ஐயா கையில். பாலும் பழமும் திரைப்படத்தில் வருவது போல ஐயாவும் ஆயாவுமாக. “உண்ணும் அழகைப் பார்த்திருப்பாயே உறங்க வைத்தே விழித்திருப்பாயே” என்னும் கண்ணதாசன் வரிகள் மௌனமாய் பின்னால் பேசிக் கொண்டிருக்கிறது.

தம்பி, “நீங்க வந்ததைச் சொல்லுங்கள்” என்றார்கள். ஐயா நீங்கள் மெதுவாக உங்கள் இயல்பான வேலைகளை முடித்துக் கொண்டு வாருங்கள் எனக்கொன்றும் அவசரமில்லை. இருக்கிறேன் என்றேன். தம்பி “சும்மா சொல்லுங்கள், ஆச்சியைக் குளிக்கச் செய்வித்து. நான் குளித்து வர வேண்டும். ஒரு அரை மணி ஆகும். அது தான்” என்றார்கள் ஐயா. பரவாயில்லை இருக்கிறேன் என்றேன்.

ஐயாவின் மேசையில் அன்று வந்த இந்து ஆங்கில நாளிதழ். கைக்கு எட்டும் தூரத்தில் தேவாரம் - திருவாசகம் - திவ்யப் பிரபந்தப் புத்தகங்கள். பேனா பென்சில் சகிதமான எழுதுபொருள்கள் என அனைத்தும் இருக்கிறது. பின்னொலியில் தென்றலைத் தழுவிக் கொண்டு வரும் மெல்லிய நாதஸ்வர இசை. சற்று நேர இடைவெளியில் ஆயாவைத் தயார் செய்துவிட்டு. ஐயா, தயாராகி வந்தார்கள்.

வந்த காரியத்தில் நான் குறியாக இருந்தேன். நல்லாசி பெற்றுக் கொண்டேன். பொது வெளிகளில்

ஐயாவின் ஆழமான சிந்தனைகளை, எளிமையான அணுகுமுறையை, ஆன்மிகச் சிந்தனைகளை ரசித்திருக்கிறேன். எப்படி இதெல்லாம் கைவரப் பெற்றிருப்பார்கள் என்ற கேள்வி என்னிடம் இருந்து கொண்டே யிருந்தது. பையக் கேட்க, கேட்கச், சன்னமான குரலில் அடர்த்தியான பதில்களாக ஐயாவிடமிருந்து வந்தன.

ஐயா, கனரா வங்கியில் பணியாற்றியிருக்கிறார்கள். எனவே, கர்ணன் கவச குண்டலத்தோடு பிறந்தது போல எல்லோரும் -‘கனரா பாங்க் நாவன்னா’ என்றே அழைக்கத் தொடங்கி அதுவே தொடர்கிறது.

காரைக்குடி எஸ்.எம்.எஸ். பள்ளியில் கல்வி பயிலும் வாய்ப்பு, அங்கு பணிபுரிந்த ஆசிரியர்கள். கவிஞர் முடியரசன் எனப் புனைப் பெயர் கொண்ட எஸ்.கே. துரைராஜ், தமிழால் புகழ் வாய்ந்த பெரியகருப்பன் என்று நாங்கள் அறிந்த தமிழண்ணல். பின்னர் எனக்கு இளங்கலை தமிழலக்கியம் கற்றுத் தந்த அழகப்பா கல்லூரி. அதில் வாய்த்த பேராசிரியப் பெருந்தகை வ.சுப. மாணிக்கனார். கல்லூரியில் படிக்கும் காலத்தில் வள்ளல் அழகப்பரைப் பார்க்க, பேச என எல்லாம் எனது வாழ்நாளில் கிடைத்தற்கரிய பேறு என்று தொடங்குகிறார்கள் ஐயா.

தனது பணியைப் பாண்டியன் பாங்கில் தொடங்கியது. பின்னர் அதுவே கனரா பாங்காக மாறியது. கனரா பாங்கில் பொது மேலாளராகப் பதவி வகித்த திரு.இராம. வெங்கடாசலம் அவர்களோடு வாழ்நாளெல்லாம் ஒன்றோடு ஒன்றாக இணைந்து பயணித்ததும் கிடைத்தற்கரிய பேறுகளில் ஒன்று என்கிறார்கள் ஐயா.

ஐயா, தினமும் ஒவ்வொரு வேளை உணவில் கை வைக்கும் பொழுதும் நன்றிக் கடனாக நினைத்து உச்சரிப்பது -சிவாய நம, வாழிய கனரா வங்கி, வாழிய திரு. இராம. வெங்கடாசலம் அவர்கள் குடும்பம், வாழிய வழிகாட்டியாக

இருந்த அய்த்தான் கருப்பஞ் செட்டியார் அவர்கள் குடும்பத்தினர் என்பதை வழக்கமாகச் செய்து வருகிறார்கள். இன்றும் தரையிலமர்ந்து சம்மணமிட்டு உணவு உண்ணும் பழக்கம் ஐயாவிடம் தொடர்கிறது.

ஐயா, நீங்கள் பேசுகையில் நம்மாழ்வார் அடிக்கடி வந்து போகிறாரே என்றேன். "நம்ம ஆழ்வார்" எனப் பேச்சு வழக்கிலிருக்கும் நம்மாழ்வாரின் பெயர் "மாறன் சடகோபன்". அவர் "வேதம் தமிழ் செய்த மாறன்" என்றும் போற்றப்படுகிறார். நான்கு வேதங்களின் சாரங்களும் நம்மாழ்வாரின் பாசுரங்களில் விரவியிருக்கிறது. எனவே தான் எனது அன்றாடப்பாராயணங்களில் அதிகம் சாதிக்கும் பாசுரங்கள் அவருடையதாக இருக்கிறது என்று பதிலளிக்கிறார்கள் ஐயா.

சுமார் 20 வருடங்கள் சிவாலய காரியத்தனம் பார்த்தலில் நான்கு முறை சிவாலயக் கும்பாபிஷேகத் திருப்பணியில் தன்னை அர்ப்பணித்திருந்திருக்கிறார்கள். அரியக்குடி ரெத்தினபுரீஸ்வரர் ஆலயத்தில் ஞாயிற்றுக் கிழமை தோறும் நடைபெறும் வார வழிபாடு தொடங்கியதில், இன்றும் தொடர்வதில் பெரும்பங்கு ஐயாவிற்கு இருக்கிறது.

ஐயா, உங்களின் சங்கீத ஈடுபாடு வியப்பைத் தருகிறதே என்றேன். எங்கள் வீட்டருகில் உள்ள நா.முரு. வீட்டில் அவ்வப்போது சத்சங்கம் நடைபெறும். இங்கு அரியக்குடி ராமானுச ஐயங்கார் அவர்களின் அடுத்த அகத்தில் வசித்து வந்த, ஜகந்நாதாச்சாரியார் தினந்தோறும் சங்கீத வியாக்கியானங்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள். இதை ஆர்வத்தோடு நா.முரு. வீட்டு சௌரி நாராயணன் செட்டியார், கோவிந்தன் செட்டியாரோடு கேட்டு வந்ததில் வந்த ஞானம் தான். அப்படியே அது வளர்ந்து, ஒவ்வொரு ஆண்டும் திருவையாறில் நடைபெறும் தியாக பிரம்ம விழாவிற்கு சென்று வந்த அனுபவ ஞானம் தான் எனப் பணிவாகச் சொல்லுகிறார்கள். இதுவே இன்று பிரபலமாக உள்ள பல கர்நாடக இசைக் கலைஞர்களும், நாதஸ்வர கலைஞர்களும் ஐயாவோடு தொடர்பிலிருக்கக் காரணம்.

ஐயா, ஆயாவைக் குழந்தையைப் போல பேணுவதைக் காணும் பொழுது ஐந்திணை பேசும் "காதலர் உள்ளம் படர்ந்த நெறி" எனும் வரிகளுக்கான பொழிப்புரை போன்றிருக்கிறது.

பூரண வடிவமாய் திகழும் ஐயாவையும், ஆயாவையும் போற்றும் ஒரு இனிய விழா அரியக்குடி தாப்பா கார்டனில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஐயாவின் பங்காளிகள், ஐயாவை, ஆயாவை, அம்மான் – அம்மான் பெண்டிர் என வாஞ்சையோடு அழைக்கும் வயிரவன் கோயில் பங்காளிகள், கனரா வங்கிப் பணியாளர்கள், உறவினர்கள், காரைக்குடியைச் சேர்ந்த திரு. எஸ்எல்என்எஸ். நாராயணன் செட்டியார் அவர்கள், ஏஎல்எஸ். அழகப்ப செட்டியார் அவர்கள், திரு.எஸ். எல்.என்.எஸ். பெரியணன் செட்டியார் அவர்கள், திரு. எஸ்.பி. ராமசாமி செட்டியார் அவர்கள், எஸ்.எம்.எஸ். பள்ளி தலைமையாசிரியர், அரியக்குடி ஊர் பெருமக்கள் என சபை ஒரு நல்ல அறிவார்ந்ததிருக்கூட்டமாக அமைந்திருந்தது.

விழாவில் தான் ரசித்துப் போற்றும் திருக்கருகாவூர் டி.கே.சரவணன் அவர்களின் மங்கல இசையில் தொடங்கி, தன்னை நன்றாக வடிவம் செய்த காரைக்குடி எஸ்.எம். எஸ். மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு நிதி வழங்க, கனரா வங்கி நண்பர்கள் பெருமளவில் வந்திருந்து வாழ்த்த, ஐயாவின் ஒரு எளிமையான ஏற்புரையுடன் விழா நிறைவெய்த்தியது. விழாவில் "மூட் நெய் பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து குளிர்ந்தேலோ எம்பாவாய்" என ஆண்டாள் நாச்சியார் சொல்வது போல நல்ல உணவும் வழங்கப் பெற்றது.

நல்ல கவிதை மொழியாலானது என்று நினைத்திருந்த பலருக்கு, நல்ல கவிதை நல்ல சீரான வாழ்க்கையால் ஆனது என்று உணர வைத்தது .

நல்ல கவிதையாக வாழ்ந்த ஐயாவை "இளைஞர்களுக்கு ஒரு செய்தி வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகச் சொல்லுங்களேன்" என்றேன்.

ஆதித்தன் அன்பினொடு ஆயிர நாமமும்
சோதியினுள்ளே சுடரொளியாய் நிற்கும்
வேதியர் வேண்டினும் விண்ணவர் சொல்லினும்
ஆதியில் அன்பு பழுக்கின்றவாரே

என்ற திருமந்திரத்தைச் சொல்லியவாறு "பிள்ளைகளை நன்றாகப் படிக்கச் சொல்லுங்கள். படிப்புங்கிறது பள்ளிக் கூடத்தில் சொல்லித் தருகிற பாடம் மட்டுமில்லை. எல்லாம் படிக்கச் சொல்லுங்கள்" என்று நிறைவு செய்தார்கள்.

ஐயாவும், ஆயாவும் அவர்களது குடும்பத்தில் அனைவரும் "செங்கண் திருமுகத்து செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுக எம்பாவாய்" என ஆண்டாள் நாச்சியாரின் அமுத மொழியால் வாழ்த்துவோம். ♦



நகரத்தார் சிகரத்தார் 102

காரைக்குடி நாராயணன்

சிகப்பி ஆச்சிக்கு, சிங்கப்பூர் போய் வந்த கல்லல் சாலி ஆச்சி அவர்கள் ரொட்டி மிட்டாய் எல்லாம் கொண்டு வந்து கொடுத்து விட்டு டிபன் சாப்பிட்டு விட்டுப் போனார்கள். செட்டியார் இல்லாத போதும், சாலி ஆச்சி தனி மனுஷியாக அங்கே இருந்த எஸ்ட்டேட்டைக் கவனித்துச் சொத்தைக் காப்பாற்றிப் பிள்ளை குட்டிகளை ஆளாக்கிய பெருமையை ராஜ்மோகனிடம் ஆச்சி பெருமூச்சு விட்டபடி சொல்லி முடித்தார். ராஜ்மோகன் ஒரு சந்தேகத்தைக் கேட்டார்.

ஆச்சி. உங்க நகரத்தார் வழக்கப்படி கொண்டுவிக்கப் போறது ஆண்கள் தானே. பெண்களும் போயிருக்காங்களா?

தம்பி. எங்க செட்டியார்கள் அப்போ மலாய்க்காரிகளையும், சீனாக்காரிகளையும் வச்சுக்கிட்டு, செய்யுற தொழிலைச் செஞ்சுக்கிட்டிருந்தாங்க. அக்காவே புருஷனுக்கு பொண்டாட்டியானாலும் சக்களத்திதானே. செட்டியார் சரியில்லேன்னதும் ஒத்தைக் கால்லே நின்னு ஊரைப் பத்திக் கவலைப்படாம சிங்கப்பூருக்குப் போனா. பெண்டாட்டி இருக்கப் பிசாசைக் கட்டிக்கிட்டுப் பிள்ளை பெறணுமான்னு அங்கே போயி பிரச்சனை பண்ணுனா. புருஷன் சேவகன் செட்டியாரைப் புடவைக்குள்ள வச்சு முடிஞ்சு, போடு தோப்புக்கரணம்னு போட வச்சா. இன்னைக்கு அவ குடும்பம் சீரும் சிறப்புமா செல்வச் செழிப்போட இருக்கு.

ஆச்சி. மொத மொதலா செட்டியார்கள் அயல்நாட்டுக்குப் போன போது அவங்களோட மனைவிகளையும் கூட்டிக்கிட்டுப் போனவங்க யாரு.

தேவகோட்டையைச் சேர்ந்த அ.வெ. தியாகராஜன் செட்டியார் அவர் மனைவியைப் பர்மாவுக்குப் போன போது அவங்க கூடவே கூட்டிக்கிட்டுப் போனாங்க. ஆனாலும், சாதி முறைக் கட்டுப்பாட்டை மீறி வேற யாரும் பெண்கள் கடல் கடந்து போகத் தயங்குனாங்க. அப்புறம் பல காலத்துக்கப்புறம் காரைக்குடி தண்ணீர்மலைச் செட்டியார் அவரு மனைவியைச் சிங்கப்பூர் கூட்டிக்கிட்டுப் போனாங்க.

செட்டியார் வெத்திலை பாக்க மென்றபடி, ஆச்சிமார்கள் செட்டியார்களுடன் கடல் கடந்து போவதில்லை என்ற சாதி முறைக் கட்டுப்பாட்டை உடைத்தெறிந்ததற்கு மிகவும் காரணமாக இருந்த நகரத்தாரைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

டைரக்டர் சார். காரைக்குடி ஆறு.ஆ.ராம. சொக்கலிங்கம் செட்டியார் விடுதலைப் போராட்டத்தில பெரும் பங்கு எடுத்துக்கிட்டவர். இவர் சிங்கப்பூர் தமிழர் இசைக் கழகத்தில் தலைவராகப் பணியாற்றினார். காரைக்குடி நகராட்சி மன்றத் தலைவராகவும் இருந்தார். 1937-ல் காரைக்குடி செக்காலையில் சுகாதார நிலையத்தை அமைச்சுக் கொடுத்தார். வாய் பேச முடியாத பிள்ளைகளுக்கு அவர் சொந்தச் செலவில் காலை உணவை நீண்ட காலம் கொடுத்தார். இவர் விடுதலைப் போராட்ட வீரரா இருந்த போது 1942, ஆகஸ்ட் போராட்டத்தில் கைது செய்யப்பட்டுச் சிறையில் இரண்டு ஆண்டுகள் இருந்தார். அப்போ சிறையில காமராஜர் வி.வி.கிரி, பக்தவத்சலம், முத்துராமலிங்கத் தேவர், சஞ்சீவி ரெட்டி போன்ற தலைவர்களும் இருந்திருக்காங்க. 1952 முதல் 1957 வரை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார். இவர் வீட்டுல பெரிய தலைவர்களை எல்லாம் தன் வீட்டுக்கு வரவச்சு விருந்து கொடுத்திருக்கார். அந்தக் காலத்தில செட்டியார்களோட கடல் கடந்து ஆச்சிமார்களும் அயல்நாடு போறதுக்குக் காரணமா இருந்ததுல இவர் ரொம்ப முக்கியமானவர்.

ராஜ்மோகன் மெய் மறந்து சொன்னார்.

ஆச்சி. உங்களுக்காகச் சொல்லலே. நகரத்தார்கள் தாய்மொழிக்கும், பாரத நாட்டின் சுதந்திரத்துக்கும், பெண்கள் உரிமைக்கும் எவ்வளவு போராடி இருக்காங்கன்னு கேக்கக் கேக்க நான் செட்டிநாட்டுல பொறந்திருக்கக் கூடாதாங்குற ஏக்கம் வருது.

ராஜ்மோகன் கண்கள் கலங்கியதை ஆச்சி கவனித்து ஆறுதல் சொன்னார்.

தம்பி. உலை அரிசிக்குத் தெரிவதில்லை. அது உருமாறிப் பலரின் பசியைப் போக்கப் போகுது என்று..... ஊரும் அரிசிக்குத் தெரிவதில்லை. அது அரைபட்டு அடுப்புக்குப் போகப் போகுது என்று.... அட்சதை அரிசிக்குத் தெரிவதில்லை அது மங்கலப் பொருளாகி ஆசீர்வதிக்கப் போகுது என்று... வாய்க்கரிசிக்குத் தெரிவதில்லை. அது சவத்தின் வாய்க்குப் போகப் போவது என்று... அரிசி ஒன்றுதான். பயன்கள்தான் வேறு வேறு. எதுவுமே நாம் வாழ்கின்ற விதத்தைப் பொறுத்துத்தான்.

காளிமுத்து கூடாக காளிப்பவர் சூப்பைக் கொண்டு வந்து கொடுத்துச் சென்றான். செட்டியார் நெருப்புக்கோழி போல அதைக் குடித்துவிட்டு

அங்கே கிடந்த குருப்பெயர்ச்சிப் பலன்களைப் படித்தார். ராஜ்மோகன் சூப்பைக் குடித்தபடி கேட்டான்.

அய்யா, உங்களுக்கு ராசி, நட்சத்திரம், ஜாதகம் எல்லாம் தெரியுமா?

டைரக்டர் சார். நல்லது கெட்டது நாலையும் தெரிஞ்சுக்க வேண்டியது தான்.

அதென்னய்யா நாலு?

நாலுங்குறதுல பல விஷயங்கள் இருக்கு. நாலு பேரு சொல்ற மாதிரி வாழணும். நாலு சுவத்துக்குள் எது நடந்தாலும் நமக்குள்ள இருக்கணும். திசைகள் நான்குதானே. சிவராத்திரிக்கு நான்கு கால பூஜை. கிரதம், திரேதம், துலாபுரம், கலியுகம் என நான்கு யுகம், வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது நாதன் நமசிவாயமே. சைவ நெறியில அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர். பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன்.

ஆச்சி பங்குக்குப் பழமொழியில் நான்கைப் பற்றிச் சொன்னார்.

நாலு பணம் கொடுத்து நல்லவன் உறவைப் பெறு.

எட்டுப் பணம் கொடுத்து கெட்டவன் உறவை விடு.

தம்பி ஜாதகம்குறது பிரம்மாவோட இன்னொரு கணக்கு. நாலு ரோடு சந்திக்குற எடத்தில கைகாட்டி மரம் இருக்குல்ல அதுமாதிரித்தான் ஜாதகம்.

ராஜ்மோகன் செட்டியார் கையிலிருந்த ராசி பலன்கள் இருந்த பேப்பரைப் பார்த்தான். அதில் கணித்தவர் சிவல்புரி சிங்காரம் என்று இருந்தது.

அய்யா, இவர் பேரை அடிக்கடி நான் பாத்திருக்கேன். இவர் ஜோதிடம் எண் கணிதம் எழுதுறவர் அப்படித்தானே.

ஆமா. எங்க நகரத்தார். இவர் 1994-ல் திருச்செந்தூரில் நடந்த அனைத்திந்திய சோதிட மாநாட்டிற்குத் தலைமை தாங்குனார். நகரத்தார் மலர் இதழ் தொகுப்பாசிரியராகச் சில காலம் இருந்தார். நல்ல நேரம் வந்தாச்சு மாத இதழின் ஆசிரியரா இருந்தார்.

ஆச்சி கோயிலுக்குப் போகத் தயாரானார். சரி நான் போயி கோயில்ல 108 அஷ்டோத்திரம் சொல்லச் சொல்லி அர்ச்சனை பண்ணிட்டு வர்ரேன். அதுதான் எனக்கு ஜாதகம்.

அதென்ன ஆச்சி 108 அஷ்டோத்திரம்.

ரொம்ப சிம்பிள் தம்பி. தமிழ் ஆண்டுகள் 60, ஆண்டுக்கு மாதம் 12, நட்சத்திரங்கள் 27, கிரகங்கள் 9. இதுக்குள்ளதானே நாம எல்லாரும் பொறந்திருக்கணும். 60 + 12 + 27 + 9 எவ்வளவு 108.

ஆச்சி இப்படியொரு கணக்கா?

ஆமா தம்பி. பாவ புண்ணியமே கணக்குத்தான். கங்கை போன்ற புனித நதியில் நீராடினால் புண்ணியம் 3 தலைமுறை, பாழடைந்த கோவிலில் தீபம் ஏற்றினால் புண்ணியம் 5 தலைமுறை, கோவில் திருப்பணிக்கு உதவும் புண்ணியம் 7 தலைமுறை, ஏழைப் பெண்ணுக்குத் திருமணம் செய்து வைத்தால் புண்ணியம் 9 தலைமுறை, கோசாலைக்கு உதவினால் புண்ணியம் 13 தலைமுறை, காசி கயாவில் செய்யும் தர்ப்பணங்கள் 16 தலைமுறை, பசுக்களுக்கு உணவளிப்பது புண்ணியம் 27 தலைமுறை.

டிரைவர் காரைக் கொண்டு வந்து வாசலில் நிறுத்தினான். ஆச்சி புறப்படும் முன் செட்டியாரிடம் சொன்னார்.

சாயங்காலம் நம்ம SLN வீட்டுக் கல்யாண ரிசப்ஷனுக்கு காரைக்குடி போய்ட்டு வரணும்ல.

நிச்சயமாப் போய்ட்டு வரணும்.

ஊரே திரண்டு ஒரு திருவிழா மாதிரி நடக்கும். டைரக்டர் சார் நீங்களும் எங்களோட வாங்க.

ஆச்சி காரில் ஏறிச் சென்றார். செட்டியாரிடம் ராஜ்மோகன் கேட்டார்.

அய்யா, SLN பெரிய செல்வந்தரா?

டைரக்டர் சார், கர்நாடகாவுல காபி எஸ்ட்டேட் இருக்கு. பணம் இன்னைக்கு யார்யார்ட்டேயோ இருக்கு அது ஒரு அனாதைப் பிள்ளை மாதிரி. அந்தப் பணத்தை நாலு பேரு மெச்சுற மாதிரிச் செலவு செய்யணும். காரைக்குடியில MSMM-ங்குற விலாசத்தைச் சொல்லித்தான் அவங்க வீட்டுப் பங்காளிகள்ன்னு சொல்லுவாங்க. அதே மாதிரி அ.மு.க. வீட்டுப் பங்காளிகள்ம்பாங்க. நாங்க சொன்ன SLN திருப்பணிச் செல்வர். அறப்பணி அண்ணல். இறைப்பணித் திருச்செல்வர், சேவைச் செம்மல், திருப்பணி ரெத்னா, ஜகத்குரு சேவா மணின்னு இவரை ஸ்ரீ காஞ்சிப் பெரியவா பரிபூர்ண ஆசீர்வாதம் செய்திருக்கார். க்ஷேமமா இருங்கோ. தீர்க்க ஆயுசு மவன்பவா-ன்னு ஆசீர்வாதம் பண்ணி இருக்கார்.

ராஜ்மோகன் அதை ஆமோதித்தார்.

பெரியவர் ஆசீர்வாதம் கடவுளோட ஆசீர்வாதம். அவரைப் புத்தி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கேன். 4 வேதங்கள், 6 சாஸ்திரங்களைச் சுயமாக் கத்துக்கிட்டவருக்கு 18 மொழிகள்ல பேச எழுதத் தெரியும். வெறும் நெல் பொரியை ஒரு வேளைக்கு மட்டும் சாப்பிட்டு, வசதி தரத் தயாரா இருந்தும் மாட்டுத் தொழுவத்தில கொசுக்கடியில தூங்கி, இந்தியாவைக் கால்நடையாவே மூனு தடவை வலம் வந்திருக்கார். கிட்டத்தட்ட நூறு வயசுல அவர் முக்தி அடைஞ்ச போது போப் ஜான்பால், முகம்மது கோமானி, தலாய்லாமா, குயின் எலிசபெத், டாட்டா, பிர்லா, நவாப்கள், நகரத்தார்கள், எண்ணற்ற முஸ்லீம்கள், கன்னிகாஸ்திரிகள் கண்ணீர் விட்டாங்க.

டைரக்டர் சார். அவ்வளவு புண்ணியம் செஞ்சவரு. கண்ணதாசனை நேர்ல வரச்சொல்லி, நான் ஆயுசு பூராம் சொல்ல நெனைக்குறதை நீங்க அர்த்தமுள்ள இந்துமதம்ங்குற ஒரே புத்தகத்தில சொல்லிட்டீங்கன்னு பாராட்டுனார். அதுமாதிரி நம்ம SLN செஞ்ச இறைப்பணிகளையும் பாராட்டியிருக்கார். (தொடரும்)

நம் முத்துகளுக்கு நல்வாழ்த்துகள்

நமது செட்டிநாடு

12 ஆம் வகுப்பு

595 / 600

பெயர் : நா.சாய் கண்ணம்மை
பெற்றோர் : சுப.நாகப்பன் – ப.சொர்ணம்
கோவில் : இளையாற்றங்குடி
பிரிவு: கழனிவாசல்
ஆசாத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தரங்கம்பாடி

581 / 600

பெயர் : க. காந்திமதி
பெற்றோர் : அழ. கணேசன் – க.மோனிகா
கோவில் : வயிரவன் கோவில்
எஸ்.வி.என் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஈரோடு.

576 / 600

பெயர் : எஸ். வர்ஷினி நாச்சியார்
பெற்றோர் : சபா தண்ணீர்மலை – தேவி
கோவில் : இரணி கோவில்

576 / 600

பெயர் : க. கமலம்
பெற்றோர் : கனேசன்
கோவில் : இளையாற்றங்குடி பட்டினசாமி
ஊர் : பொன் புதுப்பட்டி.

574 / 600

பெயர் : இராம.வ. இராமநாதன்
பெற்றோர் : இராம வள்ளியப்பன் – விசாலாட்சி (ஏ) சுப்புலட்சுமி, தேவகோட்டை
கோவில் : இரணி கோவில்
CK School of Practical Knowledge Matric Hr. Sec. School, Cuddalore.

552 / 600

பெயர் : லட்சுமி ஜெயங்கொண்டான்
கோவில் : நேமம் கோவில்
வீடு : ஜெயங்கொண்டார் இல்லம்
கோட்டையூர் சிதம்பரம் செட்டியார் மேல்நிலைப் பள்ளி.

10 ஆம் வகுப்பு

496 / 500

பெயர் : காவியா
பெற்றோர் : திரு. கண.மெ.கரு.பழ. செந்தில்நாதன்
கோவில் : மாத்தூர் மணலூர்
வேலம்மாள் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

495 / 500

பெயர் : சொ. மனோன்மணி
பெற்றோர் : நா. சொல்லிங்கம்
கோவில் : கீழச்சீவல்பட்டி
காரைக்குடி அழகப்பா மெட்ரிகுலேஷன் பள்ளி

491 / 500

பெயர் : வள்ளியம்மை ஸ்ரீநிதி
பெற்றோர் : V. சுப்பு வள்ளியப்பன் வள்ளிக்கண்ணு
கோவில் : பிள்ளையார்பட்டி
ஸ்ரீ சங்கர வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, சென்னை

484 / 500

பெயர் : நா. விக்னேஷ்
பெற்றோர் : ந.நாச்சியப்பன் – நா.விசாலாட்சி
கோவில் : பிள்ளையார்பட்டி
சொந்த ஊர் : கண்டணூர்

இந்த பகுதியில் இடம்பெற +2 SSLC மற்றும் CBSC தேர்வுகளில் அதிக மதிபெண் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள். புகைபடத்துடன் மதிப்பெண், பெற்றோர், கோவில், பிரிவு, படித்த பள்ளி விவரங்களை 9962243750 வாட்ஸ் அப்-க்கு அனுப்பிவைக்கவும்.

471 / 500

பெயர் : அழகம்மை
பெற்றோர் : சரவணன் – ராஜலக்ஷ்மி, காரைக்குடி
கோவில் : இரணிகோயில்
கோவை அவிலா கான்வென்ட் மெட்ரிக் பள்ளி

கா... கா!

சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்

மரக் கிளையில் கூடு:

காகங்கள் தனித் தனி மரக் கிளைகளில் கூடு கட்டிக் கொண்டு குடும்பமாக வசிக்கக் கூடியவை. எந்த கண்டத்திலும், எந்த நாட்டிலும் காக்கைகள் மனிதர்கள் வாழும் பகுதிகளை ஒட்டியே தங்கள் குடும்பங்களை அமைத்துக் கொள்கின்றன.

காக்கை மந்தை:

குளிர்காலங்களில், இரவு நேரத்தில், ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் பெருங்கூட்டமாக ஓரிடத்தில் காக்கைகள் கூடுகின்றன (ROOSTING). இதைக் காக்கைப் பள்ளிக்கூடம் என்று பாரதியார் வர்ணிக்கிறார் பெரும்பாலும் ஒரு நீர்நிலையின் அருகில் உள்ள மரங்களின் கூட்டத்தில் காக்கையின் மந்தை அல்லது காக்கைப் பள்ளிக்கூடம் கூடும். பல வருடங்களுக்கு ஒரே இடத்திலேயே திரும்பத் திரும்ப இந்தக் கூட்டம் கூடுவதுண்டு.

காக்கைக் கல்யாணம்:

ஆண் காகங்களும், பெண் காகங்களும் ஒன்றை ஒன்று சந்தித்து தங்கள் துணையைத் தேர்வு செய்து இணை சேர்வதும் இந்தக் கால கட்டத்தில்தான். ராக்காலக் குளிரில் உடம்புக்கு உணக்கை (கதகதப்பு) ஏற்படுத்திக் கொள்ள வேண்டியும் இப்படிக் கூட்டமாச் சேர்ந்து உட்கார்ந்திருக்கோம் அப்படின்னும் சொல்லலாம்.

சமூக உறவிலேயும், சொந்தங்களை அரவணைச்சுக் கிறதுலேயும் எங்களுக்குப் பெரிய பாரம்பரியம் இருக்கு. அதை நாங்க கட்டிக் காத்துக்கிட்டு வர்றோம். காக்கா மந்தையிலே (Roosting) ஒரு காக்கா தன் ஜோடியைத் தேடிச் சேர்த்துக்குதில்லையா, அதுதான் 'பெண் பார்த்துக் கல்யாணம்' பண்றது. அதன்பிறகு அந்த ஜோடி தனியா ஒரு மரக் கிளையைத் தேடிக்கிட்டு, கூடு கட்டப் புறப்பட்டுப் போகுது. கூடு கட்டுறது பெண் காக்காயின் கடமை. அதுக்கு வேண்டிய மரக் குச்சி, செடி, கொடி எல்லாம் தேடிக் கொண்டு வந்து சேர்க்கிறது ஆண் காக்காயின் வேலை.

'உதவியாளர் தத்துவம்':

இங்கேதான் எங்க சமூகத்திலே உதவியாளர்கள் ('HELPERS') என்கிற அதிசயமான வாழ்க்கைத் தத்துவம் அரங்கேறுது. சுத்தி இருக்கிற கூடுகளில் வசிக்கிற காக்கைகள், புதுசாக் குடித்தனம் நடத்த வந்த ஜோடி கூடு கட்டுவதில் உதவி செய்ய ஓடி வர்றாங்க. ஆண் காக்காயோடு சேர்ந்து கூடு கட்ட மரக் குச்சி எல்லாம் கொண்டு வந்து கொடுத்து உதவி பண்றாங்க. ஒரே சமயத்திலே அஞ்சு உதவியாளர்கள் கூட வருவாங்க. பெண் காக்கை கூடு கட்டி முடிக்க இரண்டு வாரம் கூட ஆகலாம்.

அடை காக்கும் காலம்:

அடுத்துக் கவனிக்கப்பட வேண்டிய நிலை, ஆண் காக்கையும், பெண் காக்கையும் தங்களின் புதிய கூட்டில் ஒற்றுமையாகக் குடும்பம் நடத்தி, பெண் காக்கை முட்டைகள் இட்டபின், பெண் காக்கை தான் இட்ட முட்டைகளின் மேல் அமர்ந்து அடை காக்கும் காலம். இது சுமார் 18 நாட்கள் எடுக்கும். அடைகாக்கும் காலத்திலே பெண் காக்கை அங்கிட்டு இங்கிட்டு போகாமே முட்டைகள் மேலேயே உட்கார்ந்திருக்கும். அப்போ பெண் காக்கைக்குச் சாப்பாடு? அதுக்கும் உதவியாளர்கள் ஓடோடி வந்துடுவாங்க. ஒவ்வொரு நாளும் நாலைந்து தடவையாவது தேடித் தேடி உணவு சேகரித்துக் கொண்டு வந்து தருவாங்க.

வாசகர்கள் கவனத்திற்கு

நமது செட்டிநாடு இதழின் டிஜிட்டல் பிரதி தற்போது பல்வேறு அமைப்புகளுக்கு வாட்ஸ் அப் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. இதனை விரிவு படுத்த திட்டமிட்டு, டிஜிட்டல் இதழை தனிப்பட்ட நபர்களுக்கும் அனுப்புவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்காக தனி வாட்ஸ் அப் குழு அமைக்கப்பட உள்ளது. இந்தக் குழுவில் இடம்பெற்று நமது செட்டிநாடு இதழை டிஜிட்டல் பிரதியாக வேண்டுவோர் தங்கள் கைபேசி எண், பெயர் மற்றும் விலாசத்தை கீழ்க்கண்ட படிவத்தில் பூர்த்தி செய்து நமது செட்டிநாடு, ராணி சீதை அரங்கம், 3-வது தளம், 603, அண்ணா சாலை, சென்னை - 600 006 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும் அல்லது 99622 43750 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மூலம் தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள தங்கள் உறவினர்களின் கைபேசி எண், பெயர் மற்றும் விலாசத்தையும் அனுப்பிவைத்தால் அவர்களுக்கும் நமது செட்டிநாடு இதழின் டிஜிட்டல் பிரதி அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறோம். இது முற்றிலும் இலவச சேவை ஆகும். தங்கள் ஒத்துழைப்பை நல்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நமது செட்டிநாடு டிஜிட்டல் பிரதி விண்ணப்ப படிவம்

வாட்ஸ் அப் எண் _____

பெயர் _____

கோவில் _____ பிரிவு _____

விலாசம் _____

_____

Email _____

பிள்ளைப்பேறு:

அவங்க மனம்போல சுகப் பிரசவம் ஆகிக் குஞ்சுகள் பொரித்ததும், அந்த உதவியாளர்கள் கூட்டம் கூட்டமாக குஞ்சுகளைப் பார்த்து ரசிப்பதற்கு வருவாங்க, அவர்கள் வருகிற நேரமெல்லாம் பெண் காக்கை குஞ்சுகளை விட்டு விலகி உட்கார்ந்துக்கும், வந்திருக்கிறவங்க குஞ்சுகளைத் தெளிவாப் பார்க்கிறதுக்காக.

குழந்தை வளர்ப்பு:

இப்போ உதவியாளர்களோட கடமை இரண்டு மடங்காயிடுது. குஞ்சுகளுக்கு நேரம் தவறாமே தொடர்ச்சியாக உணவு கொடுக்கணும். ஒரு மணி நேரத்தில் தொடர்ந்து 20 முறையாவது உதவியாளர்கள் சளைக்காமல் குஞ்சுகளுக்கு உணவு கொண்டு வருவாங்க. இப்படி குறைந்தது 2 வார காலத்துக்கு நடக்கும். ஆச்சரியமா இருக்குதில்லே? இதையெல்லாம் லாரென்ஸ் கில்ஹாம் என்கிற அமெரிக்காக்காரர் மாதக் கணக்கிலே உட்கார்ந்து கவனிச்சு எழுதி வெச்சிருக்காரு.

வளர்ந்த குஞ்சுகள் பிரிந்து போகாது:

அடுத்து எங்க இனத்திலே, வளர்ந்த குஞ்சுகள் இன்னொரு அதிசயத்தையும் நடத்திக் காட்டுறாங்க. பொதுவா, பறவை இனங்களிலே, குஞ்சுகள் இறக்கை முளைச்சு, உணவைத் தாங்களே தேடிக்க முடியும்கிற தெம்பு வந்ததும், கூட்டை விட்டுப் பறந்து போயிடும். ஆனால் எங்க இனத்திலே அப்படி இல்லே. அப்பா -அம்மாவுக்கு அடுத்தடுத்து பிறக்கிற குஞ்சுகளை வளர்க்க உதவி செஞ்சுக்கிட்டு உதவியாளர்களாக அப்பா - அம்மாவோடெயே தங்கிடுவாங்க. ஒரு கூட்டிலே 15 காக்காய்கள் இந்த மாதிரித் தங்கி இருந்ததைப் பறவை ஆய்வாளர் பார்த்து எழுதியிருக்காரு.

வளர்ந்த குஞ்சுகள் குறைந்தது 2 வருடங்களுக்காவது தனக்கு என்று இணை தேடிக்கிறதில்லே. ஆறு வருட காலத்துக்காவது அப்பா - அம்மாவை விட்டுப் பிரிஞ்சு போகாமல் ஒரே கூட்டிலே தங்கி இருந்த காக்கைகளும் இருந்திருக்கு.

பாரம்பரியப் பெருமை:

வளர்ந்த பிறகு தனக்கு என்று இணை தேடிக்கிட்டுக் கூடு கட்டிக் குடும்பம் நடத்துற ஆசை அதுங்களுக்கும் இருக்கத்தான் செய்யும். ஆனாலும் தான் பிறந்த குடும்பத்தோடு நீண்ட நாள் தங்கி இருந்து பாசத்தையும், உதவி செய்கிற மனப்பான்மையையும் வளர்த்துக்கிட்டு, அப்புறமா, தனக்குண்ணு குடும்பம் அமைச்சுக்கப் போறாங்க. அதனாலேதான் அவங்களாலே பாரம் பரியத்தைக் கட்டிக் காக்க முடியுதுன்னு சொல்றாங்க. ♦

"குறளில் மேலாண்மை"

சோம வீரப்பன்



சோமம வீரப்பன் எழுதிய தி ஆர்ட் ஆஃப் ஜாகிங் வித் யுவர் பாஸ் (The art of jogging with your boss) எனும் ஆங்கில நூலின் வெளியீட்டு விழா ஏப்ரல் 4, வியாழன், மாலை நடைபெற்றது. பெல் நிறுவனத்தின் மனமகிழ் மன்றத்தில் நடைபெற்ற விழாவில் அந்நிறுவனத்தின் பொது மேலாளர் கமலக்கண்ணன் நூலை வெளியிட்டு, திருக்குறளில் உள்ள மேலாண்மை நுணுக்கங்கள் இன்றும் நமக்கு வழிகாட்டுவதாகக் கூறினார். நூலைப் பெற்றுக் கொண்ட பாரதிதாசன் மேலாண்மை நிறுவனத்தின் உதவிப் பேராசிரியை முனைவர் மஃப்ரூஜா சுல்தானா, இந்நூலை அவர்களது இயக்குநர் முனைவர் பர்மா வங்காள மொழியில் மொழிபெயர்க்க விருப்பம் தெரிவித்துள்ளதாகக் கூறினார். நூலாசிரியர் 'குறள் இனிது' சோம வீரப்பன் திருக்குறளில் ஐம்பது சதவீதத்திற்கு மேல் பொருட்பாலில் உள்ளவை என்று சுட்டிக் காட்டினார். இந்நூல் விரைவில் ஹிந்தி, பஞ்சாபி, ஒரியா மொழிகளில் வெளிவர இருப்பதாகவும் கூறினார். மேல்நாட்டு மேலாண்மை வல்லுநர்களையே கொண்டாடும் நாம், நமது வள்ளுவர் உலகின் மூத்த மேலாண்மை குரு என்பதை மறந்து விடுகிறோம் என்றார். திருக்குறளை மேலாண்மைப் பாடத்திட்டத்தில் சேர்த்தால் மாணவர்கள் பெரும் பயனடைவார்கள் என்பதால் அதற்கான முயற்சிகளில் தான் ஈடுபட்டுள்ளதாகக் கூறினார். வாழ்த்துரை வழங்கிய சாஸ்திரா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் முதன்மையர் பத்ரிநாத் நூலாசிரியரின் மேற்கோள்களையும் எளிய நடையையும் வெகுவாகப் பாராட்டினார். வரவேற்புரை நிகழ்த்திய ராமநாதன். இந்நூல் நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளைக் கொண்டே குறட்பாக்களை விளக்குவதாகக் கூறினார். விழாவில் ஹரிஹர் அலாய்ஸ் நிறுவனத்தின் திருநாவுக்கரசு, ஹைடெக் நிறுவனத்தின் முத்தையா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இந்நூலின் 150 பிரதிகளுக்கு முன்பதிவு செய்திருந்த கவின்கேர் நிறுவனத்தின் சார்பாக அதன் விற்பனை அதிகாரி பிரபாகர் நூலைப் பெற்றுக் கொண்டார். விழாவில் கரூர் திருவள்ளுவர் கல்லூரியின் செங்குட்டுவன், பெல் நிறுவனத்தின் பொது மேலாளர் மகேந்திரன், நூல் குடில் பதிப்பகத்தின் மெய்யப்பன், பஞ்சாப் நேஷனல் வங்கியின் மைக்கேல் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மருள் & பிற கதைகள்

பிரபாகரன் சண்முகநாதன்

நாட்டரசன் கோட்டை பிரபாகரன் சண்முகநாதன் எழுதிய மருள் & பிற கதைகள் என்னும் 10 சிறுகதைகள் கொண்ட தொகுப்பு நூல் அறிமுக விழா 28-04-24 அன்று சென்னை வேளச்சேரியில் சரவணன் சந்திரன் தலைமையில் நடைபெற்றது. நூலை தென்றல் சிவக்குமார், ஸ்ரீதேவி அரியநாச்சி, விக்னேஷ் ஹரிஹகரன் அறிமுகம் செய்து உரையாற்றினர். சிறுகதைகள் எழுதும் எழுத்தாளர்கள் அருகி வரும் நிலையில் ஆற்றொழுக்கான நடையில் தனது சிறுகதைகளைப் படைத்துள்ள இளைஞர் பிரபாகரன் சண்முகநாதன் பாராட்டுக்குரியவர். பிரபாகரன் சண்முகநாதன், விகடன் மாணவ பத்திரிக்கையாளராக பணியாற்றியவர். கவிதைகள் புனைவதில் வல்லவர் கவிஞர் வைரமுத்துவால் சிறந்த இளம் கவிஞர் எனப் பாராட்டப்பெற்று ரூ. 1 லட்சம் பணமுடிப்பு பெற்றவர். இவரது நூலில் விமர்சன நோக்கு வெளிப்படும் கதையாக மருள் கதையைக் கூறலாம். அதில் அவரது கதாபாத்திர அறிமுகமும் கதையில் விட்டிருக்கும் வாசக இடைவெளியும் தேர்ந்த எழுத்தாளருக்கு உரியவை. யாதுமானவள், கடைசிநாள், இழப்பு ஆகிய கதைகளின் மாந்தர்கள் வாயிலாக சூழ்நிலைக் கைதிகளின் சித்திரத்தை இயல்பாக கட்டமைத்து எழுப்புகிறார். அ-சரீரி கதையையும் பின்மதிய நேரத்துச் சூரியனின் காதல் நாடகம் கதையினையும் இந்தத் தொகுப்பின் முத்திரைக் கதைகளாகச் சொல்லலாம்.



வெளியீடு: யாவரும் பப்ளிஷர்ஸ், சென்னை. 9042461472

நமது செட்டிநாடு சந்தா படிவம்

நமது செட்டிநாடு

திரு/திருமதி.....

முகவரி.....

.....

கோவில்.....பிரிவு.....சொந்த ஊர்.....

கைபேசி..... தொலைபேசி..... ▸▸ இமெயில் .....

▸▸ புதிய சந்தா ☐ / சந்தா புதுப்பித்தல் ☐ / Ref No.....

செலுத்திய சந்தா ரூபாய் ஓராண்டு 300/- இரண்டு ஆண்டு 500/- ஐந்து ஆண்டு 1250/-

☐ மணியார்டர் ☐ காசோலை ☐ RTGS ☐ GOOGLE PAY மூலம் செலுத்தி விவரம் தெரிவிக்கவும்.

வங்கி...../ எண்...../ நாள்.....

அனுப்ப வேண்டிய முகவரி: "நமது செட்டிநாடு" (மாத இதழ்), ராணி சீதை அரங்கம், 3வது தளம், 603, அண்ணா சாலை, சென்னை 600 006. தொ.பே.எண்: 04442951888

வெளிநாடு சந்தா விவரம்: சிங்கப்பூர், மலேசியா ஆண்டிற்கு SG $ 40/ பிற நாடுகள் ஆண்டிற்கு US $50/

Cheque to be drawn in favour of

Chettinad Print Media P Ltd,
A/C No: 6412480441
Indian Bank, Thousand Lights Branch,
Chennai - 600 006. IFSC : IDIB000T020,

Or

Chettinad Print Media P Ltd.
A/C No:57500000199320
HDFC Bank, R.K.Salai Branch,
Chennai - 600 004, IFSC : HDFC0001097

PROVEN PRODUCTS.
POWERFUL EXPERTISE.

ESAB

ESAB's innovative solutions and knowhow in Repair & Reclamation technology with proven products and powerful expertise helps to restore vulnerable components to keep you up & running.

RECLAMATION CONSUMABLES

- Manual Metal Arc Welding - Joining, Buildup & Hard facing Alloys
- Gas Brazing Alloys - Bare and flux coated range
- GMAW, FCAW, OA & SAW range - Joining, Buildup & Hard facing wires
- Hot Metal Spray & PTA Powders - Buildup and cladding
- GTAW Fillers - Joining & Cladding applications.

ESAB SERVICES

ESAB serves customers with ready to fit wear resistance plates and job works reconditioning services.

- Weld Cladded Plates and Components
- Casted Components
- Ceramic Tiles & Components
- Insitu / Workshop Reconditioning
- Protective Coatings

ESAB Authorized Dealer

Ranush Engineering Company
Salem

Hindustan Trade Centre
Secunderabad

Janardhan Welding Products
Jaggayyapet

Registered and Head Office:
ESAB INDIA LIMITED

13, 3rd Main Road, Industrial Estate,
Ambattur, Chennai - 600 058.
Tel: +91(0) 44 4228 1100 | Email: info@esab.co.in

esab.com

Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan

GEMSCAB®
CABLES
THE RIGHT CONNECTION

Core Dependability & Consistency

PRODUCT RANGE

- HT-XLPE CABLE – upto 66KV
- LT-XLPE/PVC – Armoured/Unarmoured – **Power Cables** Single Core upto 1000Sq.mm & Multicore upto 630Sq.mm (1.1KV & 3.3KV)
- XLPE/PVC – Armoured/Unarmoured – **Control Cables** upto 61Core 1.5/2.5Sq.mm
- Core, Paired, Triads – Individual and Overall Screened **Instrumentation Cables**
- Single Core and Multicore **Flexible Cables & Wires**
- Special Application Cables viz. **FR, FRLS & HR PVC**

ISO 9001 : 2015 & ISO 14001 : 2015 & OHSAS 18001 : 2007 CERTIFIED COMPANY

GEMSCAB INDUSTRIES LTD.

Marketing Office

704-707, 7th Floor, Vikrant Tower, 4, Rajendra Place, New Delhi-110 008
Phone : +91-11-42151572 • Fax : +91-11-45136501 • E-mail : gemscab@vsnl.com

Branch Offices

Mumbai : 519, Laxmi Plaza, Laxmi Industrial Estate, Andheri West. Mobile : +91 9223170503, 9223170504
Chennai : 13, 1st Floor, Gee Gee Shroff Centre, Poonamalle High Road. Mobile : +91 9282349620
Hyderabad : 5-2-174/2/7 Rashtrapathi Road, Opp. C.H. Yagnaiah Petrol Pump. Mobile : +91 9246569590
Kolkata : 29, Ganesh Chandra Avenue, 5th Floor, Kolkata - 700013. Mobile +91 9231003568

Resident Offices

Chandigarh, Jaipur, Jodhpur, Dehradun, Coimbatore, Nagpur, Bhubneswar, Pune

Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2022-2024
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2022-2024 and published on first week of every month.
Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 May - 2024

Chettinad
Hospital & Research
Institute

Won Award in
CII TN's MedClave Center of
EXCELLENCE
HONOURS '22
for the Speciality
DIAGNOSTIC CENTER - LABORATORY

CII
Confederation of
Indian Industry

www.care.edu.in